உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

முப்பத்திரண்டாந்தொகுதி.

Vol. XXXII.

பவ—யுவ ௵

1934—1935

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

முப்பத்திரண்டாந்தொகுதியுள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
உலா:—	ஸ்ரீமத். ரெ. அப்புவையங்கார்	௨௯௩
எண்பத்தொன்றும் பிறந்தநாள்:—	,, ஊ. சா. வேங்கடராமையர்	௧௩0
ஒரு திருத்தம்:—	பத்திராசிரியர்.	௧௬0
ஒல்லையூர்:—	ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர்.	௫௧
கம்பராமாயண இன்கவித்திரட்டு:-	,, ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார். ௯, ௫௬, ௭௩, ௧௧௩, ௧௩௭, ௧௬௧, ௧௯௫, ௨௫௩, ௨௯௧, ௩௧௧, ௩௨௫.	
கால்டுவெல் ஆசிரியரும் வேற்றுமையும்:—	ஸ்ரீமத். R. நரசிம்ஹன் B.A. (Hons.)	௩0௭
காலம்:-	,, வித்வான் K. S. விசுவநாத சாஸ்திரி. P.O.L. ௪௫, ௧௪௫, ௧௯௯.	
குடஞ்சுட்டு:—	,, நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர்	௧௯
சாத்தனார்கோயில்கள்:—	,, வை. சுந்தரேசவாண்டையார்	௧௬௫
சித்தசுத்தி:-	,, V. S. ராமஸ்வாமிசாஸ்திரியார் B A, B L. ௪௧, ௭௭	
தண்ணீரும் எண்ணெயும்:-	,, நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர்	௮௧
நியாயப்பிரவேச மணிமேகலை:—	திரு. நாராயணையங்கார், பத்திராசிரியர். ௫, ௫௭, ௮௯, ௧௫௨, ௧௮௧, ௨0௫, ௨௨௯, ௩௩௩.	
பரிசோதனத்தொடர்:—	ஸ்ரீமத். T. N. அப்பணையங்கார் ௧, ௩௩, ௯௫, ௯௭, ௧௩௩, ௧௯௯, ௨௧௯.	
பாண்டியர்வரலாறு:-	,, T. V. சதாசிவபண்டாரத்தார் ௨௪௧, ௨௭௭, ௩௧௭, ௩௩௯.	
பாராட்டு:—	,, கே. ஜி. சேஷையர் B.A., B L.	௧௮0
பிழையும் திருத்தமும்		௩௫௧
புறநானூற்றுக் கடவுள்வாழ்த்தின் கருத்தமைதி:—	,, ஜெ. நாராயணசுந்தரம் ஐயங்கார்	௧0௩
பெருவாயில்:—	,, சோமசுந்தரதேசிகர்.	௫௩
மதிப்புரை:—	௫௪, ௮௭, ௧௧௯, ௧௫௧, ௨0௩, ௨௨௭, ௨௫௮.	

மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத் தீர்மானங்கள்:— ௨ ௫௬

மஹாமஹோபாத்தியாய ஐயரவர்களின் ஸதாபிஷேகக் கொண்டாட்டநிகழ்ச்சியும் வாழ்த்தும் முதலியன:— T. K. இராமாநுஜையங்கார், பண்டித ஸ்ரீமத். சு. ஹரிஹரையர், ஸ்ரீமத். K. S. நவநீதகிருஷ்ணபாரதி, ஸ்ரீமத். தொ. ரா. பத்மநாபையர், ௧௨௧—௧௨௭, ௧௭௬.

அநுபந்தம்.

I. விஷயங்கள்.

ஆங்கிலகலாசாலைத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— (பகுதி ௧௧, பக். 1—8)

தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— (பகுதி ௧௧. பக். 1-2)

மதுரைத்தமிழ்ச்சங்க வரவு செலவு கணக்கு:— (பகுதி ௯, ௧௦, ௧௨)

மஹாமஹோபாத்யாய ஐயாவர்களின் 80—ஆம் ஆண்டுநிறைவுவிழா அறிக்கையும், பத்திராசிரியர் குறிப்பும்:— (பகுதி—௪)

வெள்ளிவிழாக்கொண்டாட்டம்:— ராஜவிசுவாசம்:— மங்களவாழ்த்து:— T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். (பகுதி ௭-ல். பக். I—VII)

கமலபந்தவாழ்த்துக்கவி:—ஸ்ரீ. அநந்தகிருஷ்ணையங்கார் பக். VIII

ஆசவாழ்த்து:—ஸ்ரீ. ஊ. சா. வேங்கடராமையர் பக். VIII

II. நூல்கள்.

[முற்றுப்பெற்றது.]

கலைசைக்கோவை:— (குறிப்புரையுடன்) ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர். (பகுதி ௧—௪, ௬—௮.)

[முற்றுப்பெறாதவை.]

குருநுகைமாண்மியம்:— T. K. இராமாநுஜையங்கார், உதவிப் பத்திராசிரியர். (பகுதி ௧, ௪, ௫, ௬, ௭.)

சிராமலைக்கோவை:— (குறிப்புரையுடன்) ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர். (பகுதி ௯—௧௨.)

பெருந்தொகை:—ஸ்ரீமத். மு. இராகவையங்கார் (பகுதி ௧—௩, ௫—௧௨.)

தேவர்க்குத் தூதுசென்ற பாண்டியன்
தேவாகண்டன் 1592 [892
தேவன் - பால்வண்ணதேவன் 1535
தேவன்குடி 1047
தேவாசிரயன் என்னும் காவணம்1953
தேவாசுரம் 896
தேவாரம் 363
தேவாரமோதுமண்டபம் 1072
தேவியூடலிற் கூத்தர் பாடியது 1479
தேவூர்ச் சிவபிரான் பக். 21
தேவூர்வேள் பக். 525
தேவேந்திரன் 1314
தேவேந்திரதாரு 1286 [தல் 895
தேவேந்திரனுடன் பாண்டியனிருத்
தேவை 1287, 1793;—அந்தாதி1664
கெயாகரன் 1663;—காவலன் பக்.
594;—சேதுபதி 1284
தேனூர்கிழார் 1384
தைப்பூசம் 895
தையணற்புரவி 1426
தொகைநிலை 500 [2014
தொகையின்னெடியது - அகநானூறு
தொட்டிக்கலைச் சுப்பிரமணியமுனிவர்
1974
தொடுதல் - பறைகொட்டுதல் 731
தொடையாடைகீறியவன் 1228 பக்.
தொண்டரடிப்பொடி 1828 [604
தொண்டி பக். 341
தொண்டைகாவலன் 1218
தொண்டைநாட்டார் பொய்யுரையா
மை 1150
தொண்டைநாடு 1317, 1743, 1775,
1976;-சிறப்பு 2103;-எல்லை 2102
சான்றோருடைமை 2103
தொண்டைமண்டலசதகம் 1726—7;
பக். 20, 21
தொண்டைமண்டலத்தார் 1726
தொண்டைமாலை பல்லவர்க்கு 970
தொண்டைமான் 1057, 1252
தொண்டைமான்கச்சி 1805
தொண்டைமான் சேக்கிழையார் சாஸ
னம் 1897, பக். 468
தொண்டைமான்சேனுபதி 187
தொண்டைமானிளந்திரையன் 978
தொண்டையம்பதி 1651 [1117
தொண்டையர்கோன் 1102, 1112,
தொண்டையரசு 1183
தொண்டையார்கோ980--1;—கோன்
தொண்டையான் 1215 [1112
தொண்டைவளநாடு 2130
தொந்தயோகவினை 2150
தொல்காப்பியம் 1224, 1384, 1555,
1716, 1722, 1781;—எழுத்ததி
கார இயல்வைப்பு 1990;—சூத்
திரத்தொகை 1991;—சொல்லதி
கார இயல்வைப்பு 1991,—சூத்
திரத்தொகை1993—4;—பொருள
திகார இயல்வைப்பு 1095;—சூ
த்திரத்தொகை 1996;—பாயிரம்
தொல்காப்பியக்கடல் 1716 [1989
தொல்காப்பியமுனி 1919
தொல்காப்பியர் 1384, 1387, 1388,
1562—4, 1989
தொல்போராசான் 1552
தொல்லெயிற்கிவர்தல் 487
தொலைதல் - தோற்றல் 370
தொழிலி 1037
தொழுமகன் 268
தொறுவியர் 1278
தொன்மிகுபெருமரம் 1825
தொன்றுமூதிர்கடல் 15
தொன்னூற்பாவை 1530
தோகை 1639
தோட்டகடைஞர் 695
தோடுவார்காது 1566
தோணிபுரத்தோன்றல் 1873
தோணோக்கம் 2039
தோம் 169, 316
தோலாச்செவியான் - உருத்திரசன்மர்
தோலாநாவின்மேலோர் 369 [2014
தோலாமொழி 2027
தோலின்பெருக்கம் 481
தோள்கொட்டுதல் 468
தோள்வலிபோமிடம் 409
தோளழுவம் 634
தோளாச்செவி 1384
தோளாமணி 2026
தோளும்வாளுந்துணையாதல் 798
தோளேதுணையாதல் 897, 906
தோற்பை மூலைக்குவமை 1613
தோற்றநிலையிறுதிகட்டுவீடு 1536
தோன்றாத்துணை 1566

நக்கன் 1058
நக்கீரதேவர் 1802
நக்கீரர் 1384, 1395—9;—தொழில் 1397
நக்குதல் - விளங்குதல் 1392
நகர் பக். 2110—12
நகர்ச்சிறப்பு 2165
நகரம் சிறையில்லாதது வீண் 243
நகரி - முருகன் 104
நகுலன் 1364
நகைபடுபுன்சொல் 1549
நங்கையிருகண்மணி 1823
நச்சர் 1538
நச்சினார்க்கினியம் 1719
நச்சினார்க்கினியர் 1551—5
நச்சினார்க்கினியனையன் 1555
நச்சுக்குழல் 818, 1222
நச்சுவார்க்கினியர் பக். 629
நச்செள்ளையார் 1384
நஞ்சிருத்தல் 1593
நட்டபெருமான் 1072
நட்டாருட்பேறு 1809
நட்டோர் 1298
நடவை - நடந்துசெல்கை 31
நடாய் 890
நடுகல் 729—40, 1177;—வாழ்த்து 740
நடுகல் ஆடிய நீரில் யாவருந் தீர்த்தமாடல் 735
நடுகல்லானவனை வீரனொருவன் கண்டு நிகழ்த்திய செயல் 701
நடுகல்லிற் பெயர்முதலியன பொறித்தல் 736—7
நடுகற்காட்சி 730—1
நடுகற்குச் சிறப்புப்படைத்தல் 738-9
நடுநாட்டுச்சிவதலம் 86
நடுவட்சங்கம் - இடைச்சங்கம் 1384
நடைப்பரியாயிரங்கொடுத்தவன் 1382
நடைப்பழக்கம் 275
நண்டளந்த நாழியாய்க்கிடத்தல் 1362
நண்டுகெட்டுதல் 262
நதிகுலதிலகன் 1791
நதிவங்கிசம் 1230
நந்தமண்டலம் 1336, 1356
நந்தவானம் 1047
நந்தி 166, 973—7, 1015
நந்திகை 1042
நந்திநாயகன் 977
நந்திபுரிமன்னன் 188
நந்திமாமலை 974
நந்திமால்வரைச்சிலம்பன் 166
நந்தியர்கோன் 1778
நந்திவெற்பன் 1228
நப்பின்னை 31
நம்பிகாளி 1149, 1704, 1769 பக். 599, 638
நம்பிமார் 1610, 1762
நம்பியகப்பொருள் 2037
நம்பியப்பி 1982
நம்பிள்ளை 1847
நம்பூர்வரதர் 1847
நம்மை - உம்மை 966; பக். 591—2
நமகுறை 615
நமச்சிவாயக்கவிராயர் 1745—7
நமச்சிவாயப்புலவர் 1278, 1309—11, 1744
நயதீரன் 1034
நயமுதலிய அளவை 167
நயனதீக்கை 1929
நயினார்கோயில்(மருதூர்) 1771
நரபதி 1047; விசயநகரவேந்தர் 1353
நரம்புமடித்தியாத்தயாக்கை 302
நரலோகவீரன் 1065, 1114
நரவாகனம் 1731
நரி அலவன்வளைவாயிலில் வால்நீட்டல் 1000
நரிகதித்தல் 512
நரைத்தூது 305
நரைமூதாட்டி 703
நரையான்வலத்தேவருதல் நற்சகுனம் 1357
நரையுருமேறு 111
நல்குரவு 266—79
நல்லகவிராயர் 1780
நல்லதம்பிச்சர்க்கரை 1337
நல்லதமிழ் 2099
நல்லதுந் தீயதும் மக்கட்குண்மை 301
நல்லந்துவனார் 1384, 2012
நல்லநயினான் 1907
நல்லபடாபறை 772
நல்லப்பர் 2099
நல்லயன் 1782
நல்லவை 369, 407
நல்லவையார் 267
நல்லறிவுடையதொல்பேராசான் 1552
நல்லாசிரியரியல்பு 1530
நல்லான்சக்கரவர்த்தி 1767
நல்லிசைவஞ்சி 491—5
நல்லியக்கோடன் 989—90

நல்லூர் 1122
நல்லூர்ப்புராணம் 1719, 1944
நல்லூர்ப் புளியங்காய்ப் பெருஞ்சேந்தர்
நல்லூர்வீரை 1661 [1384
நல்லூரன் வில்லவராயன் 1370
நல்லை—நல்லூர் 1211
நலங்கிள்ளி 636
நலஞ்சேட்சென்னி 617
நவகண்டம் 1270, 1691
நவகோணம் 1746
நள்ளாறர் 1730
நள்ளாறு 89
நள்ளி 1401
நளினத்தி 1600
நளினம் 1732
நளினவிழிப்பெருமான் 697
நற்காட்சிமுதலியமூன்று 167
நற்கொற்றன் 889
நற்சிங்கன் 899
நற்பொருள்மூன்று 1691
நற்றிணை 1384
நறவின்சாடி 449
நறுங்குன்றை ஞானமூர்த்தி 2078
நறையாற்றுப்போர் 873, 884
நன்காடு 713
நன்மாணாக்கரியல்பு 1530
நன்றறிபுலவர்நாப்பண்வென்றி 125
நன்றிமறவாமை 290
நன்னன் 987
நன்னாகர் 1384
நன்னாளால் 102, 1083
நன்னி நுளம்பன் 784
நன்னூல் 1249, 1537, 1719, 2032
பக். 8;— எழுத்ததிகாரம் கூறும் பொருள்கள் 2033;—ஸூத்திரத் தொகை 2034;—சொல்லதிகாரம் கூறும்பொருள் 2035;—ஸூத்திரத்தொகை 2036;—விருத்தி 17
நன்னூல்முதலிய சின்னூல் 1719
நன்னூற்சுவடி 1641
நன்னெறி 1944
நாக்கடைகவ்வுதல் போரில் 532
நாக்கு வெல்லற்குரியது 247
நாககுலம் 1252
நாகப்பாய்சுருட்டியது 1815
நாகபட்டினத்துச்செட்டி 1240
நாகபந்தம் 1793
நாகமலை 1346
நாகர் 188
நாகர்குலத்துக்குப் புத்தர் அமிழ்தம்
நாகர்நாடு 461 [வழங்கியது 188
நாகரகாண்டம் 1953
நாகரசநம்பி 1646
நாகரிகநாட்டம் 2072
நாகரிகன் 1732, 1776
நாகலாபுரம் பக். 606
நாகேசர் 1762
நாகை 89, 2117—8;
நாகைக் காத்தான் சத்திரம் 1619
நாங்கூர்ச்சேந்தன் 1022
நாங்கை 891
நாட்கோன் 476
நாட்டரசன்கோட்டை 1503;—நாடு
நாட்டியத்தான்குடி 1229 [2149
நாட்டியல்வழக்கம் நான்மை 1997
நாட்டிற் காவலற்ற கதவு உவமை 696
நாட்டுக்குறும்பு 889
நாடகசாலை 1605
நாடகநவிற்றுதல் 1564
நாடகப்புலவன் 362
நாடகம் 1793
நாடத்துக் குயக்கொண்டான் பக். 321
நாண்டல் 314
நாண்மங்கலம் 567, 959, 1161
நாணிக்கண்புதைத்தல் 1351, பக். 613
நாணிற்றல், 'நாணிற்பன்' 628
நாமகள் — பளிங்குபோலுருவுடைமை 117;—வெள்ளைக்கலை பணிகளுடைமை 121;—கையில் தரிப்பவை 118; பக். 29
நாமடந்தை 1522
நாமணைக்கோணை 782
நாமன் 1544
நாமான் 1178
நாய்கள் படையாளர்க் குவமை 503
நாய்வாலை நிமிர்க்கமுடியாமை 259
நாயகம் 1611
நாயகமணி 122
நாயகர்க்கு நாய்கள் உதவுகை 503
நாரணன் 783
நாராயணன் வேம்பையர்கோன் 1567-
நாரைவிடுதூது 629 [8

நால்வகைப் பொருள் 186;—தேவர் 140;—அனந்தம் 140;—அளவை 139;—யோனி 139;—சைனவருணப்பாகுபாடு 140
நால்வர் அவதாரம் 1873
நால்வரொன்றொழிய வணிகர் 1433
நால்வாய் 1334
நாலடி 2017;—நானூறு 1561, 2019—23;—நூல்தொகுத்தவர் 2022;-மேற்கோள் 1666;—அரும்பதவுரைகாரர் 2023;—உரையாசிரியர் 1561
நாலடியார் 2018—21
நாலாயிரக்கோவை 1471
நாலு—நாலடி 1128
நாலுகோடிகவி ஔவைபாடியது 415
நாலூர்ப்பெயர் சுவாமியம்மைபெயர்கள் வரப் பாடிய செய்யுள் 1659
நாவடக்கம் 245—50
நாவலர்களிறுபெற்றூர்தல் 569
நாவலருடன் பங்குபேசிப் பிரபந்தம் பாடுதல் 363
நாவலோவெனல் 1460, 2094
நாவலொடுபெயரிய ஞாலம் 46
நாவற்பதி 892
நாவா விலைழநக்கி நூல்நெருடல் 1392
நாவீறன் 1689, 1822
நாழிகைக்கணக்கர் பக் 562
நாழிகைக்கவிசொல்வோர் 566
நாள்கோள்களின் ஞாட்பு 761
நாளும் புள்ளுங் கேளாவூக்கம் 423
நாறகடல் 452, 801, 892
நாற்கதி 140, 169, 175, 178, 234, 323, 338
நாற்கவி 1047
நாற்கவிச்சிங்கம் 1703
நாற்கவிராசநம்பி 1562
நாற்பத்தொன்பதின்மர் சங்கத்தார் 1692, 1711
நாற்பதிகந்தால் நரைத்தூது வருதல்
நாற்பெயர் 1552 [305
நாற்பெரும்படை 140
நாற்பொருள் 1819;-பொதிந்த யாப்பு
நாறையான் 1382 [1552
நான்காஞ்சங்கம் 1583
நான்காரைச்சக்கரம் பக். 529
நான்குமாத்திரைபெற்ற அளபெடை
நான்மடி 816 [பக். 593
நான்மணி 2017
நான்மறை 3;- (சைனம்) பக். 530
நான்மறையாளன் - அருகன் 140
நான்மாடக்கூடல் 1805, 2104
நான்முகம் அருகற்குண்மை 139—40
நான்முகன் - அருகன் 132
நான்மை 170
நாஞற்பது 2017
நிகண்டன் - நிர்க்கந்தன் 2054
நிகண்டுசூளாமணி 2081
நிகர்போர் 867, 889, 892
நிகர்கடத்தல் 892
நிகர்மலைதல் 867
நிகாழித்தல் 889
நிகரிலிசோழமண்டலம் 1122
நிகளங்காய்கரி 816
நிகளம் 1484
நிகும்பன் 1321
நிட்ரேம் 411
நிட்ரோர் 817
நித்தம் 301
நித்தல் 1115
நித்திலக்கோவை 1535
நித்திலத்தன்னவெண்மணல் 1825
நிதிக்கிழவன் 1391
நிதிப்பிறங்கல் 140
நிதியிருவகை 279
நிதியின்கிழவன் 1384
நிம்பை 910, 1653;—நகரம் 1652
நிமித்தகாரணன் - கடவுள் 1536
நியமச்சிலேடை 561—2, 819
நிரஞ்சனநாதர் 1679
நிரத்தல் - ஒருசேரவாதல் 'நிரந்தல
நிரதம் 403 [ர்ந்து' 158
நிரம்பவழகியதேசிகர் 903—5;—பாட்டு 2060
நிரம்பையர்காவலன் 1557
நிரீச்சுரன் 2054
நிருதி 1238
நிருபேந்திரசோழன் 784
நிரைக்கொடை 448
நிரைகவர்தல் 970
நிரைகோடற்குப் பரவுக்கடன் 425
நிரைமீட்சி 441—2

நிரைமீட்டோர்வரவு 444—6
நிரோட்டம் 1793; பக். 524
நில்லாமை நித்தநிலை 301
நிலந்தருதிருவிற்பாண்டியன் 1989
நிலமாமகள்முகம் காஞ்சி 2132
நிலவோரன்னவெண்மணல் 2170
நிலா 1143, 2184
நிலாவினான் 1218—9
நிலையாமை 294—301
நிலைவெளிவிருத்தம் பக். 26
நிவந்தம் 1047
நிவாதகவசர் 751
நிழல் 15
நிழல்சீறுதல் மதக்களிற்றினியல்பு
நிழற்றுதல் 158 [1011
நிழறுழாயானை 564
நிழனாறுதல் - ஒளிதோன்றுதல் 98
நிற்றந்து 760
நின்மலானந்தம் 1964
நின்றாடுவான் 1145
நின்றீயின் 557
நின்றைக் காளத்திவாணன் 1157
நினைவுகவிசொல்லல் 363
நீடூர் 1218—9
நீடூர்ச்சாஸனம் 278—9
நீணிலங்கடந்தோன் 1549
நீதிநெறிவிளக்கம் 1947
நீர் இன்றியமையாமை 974
நீர்க்கிடை 1324
நீர்க்கீழ்த்தறியறியாது பாய்ந்தாடுதல்
நீர்ச்செறிபாசி உவமை 489 [378
நீர்த்துளி அளவின்மை 240
நீர்த்துறை 2180
நீர்நாடன் 528, 837
நீர்நாடு 632, 768, 847
நீர்நீந்துபாவை 711
நீர்ப்படை 734—5
நீர்மேலெழுந்த நெருப்பு 631
நீர்மோர் 1607
நீரகலம் - பூமி 15
நீராழி நிலம்படைத்தல் 125
நீரிற்பரந்துகெட்ட எண்ணெயை ஈட்டல் உவமை 384
நீரும் நிழலும் அருளுக்கு உவமை 607
நீரெதிர்கொண்டோடிய பாடல் 2020
நீரெதிர்வந்த வெண்பா 1560
நீரொழுகப்பாலொழுகாவாறு 659
நீரோட்டிக்கொடுத்தல் 889
நீலகங்கன் சிற்றம்பலவன் 1225
நீலகேசி பக். 3, 595
நீலச்சிற்றாடை 1404
நீலவலையிற்கயல்பிறழ்தல்உவமை 620
நீலி 1321;—பேய் 1461, பக். 622
நீறிட்டுப் பேய்க்கோளாறுநீக்கல் 263
நீறு—பொடி 1015
நுகத்துப் பகலாணி 349
நுங்கின் அடிக்கண் கறுத்து நுனிசிவத்
நுங்குக்கண் 1411 [தல் 1411
நுண்மயிர் அளவின்மை 240
நுண்வெயிற்றுகள் உவமை 747
நுதல் அசோகந்தளிரால் அலங்காரமா
நுதலிவர்கதுப்பு 112 [தல் 112
நுதற்பிறைமேலோர் மிகைப்பிறை உமைசூடியது 113
நுதிக்கைச்சங்கம் 1242
நுளம்பபாடி 780
நுளம்பன் 786
நூல்செய்தவரே அதற்குரையிடும் வழ
நூல்நெருடுதல் 1392 [க்கு 1718
நூல்வாங்குதல் 1522
நூற்சீலை நாலுதிங்களிற்கிழிதல் 1417
நூற்பாவை 1530
நூற்பா 2082
நூற்றுக்கான்மண்டபம் 1073, 1099
நூற்றுப்பத்தாயிரம் 1426
நூற்றுவைத்தல் 1991
நூற்றொருபேர் 1281
நெஞ்சம் ஏடெனக்கற்றல் 1678
நெஞ்சனுங்குதல் 580
நெஞ்சிலேயிட்டநெருப்பு 697
நெஞ்சு களிறுவளர் காடாக உருவகம்
நெஞ்சுரப்பு 1508 [90
நெஞ்சுலர்தல் 976
நெஞ்சுவிடு - நெஞ்சுவிடுதூது 2044
நெட்டூர் 1295—9; பக். 609
நெடியோனை முன்பயந்ததாய் துர்க்கை
நெடுங்களத்துப்போர் 880 [111
நெடுங்கேரளன் பக். 143;—தாய் 702
நெடுஞ்சடையன் 889—90
நெடுந்தொகை 1384, 1535
நெடுநல்வாடை 2008, 2090 [1665
நெடுமால் வேதியர்குலத்தவாதல்

நெடுமாறனெல்வேலிவென்றான் 868
நெடுமொழி 100;—கூறல் 720
நெடுவயல் 889
நெதி 1069, 1122
நெய்—வெண்ணெய் 219
நெய்கனிந்தனவறை 865
நெய்தற்பறை பக். 578
நெய்யிற்கைவிடுதல் 1279
நெய்யொடுதிரியொக்கச்சேர்தல் 106
நெய்யோடையவி மதிலில் அப்புதல் 1429
நெருநல் 294
நெருப்பாகி நீர்பயத்தல் 125
நெருப்பில் எரிந்தவர் 1617
நெருவூரிற் பட்டமரந் தழையப் பாடியது 1769
நெல் ஆயிரம் கப்பல்களிற் சடையன் கண்டிக்கு அனுப்பியது 1135
நெல்லிநகர் வரதராசர் 1673
நெல்லியிலையுதிர்தல் உவமை 376
நெல்லின் அவற்பதம் 1001
நெல்லை 1719
நெல்லைக்கோவை 1652
நெல்லைப்பதி 1721
நெல்லையப்பன்மைந்தர் 1792
நெல்லையிராமன் 1684
நெல்லைவருக்கக்கோவை 1660
நெல்விளைநாடு 897
நெல்வேலி 87;—சீவலமாறன் 964;—போர் 867—9, 892;—மாறன் 953;—வென்றான் 868
நெற்குன்றம் 1149
நெற்குன்றவாணமுதலியார் 1149, 1478, 2066
நெற்கொண்டுபோமளவும் நில்லாய்நெடுஞ்சுவரேயெனல் 1502
நெற்றி - மேலிடம் 98
நெற்றிக்கண்காணு மன்மதன் 1740
நெற்றியில் பட்டமும் திலதமும் வீரரணிதல் 426
நெறிக்கார் 77
நெறிக்காரைக்காடு 77
நெறியறிபுலவன் 1543
நென்மலி 2135
நென்மலித்தச்சனைக் கம்பர்பாடியது 1505
நென்முளைவாரியவன் 1228
நேசனைப்புகழுமிடம் 404
நேமி - பூமி 1228
நேமிநாதம் 2029, 2030
நேமிநாதர் பட்டோலைபிடிக்கக் கூத்தர்பாடியது 821
நேமிமால்வரை 294
நேர்நிறை நில்லாத அகவல் 416
நேரிசைப்பா - நாலடி 2020
நேரியர்கோன் 889
நேரியன் 220, 880, 1218
நைமித்திகம் 938
நோஅலையல் 1422
நொச்சி 419, 459, 490
நொச்சிமணிதுணர்ந்தன்னது 459
நொச்சிவகுத்து வீரர்க்குவழங்கல் 461
நொய்யலாறு பக். 612
நொவ்விது 2176
நோக்கன் 724
நோன்பிணி 303
நோன்பெடுத்தல் கற்பின்கேடு 241
பஃறொடைகள் 2062
பகட்டெழின்மார்பு 15
பகட்டேருடையோர் 397
பகர்ச்சி 1569
பகல்செய்வான் 987
பகலாணி 34
பகவதி 110
பகழிக்கூத்தர் 1665
பகற்பின் இரவு வந்தேதீர்தல் 296
பகிரண்டம் 1473
பகீரொணுஞ்சொல் 1333
பகுவிதம் 1047
பகையரசர்பெண்டிரை மூக்கறுத்தல் 783, 786
பகையரசரை யானைக்கிடல் 783
பகையிடமழிதல் 551
பகைவர் அம்பலஞ் சீத்தல், கை அவிழ்ந்ததுணியசைத்தல் 564;—மார்பில் அரசர் தங்குறி எழுதல் 1158, 1181—2, 1205
பகைவர்-ன் தோற்ற செயலைச் சித்திரத்தெழுதி வெளிப்படுத்துதல் 786
பகைவராய்க் கொன்றாரே பட்டவீரன் கேளிராய் ஆர்த்தல் 542
பங்களர் 783
பங்குபேசிப் பிரபந்தப்பாடுதல் 363
பங்குனித்திருநாள் 2120
பச்சென்றிருத்தல் 1874
பச்சைமிளகு 260

பச்சைவடம் 2201, பக். 521
பச்சோலை 1411
பசப்பித்தல் 1030
பசாசறைதல் 263
பசிநீக்கி (பெயர்) 1983
பசியாற் சுருக்குண்ணுதல் 1802
பசியும் உண்ணலும் மாறிவருதல் 296
பசுங்குழவிநடை 1975
பசுந்துழாய் 111
பசுப்போல்வார் - அறிவிலார் 257
பசும்பாகம் - சிவபிரான் திருமேனிப் [பகுதி 46
பசும்பூண்வேந்து 1430
பசுவூர் 1122
பஞ்சகல்யாணம் பக். 530
பஞ்சகாலக்கொடுமை 1306
பஞ்சகாவியம் 1259
பஞ்சகிருத்தியம் 1536
பஞ்சணை மகளிர்தோளுக்குவமை 112
பஞ்சநிவாணன் 1120, 1217
பஞ்சப்பள்ளி 782
பஞ்சபாணம் 217
பஞ்சம் 343, 401, 1135, 1259, 1440
பஞ்சரம் 29, 1222, 1472
பஞ்சலக்கணம் 1652
பஞ்சலட்சணம் 1555, 1652, 1763, [1790
பஞ்சலட்சணவிதாணி 362
பஞ்சவதிகாரம் 1465
பஞ்சவர்-ன் 491, 892, 2104
பஞ்சவரிற் பார்த்தன் 1635
பஞ்சவரைவர் 799
பஞ்சவனம் 2115
பஞ்சவிதி - பஞ்சலக்ஷணம் 1773
பஞ்சாகப் பாடல்பண்ணுதல் 1735
பஞ்சாச்சரியம் 173
பஞ்சாசாரியப்பகுதி 1047
பஞ்சிசேர்த்திய அத்தாணி 2079
பஞ்சு - பஞ்சாடை 364
பஞ்சுளியெனல் 1360
பஞ்சைகள் 1318
பட்டப்பகல்விளக்கு 1682
பட்டயமருளுதல் 957
பட்டவீரன் அடிப்பொடியைப் பகைவீரர்சூடல் 542
பட்டவேந்தனை அட்டவேந்தன் படையாளர் சூழ்ந்தாடல் 760
பட்டாபிடேகம் 923
பட்டாரைவிட்டார் 2124
பட்டிகை 1095, பக். 277
பட்டிதொட்டி (ஊர்ப்பெயர்கள்) 1516
பட்டிமண்டபத்தார் 1395
பட்டினத்தடிகள்பாட்டு 1022, 1879, 1880—1, பக். 446
பட்டினப்பாலை 2008, 2090
பட்டீச்சுரன் 2082
பட்டு - பட்டாடை 364
பட்டோலை 2143, 821
படகம் 1047
படங்குதாணுத்திரங்கள் 1271
படம்பக்கநாயன் 1901
படவு 1010, 1176, 2030
படாவியர் 429
படி - படித்தரம் 1232, 1257
படிக்காசுப்புலவர் 1305-8, 1313-6, 1726—35, 1804
படிகாரர் 1348
படிமையோன் 1989
படியங்கொற்றனார் 1384
படியளத்தல் 1257
படிவப்பார்ப்பான் 1439
படிவம் 111
படிவமாதவன் 181
படுகுழி 387
படுபாவி 1262
படுவதுகூட்டுண்டு கடவதுநோக்குதல் [85
படேற்க 580
படைக்குக் கடல் உவமை 501
படைச்செருக்கு 438
படைத்தலைவர் படையாளரைக் கூயது [437
படைப்பரிசாரம் 892
படையாட்சி (திருவாசகப்பகுதி) 2041
படையாற்றல் முதலிய பெருமைநிலைகள் ஆறு 295
படையீட்டம் 755
படையெழுச்சி (திருவாசகப்பகுதி) [2041
படைவீடு 1566
படைவீடுமுற்றுதல் 1201
படைவீரம் 587, 743
பண்டன்றுபட்டினங்காப்பு 636
பண்டாரக்கவித்துறை 1910—11
பண்டாரசாத்திரங்கள் 2062—3
பண்டி - வயிறு 1009
பண்டிதவத்ஸலன் 889, 890

பண்டுள்ளபேர்தவிர்த்து ஊர் வழங்கல்
பண்டைவினைவந்துதீர்தல் 296 [895
பண்புடைமை 383
பண்விடுதல் ‘புரவிபண்விடுமின்’ 568
பணியாரக்குடத்துள் பாண்டியன்தேவி
விடுத்த கவி 1627—8
பணியாள்பாட்டு 1746
பத்திமை 178
பத்தியண்ணல் 786
பத்தினி 235;-பிறதெய்வம்தொழாமை
பத்தினிச்செய்யுள் 1431 [413
பத்துப்பாட்டு 1552, 1555, 2008,
பத்துப்பாரமிதை 188 [2090
பத்துறுதிசை 165
பத்தெச்சம் 1569
பதங்கம் உருவத்தின் உயிரிழப்பது
பதஞ்சலி 1708—9 [386
பதஞ்சலிதீக்ஷிதர் பக். 638
பதடி - உமி 1278
பதவிருத்தி 1902
பதாம்புயம் 1474
பதி - ஸ்தானம் 14
பதிகமேவருமோலை 786
பதிபசுபாசம் 1910
பதிபடுவழுத்தமிழ்நூல் 594
பதினுலகம் 905
பதினுருயிரவர்கற்பைக் கண்ணன் நீக்
கியது 1936
பதினுறுபிள்ளைபெறுதல் 1369
பதினுறுபேறுகள் 418, 764
பதினெண்கீழ்க்கணக்குநூல்கள் 2017
பதினெண்கூலம் 583
பதினெண்பாடை 938, 1712
பதுக்கை 467
பதுமக்கொத்தன் 1473
பதுமஞ்சேர்திசைமுகன் 186
பதுமத்தார் 1656
பதுமன் 1560, 2022
பதுமனுர் 1560, 2022
பந்தயம் 354
பந்தன் 1418
பந்தனந்தாதி பக். 326
பந்து பாவை பசுவரிப்புட்டில்கள் 1429
பந்துமுதலிய பொறிகளை எறிதற்கு
மறக்குடிமகளிர் நியமிக்கப்படல்
பந்தூர் 782 [1429
பப்பருவாகன் 587—8
பப்பாரம் - சைனர்க்குச்சிறந்தமலை 183
பம்பு 285
பம்புதல் - பம்முதல் 1351
பம்பைக்கற்சிறை 1043
பயப்படுதல் 1475
பயன் - பொருள் 1550
பயனற்றவை இவையெனல் 406—7
பயிக்கங்காணுதல் 1065
பரகாலன் 1830, 1839
பரகேசரி 782, 784
பரங்குன்று 87;—சைனர்க்குச்சிறந்த
பரசக்கிரகோலாகலன் 892 [மலை 183
பரசமயதர்க்கநூல் 362
பரசுராமச்சதுர்வேதிமங்கலம் 1657
பரசுராமன் 499, 749, 782, 2089
பரசுராமனைக் காசிபன் வேட்பித்தபா
பரஞ்சுடர் 17 [ட்டு 749
பரஞ்சோதி 1669
பரணகபிலர் 1395
பரணர் 1384
பரணி 362, 892
பரதகண்டம் 1691
பரதநம்பி 747
பரதவர்பட்டினம் 2167
பரமகாரணன் 1536
பரமகீதம் 161
பரமதபங்கம் 1856
பரமதம் 1901
பரமபதத்தெல்லை 1833
பரமபதநிலை 1390
பரமபூரணம் 1972
பரமவேளார் 1229, பக். 604
பரமவைஷ்ணவஞனபாண்டியன் 890
பரமன் - பரமேச்சுரப்புலவன் 1625
பரமன்மாமுனிவன் 2078
பரமானந்தபாரதி 1774
பரமானந்தமாமுனி 1883
பரமேச்சுரப்புலவன் 1623, 1625
பரமேசுவரன் - சக்கரவர்த்தி 899
பரமேசுரன்புதல்வன் 1229
பரராசகேசரி 1009
பரராசசிங்கம் 1135, 1253, 1255,
1678, 1683 பக். 279
பரராசசிங்கன் சடையனைப்புகழ்ந்தபா
ட்டு 1135

நடுங்க நாட்டம்.

74. தாயாகி வந்தொரு பேதையைக் காத்த தனிமுதலோன்
வேயான தோளுமை பாகன் சிராமலை மேவிவளர்
பாயாத வேங்கை பயிலும் புனத்துப் பவளவுரு
வாயாகும் வேங்கையைக் கண்டேன்வண் டேன்முரல் வார்குழலே. ()

பெட்டவாயில் பெற்றுச் சேறல்.

75. அனக்கே தனத்தனு மானு மறிய வரியபொற்றுள்
எனக்கே யருளிய வெம்மான் சிராமலை யேந்திழைதான்
தனக்கே யுயிரெனக் காட்டிய தோழியைச் சாரினெஞ்சே
உனக்கே யெளிதி னுறுங்கனி வாயமு துண்டிடலே. (அ)

இரவு வலியுறுத்தல்.

76. பொருந்தா வுலோகம் பொருந்திட வாசு பொருத்துதல்போல்
முருந்தா மிளநகை மாதரும் யானு முயங்கச்செயும்
திருந்தா தவர்புர மட்டோன் சிராமலைச் செம்மணியார்
இருந்தா ரணிமுலைப் பாங்கியை யாங்கண் டிரந்திடினே. (௯)

---

74. பாயாத வேங்கை - வேங்கைமரம்; வேங்கைமரத்தை இங்ஙனங் கூறியது வெளிப்படையென்னும் இலக்கணத்தின்பாற்படும். பவள உரு வாய் என்றது இரத்தம் படிந்த வாயை. தலைவனைக் களவி வேங்கையின் வாய் சிவந்ததோ, வேறொன்றினைக் களவிச் சிவந்ததோவென்று தலைவி ஐயங்கொண்டு நடுங்கும்படி இங்ஙனம் கூறினள். பி-ம். வாயாரும்.

75. அனக்கேதனத்தன் - பிரமன்; கேதனம் - கொடி. காட்டிய - முன்னமே கண்களால் தெரிவித்த. தெரிவித்ததை, "நாதாந்தமீது" (34) என்னும் செய்யுளால் அறிக. உண்டிடல் உனக்கே உறும்.

76. பொருந்தா உலோகம் - சேராத பித்தளை முதலியன. ஆசு - பற்றுசு; உலோகத்தைப் பொருத்துவது; இது பாங்கிக்கு உவமை. முருந்து- மயிலிறகின் அடிக்குருத்து. செம்மணி ஆர்ந்த முலை; பெரியமாலையை அணிந்த முலை. இரந்திடின் முயங்கச்செய்யும்.

ஊர் வினாதல்.

77. நதியா டரவணி யெம்மான் சிராமலை நாதனன்பர்
துதியா வெனது சிறுமொழிப் பாடற் றொடையுங்கொண்டு
கதியா னுறவருள் செய்தோ னருளன காரிகையீர்
பதியா துமக்குரை செய்வீ ரெமக்கிப் பதியெனவே. (௬௦)

பேர் வினாதல்.

78. கண்ணு ரொளியென வென்னைமுன் காட்டிக் கறைமிடற்றோன்
பண்ணு ரிசையென வாழுஞ் சிராமலைப் பைந்தொடியீர்
தண்ணார் புனத்துமதூர்கூ றிடிற்பழி சாருமெனின்
எண்ணார் தரவுங்கள் பேரேனுந் தோன்ற வியம்புமினே. (௬௧)

வேழம் வினாதல்.

79. மாதங்க வோங்க லனமுலை யீர்தம் வடிவொருபால்
மாதங்க நாதர் சிராமலைச் சாரலின் மன்னியெண்ணில்
மாதங்க நாலினர்க் காகா முயல்வின் மகிழ்வினெய்தேன்
மாதங்க மேவுற்று மேவிய தோசொலும் வாய்திறந்தே. (௬௨)

மரை வினாதல்.

80. பரையொன்று பாக ரெனைத்தடுத் தாண்டவர் பாண்டரங்கர்
விரையொன்று கொன்றையர் வாழுஞ் சிராமலை மின்னனையீர்
உரையொன்று கூர்ங்கணை யானேவச் சோரி யுடல்சொரிய
மரையொன்று தானிவண் வந்ததுண் டோசொலும் வாய்மலர்ந்தே.

77\. அன்பர் துதியா - மெய்யன்பர்களுடைய துதியை ஒப்ப. பாடற் றொடை - பாமாலை. இப்பதி - இன்ன ஊர்.

78\. கறை - நஞ்சையுடைய. புனத்திலுள்ள உமது ஊர். எண் ஆர் தர - எண்ணத்திற் பொருந்தும்படி.

79\. மா தங்க ஓங்கல் - பெரிய மேருவை. மாது அங்க நாதர் - மாதின் அங்கத்தையுடைய நாதர். எண்ணில் மாதம் கம் நாலினர்க்கு ஆகா முயல்வின் - எண்ணில்லாத பல மாதங்கள் முயன்றாலும் பிரமதேவனாலும் செய்தற்கரிய முயற்சியினால்; கம் - தலை. மாதங்கம் - யானை. ஏ உற்று - அம்பு தைக்கப்பெற்று. பி-ம். 'சாரலின் வாய்மருவி', 'காகா தடவு'

80\. பரை - உமாதேவியார். விரை - நறுமணம். சோரி - இரத்தம். மரை - ஒருவகை மிருகம்.

பன்றி வினாதல்.

81. மருங்கோல மென்றிடைக் கோலிட மேகலை வண்டல்புரி
பெருங்கோலமாரருட்பெம்மான்சிராமலைப்பெண்ணனங்காள்
இருங்கோல மாரநின் றேவச்செங் கோல வெழில்படைத்துக்
கருங்கோலமெய்திடக்கண்டதுண்டோசொலுங்காண்பதற்கே

மானொடு மனம் வினாதல்.

82. தேனோடி வந்தமர் கொன்றையர் வாழுஞ் சிராமலைவாய்
யானோடி வந்தமை யென்னெனின் மென்கொடி யாமடவீர்
மானோடி வந்ததம் மானினைத் தேடி மறுகிமனம்
தானோடி வந்தது கானோடி வந்திடுந் தண்பொழிற்கே. (௧௫)

வழி வினாதல்.

83. மண்ணும் பரமனல் கான்மதி யென்றிய மானனென்ன
எண்ணும் படிவத்த னெம்மான் சிராமலை யேந்திழையீர்
பண்ணும் பணியுங் கனிவாய் திறந்தருட் பான்மையினால்
நண்ணும் படிநும் பதிசாரக் கூறுமி னல்வழியே. (௧௬)

---

81. மருங்கு - பக்கத்தில். ஓலிட - முழங்க. இடைக்கு ஓலமென்று மேகலை ஓலிட. வண்டல் - மகளிர் விளையாட்டு. கோலமார் பெண்ணன்னனங்காள். இருங் கோல் அம் ஆர-பெரிய அம்பை அழகுபொருந்த. செங்கோலம் - இரத்தத்தினாற் சிவந்தகாட்சி. கருங்கோலம் - கரிபன்றி. பி-ம். 'வண்டவிழை.'

82. தேன் - வண்டு. மறுகி - சுழன்று. கான் - வாசனை.

83. மண் - பூமி. உம்பர் - ஆகாயம். அம் - நீர். அனல் - அக்கினி. கால் - காற்று. மதி - சந்திரன். என்று - சூரியன். இயமானன் - வேள்வித்தலைவன். படிவம் - உருவம். பண்ணும் - இசைகளும்.

மொழியாமை வினாதல்.

84. மருவாச மாருங் குழலீர் சிராமலை வாசரன்பர்
தருவாச யோகிகள் போனீவிர் மோனந் தரித்துறினும்
திருவாச கத்தினி லாசையுற் றேற்குச் சிறந்திடவிங்
கொருவாச கஞ்சொலப் பக்குவம் பார்ப்ப துசிதமன்றே. (கஎ)

இடை வினாதல்.

85. பூவா ளுளிசண்பை யாண்டகை யார்முனம் போற்றிசெய்த
தேவார மோதுஞ் சிவன்வாழ் சிராமலைச் சேயிழையீர்
தாவா நடுப்பணி தாங்கார் பெரிய தனஞ்சுமையார்
ஆவா நடுவுண்டு தேற்றியிப் போதெனை யாளுமினே. (கஅ)

யாரே இவர்மனத் தெண்ணம் யாதெனத் தேறல்.

86. மையிற் றிகழு மிடற்றார் சிராமலை வாய்ந்தவர்தாம்
கையிற் றழைகண்ணி கொண்டுமோர் பித்தர்தங் கட்டுரைபோல்
மெய்யிற் கணைபட்டு மான்வந்த தோவென்பர் மெய்யொன்றின்றிப்
பொய்யிற் பெரிய ரிவர்யார்கொ லெண்ணம் புணர்ந்ததென்னே.

---

84. மருவின் வாசம்; மரு - ஒரு வாசனைமூலிகை; "மருவுக்கு வாசனை போல் வந்ததால்" (திருவெங்கைக் கோவை.) அன்பராகிய யோகிகள்; மரத்தடியில் வாழும் யோகிகள்; தருவாசம் - மரவுரியாகிய ஆடையுமாம்; வாசம் - ஆடை. திருவாசகத்தினில் - உங்களுடைய அழகிய வாய்மொழியினில். உசிதம் - தகுதி.

85. அளி - வண்டு. சண்பை - சீகாழி. ஆண்டகையார் - திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார். அளி ஓதுமென்க. பணி - பாம்பு, வேலை. தனம் - கொங்கை, தன்மை. நடு - இடை, நடுநிலை. பி-ம். 'தனம்படையார்.'

86. தழையையும் கண்ணியையும் கொண்டு.

எண்ணந் தெளிதல்.

87. பதியா துரைமின் பெயரெவன் வேழம் படர்ந்ததெங்ஙன்
கதியா துரைமி னெனவிவர் பேசிய கள்ளமெல்லாம்
மதியார் சடைமுடி யெம்மான் சிராமலை வாணுதல்வாள்
நுதியார் விழிமய லாலன்றி வேறிலை நோக்கிடினே. (௨0)

இருவரு முள்வழி யொருமையிற் போதல்.

88. விண்ணும் பரவுஞ் சிவன்வாழ் சிராமலை மீதினிலெம்
கண்ணுங் கருத்துந் திருவுருக் கொண்டுறை காட்சியென
நண்ணுங் குவிமுலை மின்னு ரிருவரு நன்கிருந்தார்
எண்ணும் பதமிது வாங்காதல் யாமிங் கியம்புதற்கே. (௨௧)

கையுறை யேந்திநின் றவ்வகை வினாதல்.

89. தானொன் றிரண்டன்றி நின்றெனை யாண்டவன் றூயனையான்
கானொன்று கொன்றைய னெம்மான் சிராமலைக் காரிகையீர்
ஊனொன்று கூர்ங்கணை யோடிவ ணோடி யுகண்டுகலை
மானொன்றுபோந்திடக்கண்டதுண்டோநும்வரைப்புனத்தே.

எதிர்மொழி கொடுத்தல்.

90. முன்னூற் கலையெனும் வேதாக மங்கண் மொழிந்ததிசைப்
பொன்னூற் கலையர் சிராமலை வாழும் புரவலர்நீர்
நன்னூற் கலையக நீங்கா திருப்பவென் னொடிவந்தீர்
மென்னூற் கலையிடை யெம்பாற் புனக்கலை மேவிலதே. (௨௩)

---

87. பதி - ஊர். கதி - வழி. வாள் நுதல் - ஒளியையுடைய நெற்றி. வாள் நுதியார் - வாளின் முனையைப்போன்ற.

88. பதம் - சமயம். இயம்புதற்குப் பதம் இதுவாம்.

89. கான் - நறுமணம். உகண்டு - துள்ளி. பி-ம். தேனொன்று...... தேமொழியீர்'

90. முன் நூல்-பழைய நூல். திசையாகிய பொற்கலையையுடையவர். நல் நூற் கலை - நல்ல நூல்களாகிய சாஸ்திரங்கள். அகம் - மனத்தை. மெல் நூற்கலை; கலை - ஆடை. புனக் கலை - புனத்திலுள்ள மான்.

இறைவனை நகுதல்.

91. மூவிலை வாய்ந்தவை வேலர் சிராமலை மொய்குழலாய்
மாவிலை வாய்ந்த தொடையிலர் பூந்தொடை மாவிலையார்
காவிலை வாய்ந்த கரத்தார் கலையெய்த காரணமப்
பூவிலை வாய்ந்தவைங் கண்ணிக்கும் வாய்த்தன புன்னகையே.

மதியின் அவரவர் மனக்கருத்துணர்தல்.

92. நண்ணார் புரமெரித் தோர்வாழ் சிராமலை நாடுமிவள்
கண்ணா மிருபிணை மானிவ ரங்கையிற் கண்ணியுற
எண்ணாள் புனத்தினைக் காத்திடக் காவலர்க் கேயினிதாய்ப்
பண்ணார் மொழிநம் மிளம்பிடி வேட்டை பலித்ததுவே. (உரு)

௧0. பாங்கியிற் கூட்டம்.

தலைவன் உட்கோள் சாற்றல்.

93. அணிகோ மலர்கள் கிளியோப்பு கோபர ணுய்ந்தமைக்கோ
மணிகோல் வளைக ளிடுகோ பதமென் மலர்பிடிக்கோ
துணிகோ நுமதைய ரேவல் புரியத் துதித்திடுகோ
பணிகோ வருள்வீ ரமலன் சிராமலைப் பாவையரே. (க)

---

91. வை - கூர்மை. மா வில்லை வாய்ந்த தொடை - பெரியவில்லிற் பொருந்திய அம்பைத்தொடுத்தல். பூந்தொடை மாவிலையார் - பூமாலையையும் மாமரத்தின் இலையையும் உடையவர். கா விலை வாய்ந்த - கற்பகத்தை விலைக்கு வாங்கிய. பூவும் இலையும் வாய்ந்த மாலைக்கும் புன்னகை வாய்த்தன; புன்னகை - புன்சிரிப்பு, சிறிய அரும்பு. எய்த காரணத்தால் புன்னகை வாய்த்தன.

92. கண்ணி - மாலை; குறுவலையென்பது வேறுபொருள். கண்ணாகிய மான் குறுவலையில் உற என்பது ஒரு நயம். உறுதலிற் காத்திட எண்ணாள். இளம்பிடிவேட்டையென்றது தலைவன் தலைவியைக் கருதிவந்தமையைக் குறித்தது. பலித்தது - பயனுற்றது. பி-ம். 'கலைமான்'

93. அணிகோ - அணிவேனோ. ஓப்புகோ - ஓட்டுவேனோ. மணி கோல் வளைகள் - இரத்தினங்கள் கோலப்பெற்ற வளைகள். ஏவல்புரியத் துணிகோ.

பாங்கி குலமுறை கிளத்தல்.

94. ஊனார் புழுக்கலு மீயலுந் தின்றிங் குழலும்வெற்பர்
மானா ளிவளனம் பாலுணு மாநகர் மன்னவர்நீர்
தேனார் சிராமலை யெம்மான் றிருவடி சேருமன்பர்
கானார் சிறுதெய்வ நச்சுவ ரோபுவி காவலரே. (௨)

தலைவன் தலைவிதன்னை உயர்த்தல்.

95. தெள்ளித் தெளித்த வமுதனை யாளைச் சிராமலைவாழ்
வெள்ளிக் கிரியண்ண லாரருள் போல்வளர் மெல்லியலை
வள்ளிக் குலக்கொடி மாதரென் கூறினிர் வாய்மையன்றோ
கள்ளிக் ககின்மக வென்றுல கோர்கள் கழறுவதே. (௩)

பாங்கி அறியாள்போன்று வினாதல்.

96. நூலாரு நுண்ணிடை யொல்கப்பந் தாடுபன் னூற்றின்மிக்க
பாலாரு மென்மொழி யாரினுண் மாலொடு பங்கயற்கு
மேலாக நின்றரு ளெம்மான் சிராமலை வேந்தவெவள்
மாலாக நின்றுனை மாலாகச் செய்த மடவரலே. (௪)

---

94. ஊனார் புழுக்கல் - தசையிட்டுப் புழுக்கிய உணவு. ஈயல் - ஈசல். வெற்பர் மானாள் - குறத்தி. அன்னத்தையும் பாலையும் உண்ணும் மன்னவர். கானார் சிறுதெய்வம் - காட்டுத் தெய்வங்களை. அன்பர் நச்சுவரோ.

95. மாதர்: விளி. “கள்ளி வயிற்றி னகில்பிறக்கும்” (நான்மணிக் கடிகை, 4); “கள்ளியின் னாய்ப்பிளங் துக்ககா ரகில்களும்” கம்ப. தாடகை வதைப். 8.

96. ஒல்க - தளர. பங்கயன் - பிரமன். மால் ஆகம் நின்று - பெருமை யுடைய நெஞ்சில் நின்று. மாலாக - மயக்கமுற. பெருமையை யுடைய மார்பில் நின்று உன்னைத் திருமாலாகச் செய்த மடவரல் என வேறு பொருள் தோற்றுதல் ஒருநயம்.

இறையோன் இறைவிதன்மை யியம்பல்.

97. செந்தா மரைமலர் சேவடி யல்குல்பொற் றேரிடைமின்
பந்தா முலைமுக மாமதி கண்ணயில் பான்மொழிகார்
கொந்தார்குழலெனையிவ்வணம்வாட்டியகோதைக்குண்டால்
இந்தார் சடைமுடி யெம்மான் சிராமலை யேந்திழையே. (ரு)

பாங்கி தலைவியருமை சாற்றல்.

98. துதிவழி யேவழி யாகவென் ஞவியுட் டோன்றிமுத்தி
கதிவழி யேதந்த வெம்மான் சிராமலைக் கண்ணுதலோன்
விதிவழி யேய்மதி யொத்திட யான்மின் விதித்தசெய்வேன்
மதிவழி யேவிதி நிற்பதுண் டோபுவி மன்னவரே. (சு)

தலைவன் இன்றியமையாமை கூறல்.

99. கல்லா மெனது மனங்கனி வாகக் கருணைசெய்த
சொல்லார் பொருள்வடி வாகுஞ் சிராமலைச் சோதியருள்
இல்லார் பிறவித் துயரக லார்நின் னிலங்கிழையாள்
அல்லா தெனக்கிங் கருதுமின் னேயிவ் வருந்துயரே. (எ)

பாங்கி நின்குறை நீயே சென்றுரை யென்றல்.

100. தாயே யெனமகிழ்ந் தாண்டோன் சிராமலைத் தாணுவரு
ளாயே வளர்முலை யாட்கிவை யான்சொல லாவதன்றே
சேயே யனைய திறன்மன்ன னேயங்குச் சென்றுநின்று
நீயே நினதுறு காதல்கள் யாவு நிகழ்த்துவையே. (அ)

---

97. கண் அயில்; அயில் - வேல்.

98. கதிக்கின்ற வழி. ஏய் - பொருந்திய. ஒத்திட - ஒப்ப. மின் - விதியும் பாங்கிக்கு மதியும் உவமைகள்.

99. கல்லார்........கருணைசெய்த: "கல்லை மென்கனியாக்கும் விச்சை கொண் டென்னை யுன்கழற் கன்ப னாக்கினாய்" (திருவாசகம்.) சொல்லார் பொருள் வடிவாம்.........சோதி: "சொற்பொரு ளாயவுன்னை" (திருவிளை. இடைக்காடன்.) துயர் அருது. பி-ம். எனக்கு மருது.

100. அருளாயே - அருளாகவே. சேய் - முருகக்கடவுள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1934-ம்வரு டிசம்பர்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1934 டிசம்பர்	வரவு 1933 டிசம்பர்
I General Section :		
(1) மாதச்சந்தாவகையில் வரவு...	70	
(2) பரீக்ஷைக் கட்டணத்தொகை வரவு ...	3 4 ...	
(3) சங்கக்காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ...	30	

விவரம்	செலவு 1934 டிசம்பர்	செலவு 1933 டிசம்பர்
I General Section :		
(1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	153 12 ...	
(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	140	
(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ...	127 13 4	
(4) Stationery, contingencies வகையிற் செலவு ...	4 1 ...	
(5) பாண்டியன் புத்தகசாலைக்கு பீரோக்கள் வகையரா சாமான்கள் செய்வதற்குச் செல்லாக்கியது ...	159 1 ...	

(4) **Miscellaneous** வரவு ...	...	6	...			
மொத்தம் ரூ ...	103	10	...	120	2	6
II EDITORIAL SECTION :						
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவகையில் வரவு.	24	10	...			
(2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தா வகையில் வரவு ...	28	11	...			
(3) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	72	13	6			
(4) செந்தமிழ்ப் பழையபிரதிகள் விற்றவகையில் வரவு. ...	1	13	...			
மொத்தம் ரூ ...	127	15	6	78	13	...

(6) தபால், தந்தி வகையிற்செலவு	4	...	...			
(7) சங்கமாபீசு சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு.	6	...	...			
(8) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு ...	1	6	...			
மொத்தம் ரூ	596	1	4	1450	2	10
II EDITORIAL SECTION:						
(1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	35	...	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸி வகையிற் செலவு. ...	...	5	...			
(3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு.	53	...	...			
(4) தபால் தந்திவகையிற் செலவு	12	...	..			
மொத்தம் ரூ ...	100	5	...	68	6	9

III PRESS SECTION :

(1) அச்சுக்கூலி வகையில் வரவு ...	56	...	...			
(2) பைண்டிங்கூலி வகையில் வரவு ...	3	...	...			
மொத்தம் ரூ ...	59	...	...	17	4	...

III PRESS SECTION :

(1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	33	...	...			
(2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு.	5	5	3			
மொத்தம் ரூ ...	38	5	3	2	2	6

ஆகமொத்தம் வரவு ரூ. ...	290	9	6	216	3	6	ஆக மொத்தம் செலவு ரூ.	734	11	7	1520	12	1
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ. ...	4612	...	5	13549	4	...	மாதமுடிவில் மீதியிருப்பு ரூ ...	* 4167	14	4	12244	11	5
ஆகமொத்தம் ரூ. ...	4902	9	11	13765	7	6	ஆக மொத்தம் ரூ ...	4902	9	11	13765	7	6

*By M. U. C. B.
Pass Bk. Rs. 61- 5- 9
M. R. C. C. Bank
Pass Bk. Rs. 3882- 1- 5
Cash on hand Rs. 224- 7- 2

4167-14- 4

குறிப்பு:—மேலே கண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 4167—14—4 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 25011—5—0. (2) ரூ. 1050—0—0; திருவாங்கூர் ஸ்டேட் லிமிடெட் பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனம் ரூ. 10000. மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 10000. (2) ரூ. 5000. காரைக்குடி [illegible] ஸ்ரீ ஈ. சுப. ராம. நாராயணன்செட்டியார் அவர்களின் செக்கூன் அம்மேன் கடையில் வட்டிக்குச் சேர்க்கப்பட்டுள்ள மூலதனம் ரூ. 1200. பணம் வசூல் அனுப்புவதற்காக வெளியே அனுப்பியுள்ள உண்டியலின் தொகை ரூ. 1000 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 9—2—'35.

LAKSHMINARAYANAN,
MANAGER, 2—1—'35.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1935-ம் ௵ ஜனவரிமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1935 ஜனவரி	வரவு 1934 ஜனவரி	விவரம்	செலவு 1935 ஜனவரி	செலவு 1934 ஜனவரி
I GENERAL SECTION:			I GENERAL SECTION:		
(1) மாதச்சந்தாவகையில் வரவு ..	150		(1) சங்கம் மானேஜ்மெண்டா பீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	160 8 9	
(2) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ...	553 14 10		(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	140	
(3) பரீக்ஷைக் கட்டணத்தொகை வரவு ...	209 14 ...		(3) Stationery contingencies வகையிற் செலவு ...	5 8 6	
			(4) பாண்டியன் புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தா செல்லாக்கியது. ...	6 9 ...	
(4) சங்கக்காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ...	30		(5) தபால், தந்திவகையிற்செலவு	13	

(5) **Miscellaneous** வரவு ...	2	2	...			
மொத்தம் ரூ ...	945	14	10	1041	4	7
II EDITORIAL SECTION:						
(1) செந்தமிழ்ப் பத்திரிகைக்குச் சந்தா வகையில் வரவு ...	10	4	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	132	15	...			
(3) செந்தமிழ்ப் பழைய பிரதிகள் விற்றவகையில் வரவு ...	2	1	...			
(4) **Miscellaneous** வரவு ...	...	10	...			
மொத்தம் ரூ ...	146	8	...	242	6	...

(6) முனிசிபாலிடிக்கு வரி செலுத்தியது ...	79	13	11			
(7) சங்கப்பரீக்ஷை சம்பந்தமாகச் செலவு ...	1	11	...			
மொத்தம் ரூ ...	406	14	2	381	3	2
II EDITORIAL SECTION:						
(1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	47	14	5			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனரி கண்டின்ஜன்ஸி வகையிற் செலவு. ...	...	4	...			
(3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு	53	...	...			
(4) தபால், தந்திவகையிற் செலவு. ...	15	...	...			
மொத்தம் ரூ ...	116	2	5	46	7	6

III PRESS SECTION:						
(1) அச்சுக்கூலிவகையில் வரவு.	50	10	...			
(2) பைண்டிங் கூலிவகையில் வரவு ...	3	6	...			
மொத்தம் ரூ ...	54	...	...	4	...	...

III PRESS SECTION:						
(1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	33	...	...			
(2) அச்சாபீஸிற்கு அச்செழுத்துக்கள் வார்ப்பது சம்பந்தமாக அட்வான்சுசெல்லாகியது ...	50	...	...			
(3) ஷை ஆபீஸ் **Stationery contingencies** வகையிற் செலவு.	4	7	3			
மொத்தம் ரூ. ...	87	7	3	16	13	5

ஆகமொத்தம் வரவு ரூ ...	1146	6	10	1287	10	7	ஆக மொத்தம் செலவு ரூ ...	610	7	10	444	8	1
மாத ஆரம்பத்திலிருந்த கைபிருப்பு ரூ ...	4167	14	4	12244	11	5	மாத முடிவில் மீதி இருப்பு ரூ ...	* 4703	13	4	13087	13	11
ஆகமொத்தம் ரூ ...	5314	5	2	13532	6	...	ஆகமொத்தம் ரூ ...	5314	5	2	13532	6	...

*By M. U. C. B.
Pass Book Rs. 61– 5– 9
M. R. C. C. Bank
Pass Book Rs. 3833– 9–11
Cash on hand Rs. 808–13– 8

4703–13– 4

குறிப்பு—மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 4703-13-4 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரூ. 25011-5-0; (2) ரூ. 1050-0-0; திருவாங்கூர் க்ரெடிட் [illegible] பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதலாக ரூ. 10000; மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரூ. 10000; (2) ரூ. 5000; காரைக்குடி மகா-ள-ள-ஸ்ரீ [illegible] செட்டியார் அவர்களின் [illegible] கடையில் வட்டிக்குக் கொடுக்கப்பட்டுள்ள முதலாக ரூ. 1200; பணம் வசூல் அனுப்புவதற்காக வெளியே அனுப்பியுள்ள உண்டியலின் தொகை ரூ. 1000 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 9—2—'35.

LAKSHMINARAYANAN,
MANAGER, 2—2—'35.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

	சங்கப்பிரசுரம்.	ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
*8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
*	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது உரையுடன்	0	4	0
2.	கணூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
*9.	அநுமானவிளக்கம்			
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.*	பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.*	திருக்கலம்பகம் (ஷை)			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
28.*	சந்திராலோகம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0

32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	அகப்பொருள்விளக்கம்	1	4	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	பழமொழி மூலமும் பழையவுரையும் (முதல் 100 செய்)	1	0	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	கடைவள்ளலார்காலம்	0	6	0
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	மதங்கசூளாமணி	1	0	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர்	0	6	0
	ஷை ஆங்கிலத்தில்	0	6	0
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0

மேலேகண்ட சங்கப்பதிப்பில்லாத பு[illegible]கங்கள் வேண்டுவோர் வேறு புத்தகசாலைகளுக்கு [illegible]ங்களே நேரில் [illegible] பெற்றுக்கொள்ளவேண்டும்.

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 32 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10. வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௩] யுவ௵ கார்த்திகைமீ [பகுதி-க.
Vol. XXXIII. November-December 1935. No. 1.

உள்ளுறை.

கோவை:—	ஸ்ரீமத். ரெ. அப்புவையங்கார்	க—சு
கம்பராமாயண இன்கவித்திரட்டு:-	,, ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார்	எ—கசு
புறப்பாட்டின் முறைவைப்பு:—	,, R. நரஸிம்ஹன் B.A. (Hons.)	கஎ—உச
நியாயப்பிரவேசமணிமேகலை:—பத்திராசிரியர்.		உரு—உகூ
மதிப்புரை:—		௩0—௩உ
சிராமலைக்கோவை:- (குறிப்புரையுடன்)	ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி - டாக்டர் உ. வே. சாமிநாதையர்.	33—40
பெருந்தொகைப் பொருட்குறிப்பகராதி:-	ஸ்ரீமத். மு. இராகவையங்கார்.	63—70
சூடிக்கொடுத்தநாய்ச்சியார் தோத்திரப்பாமாலை மூலமும் உரையும்:—	,, ரெ. அப்புவையங்கார்.	1—8

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1935.

Printed by Srimathu R SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVERGAL and Published by THIRU. NARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, New Jail Road Madura.

உ

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் **பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை** என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் **மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை** என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௩] யுவ௵ கார்த்திகைமீ [பகுதி-௧.

Vol. XXXIII. November-December 1935. No. 1.

கோவை.

[ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ. உ௱. வே. வித்துவான்
ரா. அப்புவையங்கார் ஸ்வாமி எழுதுவது.]

கோவையென்பது அமிழ்தினும் இனிய தமிழ்மொழியிலுள்ள தொண்ணூற்றாறுவகைப்பிரபந்தங்களுள் ஒன்று. இப்பெயர் முத்து, பவழம் முதலிய நேரினமணிகளை நிரல்படக்கோத்தாங்கு, கைக்கிளையைக் கதைத்தொடர்பாகக்கொண்டுள்ள இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடு முதலிய கிளவித்தொகைகள் வரிசைப் படக்கோக்கப்பட்டிருத்தலால் வந்ததென்ப.

இஃது, அகப்பொருளிலக்கணத்திற்குச் சிறப்பாயமைந்ததோ ரிலக்கியநூலாகும்.

அகமென்றது இன்பமென்னும் இயல்பினையுடையதாகி அகத்தே நிகழும் ஒழுக்கத்தை. இது இடவாகுபெயர்.

இன்பமென்பது மக்களடையும் உறுதிப்பொருள் நான்கனுள் மூன்றாவதாகும். (மற்றவை அறமும், பொருளும், வீடுமாம்.) இவ்வின்பம், ஒத்த அன்புடையாராகிய கிழவனும் கிழத்தியும் கூடுங்கூட்டத்திற் பிறப்பதொன்றாம். இக்கூட்டத்தின்பின்னர் அவ் விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்த

*

தெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வேறுகர்ந் தின்ப முறுவதோர்பொருளாகலின் அகப்பொருளெனப்பட்டது.

இவ்வகப்பொருள், கைக்கிளை ஐந்திணை பெருந்திணையென மூன்றுவகைப்படும்.

கைக்கிளையென்பது ஒருதலைக்காமம். ஐந்திணையென்பது அன்புடைக்காமம். பெருந்திணையென்பது ஒவ்வாக்காமம்; ஆக லின் அன்புடைக்காமமாகிய ஐந்திணையே அகமெனச் சிறப்பித்துச் சொல்லப்படுவதாம். ஆகையாலே கோவையை ஐந்திணைக்கோவை யென்றும், அகப்பொருட்கோவையென்றும், கூறுவர்.

ஐந்திணையாவன:—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்த லென்பன. இப்பெயர் அவ்வந்நிலத்துச் சிறந்தபொருளாகிய குறிஞ்சிமுதலியவற்றால் வந்ததென்ப. இவை தானியாகுபெயர்கள்.

ஐந்திணையைப் பலர் பலவாறாக முறைப்படுத்திக்கூறியிருப்ப வும், இவ்வாறு முறைப்படுத்திக்கூறியதற்குக் காரணமென்னையோ வென்னில்

"போக்கெல்லாம் பாலை புணர்த னறுங்குறிஞ்சி
ஆக்கஞ்சே ரூட லணிமருதம்—நோக்குங்கால்
இல்லிருத்தன் முல்லை யிரங்க னறுநெய்தல்
சொல்விரிந்த நூலின் றொகை"

என்றவாறு அகப்பொருள் புணர்ச்சியாகலானும் இஃது இருவர்க் கும் ஒப்பநிகழ்தலானும் முன்னர்ப் புணர்ச்சிக்குரிய குறிஞ்சியும், புணர்ந்துழியல்லது பிரிதலின்மையானும் அப்பிரிவு தலைமகன் கண்ணதாகிய சிறப்பானும் அதன்பின்னர்ப் பாலையும், தலைவன் பிரிந்துழித் தலைவி கற்பால் ஆறியிருத்தல்வேண்டுமாதலின் அதன் பின்னர் முல்லையும், பிரிவின்றிறங்களிலொன்றாகிய பரத்தையிற் பிரிந்துழித் தலைவன்தவறுநோக்கித் தலைவி ஊடல் இயல்பாத

லானும், அது "ஊடுதல் காமத்திற்கின்பமதற்கின்பம், கூடிமுயங்கப் பெறின்" என்றவாறு காமத்திற்குச் சிறப்பாகலானும் அதன்பின்னர் மருதமும், ஏனையபிரிவு நீடித்துழிக் காமங்கைம்மிக்குத் தலைவியழுங்கல் இயல்பாகலின் அதன்பின்னர் நெய்தலும் வைக்கப்பட்டன.

ஐந்திணை, நிலம் காலம் என்னும் இரண்டுவகையதாகிய முதற்பொருளையும்; தெய்வம், உயர்ந்தோர், தாழ்ந்தோர், புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, வாச்சியம், யாழ், பண், தொழில் என்னும் பதினான்குவகையதாகிய கருப்பொருளையும்; புணர்தல் புணர்தனிமித்தம், பிரிதல் பிரிதனிமித்தம், இருத்தல் இருத்தனிமித்தம், ஊடல் ஊடனிமித்தம், இரங்கல் இரங்கனிமித்தம் என்னும் பத்துவகையதாகிய உரிப்பொருளையும் பொருந்தியதென்ப.

இவற்றுள் முதற்பொருளிலொன்றாகிய நிலமென்பது: முற்கூறிய குறிஞ்சிமுதலிய ஐந்திணைகளேயாம்.

காலமென்பது: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்ற ஆறு பெரும்பொழுதும்; மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு என்ற ஆறு சிறுபொழுதும் ஆம். [இவற்றுள் விடியலைநீக்கி ஐந்தென்றுரைப்பாரும் உளர்.] முன்னதை ஆவணிமுதல் இரண்டிரண்டுமாதமாகவும், பின்னதை மாலைமுதல் பப்பத்து நாழிகையாகவும் கொள்க.

கருப்பொருள் பதினான்கும் உரிப்பொருள் பத்தும் முற்கூறப்பட்டன காண்க.

ஐந்திணைக்கோவையாவது: இம்மூவகைப்பொருளையும்பொருந்திய கைக்கிளைமுதலிய அன்புடைக்காமப்பகுதிகளையுடையதாகிய களவொழுக்கத்தையும் கற்பொழுக்கத்தையும் கட்டளைக்கலித்துறையால் திணை, கைகோள், கூற்று, கேட்போர், இடன், காலம், பயன், முன்னம், மெய்ப்பாடு, எச்சம், பொருள்வகை, துறை என்னும் பன்னிரண்டகப்பாட்டுறுப்பும் தோன்றப் பாடப்படுவதோர்

அரிய பெரிய நூலாம். "யாவையும்பாடிக் கோவைபாடு" என்னும் ஆன்றோர்மொழியே இதற்குச் சான்றாகும்.

திணை: முன்னமே விளக்கப்பட்டது.

கைகோள் - ஒழுக்கம். இது, களவு கற்பு என இருவகைப்படும்.

கூற்று என்றது: கூறுதற்குரியாரை; களவென்னுங்கைகோளில் தலைவன், தலைவி, பாங்கன், பாங்கி, செவிலி, பார்ப்பார் என்னும் அறுவரும், கற்பென்னுங்கைகோளில் நற்றாய், கண்டோர், பாணன், கூத்தர், விறலி, பரத்தை, அறிவர் என்னும் எழுவரும் கூற்றிற்குரியராவர்.

கேட்போரென்றது: கேட்டற்குரியாரை; தலைவன்கூற்றை நற்றாயொழிந்த பதின்மரும், பார்ப்பார் அறிவர்கூற்றைத் தலைவன் முதலிய அனைவரும் கேட்டற்குரியராவர்.

இடமும் காலமும்: வெளிப்படை.

பயனாவது: இப்பொருளை இது பயக்குமென்பது.

முன்னமாவது: இத்தன்மையார்க்கு இவ்விடத்து இது இன்ன பயக்குமென்பது.

மெய்ப்பாடாவது: நேராகக்கண்டதுபோற்றோன்றுங் கருத்து; மனநிலையென்பதும் இது. இதனை வடநூலார் ஸாவமென்ப. ஸ்தாயீஸாவமென்றுங் கூறுவர். நிலையானகருத்தென்பது இதன் பொருள்.

இவற்றுள் முக்கியமானவை எட்டு. அவை:—நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன. இவற்றோடு சமநிலையைக்கூட்டி யொன்பதென்பாருமுளர்.

இவற்றின் சமவாயி (முதற்) காரணத்தை விபாவமெனவும், சககாரி(துணைக்)காரணத்தைச் சஞ்சாரிபாவமெனவும், காரியத்தை அநுபாவமெனவும் வடநூலார் கூறுவர்.

இவைகளாலே தோன்றி இவைகளை வெளிப்படுத்துவன சில. அவைகளுக்குச் சாத்விகபாவமென்றும் பெயர்கூறுவர். அவை யாவன: அசைவின்றிநிற்றல், ஒடுங்கல், மயிர்பொடித்தல், வியர்த்தல், பசலை, நடுக்கம், கண்ணீர், குரற்சிதைவு என எட்டாகும். இவைகளும் மெய்ப்பாடென்றே கொள்ளப்படும். இவற்றை விறலென்றும் கூறுப. இவைகளே சுவைகளுக்கடியாம்.

விபாவங்களாற்றோன்றி, அநுபாவங்களால் வெளிப்பட்டு, சஞ்சாரீபாவங்களால் புஷ்டியடைந்துநிற்கும் ஸ்தாயீபாவமே (நிலையான கருத்தே) சுவையெனப்படும். இதனை வடநூலார் இரசமென்ப. எவ்வாறெனில் நகையை ஆசியம் என்றும், அழுகையைக் கருணையென்றும், இளிவரலை (அருவருப்பை)க் குச்சையென்றும், மருட்கையை (அதிசயத்தைக்கண்டதனாலுண்டாகும் பரபரப்பை) அற்புதமென்றும், அச்சத்தைப் பயாநகமென்றும், பெருமிதத்தைத் (உற்சாகத்தை அல்லது செய்வினையின் மனத்துணிவை) வீரமென்றும், உவகையை (புணர்ச்சிவிருப்பத்தை அல்லது காமத்தை)ச் சிங்காரமென்றும், வெகுளியை (பிறர்செய்யுந் தீங்கினாலாகும் மனக்கொதிப்பை அல்லது குரோதத்தை) ரௌத்திரமென்றும், சமநிலையை (விடயங்களிற் பற்றற்றுநிற்கும்நிலையை அல்லது சமத்தை)ச் சாந்தமென்றும் கூறுவர். இவைகளே நவரசமென்பன.

இந்நகைமுதலிய ஒன்பதும் அநுபவமுள்ளளவளவும் நிலைத்திருப்பனவாகலின் நிலைமெய்ப்பாடுகளென்று சொல்லப்படுகின்றன. ஏனைய மெய்ப்பாடுகள் அங்ஙனமின்றிக் கடலில் அலைபோலத் தோன்றித்தோன்றி மறைவனவாம்.

இங்ஙனமாகிய பலசுவைக்கும் பொதுவாய்நிற்கும் மெய்ப்பாடுகள் சஞ்சாரீபாவமென்று சொல்லப்படுகின்றன. இவற்றைப் பொதுமெய்ப்பாடென்பர். அவையாவன: வெறுப்பு, சோர்வு, குறிப்பு, அழுக்காறு, மதம், வருத்தம், சோகம், எளிமை, எண்ணம், மோகம்,

நினைப்பு, அமைதி, நாணம், நிலையின்மை, களிப்பு, பரபரப்பு, மழுக்கம், செருக்கு, இரக்கம், பேரவா, துயில், அறிவழிவு, சுழுத்தி, விழிப்பு, காய்தல், உள்ளக்கரவு, வெம்மை, உணர்வு, நோய், உன்மத்தம், துஞ்சல், அஞ்சுதல், விதர்க்கம் என்னும் முப்பத்துமூன்றுமாம்.

எச்சமாவது: ஒரு சொல்லேயாயினும், ஒரு குறிப்பேயாயினுங் கூட்டிப் பொருண்முடித்தல்வேண்டிநிற்பதாகும்.

பொருள்வகையாவது: இத்திணைக்கே இப்பொருள் உரித்தாவது என்னுமல் எல்லாத்திணைக்கும் பொதுவாய்நிற்குநிலைமையாகும்.

துறையாவது: உரைப்போரும் கேட்போரும் இன்றிக் கவி சொல்லும்புலவன் தானேகூறுவதாகும்.

இன்னும், இவ்வைந்திணைக்கோவையில், புள் முதலியவற்றாற் புலப்படும் உள்ளுறையுவமமும், வினை பயன் முதலியவற்றால் வெளிப்படநின்றுவிளங்கும் வெளிப்படையுவமமும், தெய்வம்முதலிய கருப்பொருட்கண்ணே பிறக்கும் இறைச்சிப்பொருளும் சொல்லப்படும்.

இத்தன்மையனவாகிய சிறப்பியல்புகள்வாய்ந்த கோவைப்பிரபந்தமோ ஐந்திலக்கணங்களையும் ஐயந்திரிபற முற்றக்கற்றுணர்ந்தவுணர்வினில்வல்லோர்களாலே அமைக்கத்தக்கதென்பது மதிநுட்பநூலோடுடையார்யாவராலும் அங்கீகரிக்கப்பட்டதொன்றேயாம்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௩௨-ஆம் தொகுதியின் ௩௩௨-ஆம்பக்கத் தொடர்ச்சி.]

சூளாமணிப்படலம்.

சீதை, தன்னை இராவணன் கவர்ந்துசென்றபோது, கழற்றி யெறிந்த ஆபரணங்களுடன் சேர்த்தெறியாமல், மங்கலியத்துக்கு அடுத்த அணியாக மதித்து அடக்கமாகவைத்திருந்த சூளாமணியை இராமனிடம் கொண்டுபோய்த் தன்னைக் கண்டதற்கு அடையாள மாகக் கொடுக்கும்படி அநுமான்கையிற்கொடுத்ததைக் கூறுவது. சூடாமணியென்னும் வடமொழித்தொடர், ட ள ஒற்றுமைபற்றிச் சூளாமணியென வந்தது. சூளாமணி - முடிமணி - தலையணிகளுள் தலைமையான அணி.

அநுமான் சீதையை எடுத்துப்போய் இராமனிடம் விடுத்திட எண்ணுதல்.

[அநுமான், தான் சீதையைக்கண்டபின்பும், அவளைத் துன் புற்றுக்கொண்டிருக்கவிட்டுப் போகலாகாதென்றும், அவளை இராமனிடம் கொண்டுபோய்ச்சேர்த்தலே செய்தற்பாலதென்றும் கருதி, அவளைநோக்கிக் கூறுகின்றான்:—

அநுமான் சீதையைநோக்கிக் கூறுதல்.

'என் விண்ணப்பத்தைக் கோபியாது செவியேற்றருள்வாயாக. இராவணன் உன்னைக்கொல்வேனென்று பயங்காட்டியபடி கொன்று விடுதல்கூடும். அப்படி அவன் கொன்றபின், அவனை வெல்வது, வீரியமாமேயன்றிக் காரியமாகாது. காரியம் கெடாது காத்துக் கொண்டுவீரியஞ்செலுத்தல் விவேகிகள்செயல். உன்னைக்கொண்டு போய் இராமபிரானிடம் சேர்ப்பேன். இச்சமயம் அதற்கு ஏற்றதா யிருக்கின்றது. நீ, இப்போதே, துன்பமொழிய, என் தோள்மேல் ஏறுவையேல், இடையே எங்குந் தங்காமல், இமைப்பொழுதில் ஏகி, இராமபிரான் எழுந்தருளியிருக்கும் குன்றிலே குதிப்பேன். அரக் கர் தொடர்வரேல், அவர்களை என் சினந்தீரக் கொன்றுதொலைப் பேன். உன்னை உடன்கொண்டுபோகாமல் வெறுங்கையோடு திரும்ப லாமோ? இராசனிடம் செல்வோன், ஏற்ற காணிக்கைகொண்டு

செல்லல்வேண்டும். இராசராசனனை இராமபிரானுக்கு உயிருக்குயிரான உன்னினும் உயர்ந்த காணிக்கை உண்டோ? உன் துன்பத்தை உடனே ஒழிக்காமல், எம்பெருமானிடம்போய், "உன் தேவி துன்புழந்துகொண்டிருக்கின்றாள்" என்று சொல்வேனேல், என் அடிமைத்தொழில் என்னும்? தேவியைக் கொண்டுவந்தேனென்று கூறாது, சும்மா, கண்டுவந்தேனென்று கழறுவேனோ?

இராவணன் உன்னைக் கவர்ந்ததனால், கோபத்தோடுகூடிய வீராவேசமும் கொடுந்துன்பமும் குடிகொண்ட நெஞ்சினனான இராமபிரான், துன்பம் நீங்கித் தேவிசமேதனாய், இங்கெழுந்தருளி இராக்கதரெல்லாரையும் கொல்லுதல், உன் பிரிவுத்துன்புடன் அவர்களைக் கொல்லுதலினும் சிறந்ததென்று செப்பவும்வேண்டுமோ? பிரிந்த ராமசீதையரைத் திரும்பச்சேர்த்தானென்னும்பேரும் பெருமையும் அடியேன் பெறும்படி இன்னருள்புரிந்து என் தோள்மேல் ஏறியருளுதி' என்றான்.

சீதை அநுமான்வேண்டுகோளை மறுத்துக்கூறுதல்.

'நீ சொல்லியபடி செய்தல், உனக்கு அருமையானதன்று; செய்து முடிக்கவும்செய்வாய். ஆயினும், அது, எனது பெரிய பேதைமையுடைய சிறிய பெண்புத்திக்குத் தக்கதன்றென்று தோன்றுகின்றது. என் சிறையை என் நாயகன் மீட்காமல், வேறெவரேனும் மீட்பரேல், அது, அவன் வில்லாண்மைக்கு வடுவாய் முடியாதோ? தேவர்க்குரிய *அவியைத் திருடிய நாய்போல, இராமபிரானுக்குரிய என்னை வஞ்சித்து வௌவிய நீசன்போல, நீயும் வஞ்சனைசெய்ய நினையலாமோ? என் நாயகனது விற்போரில் இராவணன் இறந்துவீழ என்னைக் காமித்துநோக்கிய அவன்கண்களைக் காகங்கள் உண்டபோதுதான், என் உயிர் உண்டு என்பதற்குரிய தாம். வெற்றித்தொனிவிளைக்கும் நாண் பூண்ட கோதண்டம் கொண்டு, இராமபிரான் இயற்றும் போரில், †கருத்துநாணற்ற அரக்கியர் கணவரையிழந்து கழுத்துநாண் அற்றாலன்றி, நாணினை

---

* அவி - தேவர்க்கு வேள்வித்தீயிற் கொடுக்கும் உணவு.

† கருத்துநாண் - மனவெட்கம்.

உள்ளிட்ட * நாற்குணங்களையுடைய என் பெண்மை, பெருமை யுடையதாகாது.

என் கற்பின் மாண்பினால், இராக்கதசமூகமன்றி எல்லாஉலகங் களையும், என் சொற்கொண்டு சுட்டிடுவேன். அவ்வாறுசெய்தால், யான் பகைவனாற் கவரப்பட்டதனால் எம்பெருமான் வீரத்துக்கு உற்ற குற்றம் தீர, அவன் விற்றொழில்புரிந்து வெற்றிபெற்று, என் சிறையை மீட்டற்கு இடமின்றாய்விடுமென்று சும்மா இருந்தேன்.

உன் வேண்டுகோளை யான் மறுத்தற்கு வேறும் ஒரு காரணம் உண்டு. அது யாதெனில், ஆறி அவிந்த தீப்போல, உன் ஐம் பொறிகளும் ஆறியமைந்தவைகளேயாயினும், சொல்லளவில் நீ ஆண் ஆதலால், ஆண்மக்களுள் என் நாயகன் ஒருவனே தீண்டுதற் குரிய என்தேகம் உன்னைத் தீண்டலாகாதென்பது. இராவணன் என்னைத் தொடமுடிந்திருந்தால், இவ்வளவு நீண்டகாலம் உயிரோ டிருந்திரேன். தீண்டலாகாமையாலன்றே, அந்தக் கீழ்மகன், யான் இருக்கின்ற இந்த இலைக்குடிசையை அடியோடு பேர்த்துக்கொண்டு வந்தான்? "மனமில்லாத மாதரைத் தொட்டால், மண்டைவெடித் திடக்கடவது" என்று பிரமதேவன் இராவணனுக்கு இட்ட சாபம் ஒன்று இருக்கின்றதென்று விபீடணன்மகள் திரிசடை என்பால் அன்பால் இயம்பியிருத்தலாலும், எம்பிரான் வில்வலியினால் என் னைச் சிறைமீட்கவேண்டுமென்ற விருப்பினாலும், என் கற்பின் தூய் மையை உலகோர் அறிய மெய்ப்பித்துக்காட்டவேண்டுமென்ற கருத்தினாலும் இவ்வளவுகாலம் என் உயிரை விடாது வைத்திருந் தேன்.

என் கற்பினால் இராக்கதரை அழியாமைக்குக் காரணம், யான் இறந்தேனாயினும், என்னை வருத்தினோரை என் நாயகன் வென்று அவனுடைய வில்லாண்மை கறைபடாமற் காக்கவேண்டு மென்று கருதியதென்று முன்னே சொன்னேன்.

யான் இருக்கின்ற இந்த இலைக்குடில் இளையபெருமாள் இயற் றியதென்பதை, உண்மையை நுண்மையாக உணரும் உன் கண்

* நாற்குணம் - மடம் நாண் அச்சம் பயிர்ப்பு.

கொண்டு கண்டுகொள்ளுதி. என் நாயகனது பசிய திருமேனி போலப் பச்சிலைகள் எங்கும் பரவப்பெற்றும், அவனுடைய சிவந்த கண்ணும் வாயும் கையும் காலும் போலச் சிவந்த மலர்கள் இடையிடையே மலரப்பெற்றும் விளங்குகின்ற அந்தத் தாமரைத் தடாகத்தில் நீராடவும் பருகவும் போகும்பொழுதொழிய எப்பொழுதும் இந்த இலைக்குடிசையிலேயே இருந்துவருகின்றேன். நீ, என்னை எடுத்துச்செல்ல எண்ணிய எண்ணத்தைக் கைவிட்டு, இனி, இராமபிரானிடம் திரும்பிச்செல்வதே காரியமென்று கருதுவாயாக' என்றாள்.

அநுமான் சீதை செப்பியதை ஒப்பி, இராமனிடம் யாதுசொல்லவேண்டுமெனல்.

அநுமான் சீதை சொன்னதை ஏற்றுக்கொண்டு 'உலகநாயகனுடைய கோப்பெருந்தேவியென்பதற்கு ஏற்பனவே கூறினாய்! எம்பெருமானிடம் யான் யாது தெரிவிக்கவேண்டுமென்பதைத் திருவாய்மலர்ந்தருள்க' என்றான்.

சீதை கூறல்.

'யான், இங்கே, இன்னும் ஒருமாசகாலம் உயிரோடிருப்பேன். அதற்குள் இராமபிரான் வரவில்லையானால், அதன்பின்—அவன்மேல் ஆணை!—உயிரை விட்டுவிடுவேன். இதை உறுதியாக உன் உள்ளத்துள்ளே ஊன்றவைத்துக்கொள்வாயாக' என்று சீதை கூறிப் பின்னுங் கூறுகின்றாள்:—]

109 '"ஆரம் தாழ்திரு மார்பற் கமைந்ததோர்
தாரம் தான்அல ளேனும், தயா எனும்
ஈரம் தான்அகத் தில்லையென் றாலும்,தன்
வீரம் காத்தலை வேண்"டென்று வேண்டுவாய்.'

இ-ள். '"(யான் சிறைமீட்கப்படுதற்குத் தகுதியில்லேனாய்) இராமபிரானுக்கேற்ற இல்லாளல்லளாய்ப்போனாலும், (எத்தொடர்பும் இல்லாத எதிலார்பாலும் இயல்பாக அவனுக்குள்ள) தண்ணளி (கூட என்திறத்தில்) இல்லாதேபோனாலும் (—போகட்டும்—தன் காப்பில் இருந்தவளைக் கவர்ந்து சிறைவைத்தவனைக் கொன்று சிறைமீட்குதல் தன் வீரத்தைக் காத்தற்பொருட்டுச் செய்யக்

கடவதாதலால், அதைச் செய்து) வீரத்தைக்காத்தலை விரும்புவாய்" என்று (என் வேண்டுகோளாக நீ அவனை) வேண்டிக்கொள்வாயாக.'

ஆரம் தாழ் திரு மார்பன்-மாலை தங்கிய அழகிய மார்பினனான இராமன். தயா - தயை. ஈரம் - குளிர்ச்சி. 'தண்(-குளிர்ச்சியான) அளி' (-கிருபை) என வழங்குவது, 'தயா எனும் ஈரம்' எனப்பட்டது. ஈரமென்றமட்டில் அமையாது, ஈரந்தான் என்றது, மனைவிக்குரிய காதலில்லாமற்போனாலும் மற்றவர்க்குரிய ஈரமும் எனப் பொருள்படலால், 'தான்' இழிவுசிறப்புப்பொருளுடையது.

சீதை, தன்னை இராமன் வெறுத்துச் சிறைமீட்கவேண்டாமென்று தீர்மானித்திருந்தாலும் அந்தத் தீர்மானத்தை அவசியமாக மாற்றும்படி, அவன் தன்னைச் சிறைமீட்கானேல், தன் வீரத்தைக் காவானவானென்பதைக் குறிப்பித்து, அவனுடைய வீரம்பற்றிய மானவுணர்ச்சியைக் கிளர்வித்து, சிறைமீட்சிமுயற்சியைத் தீவிரமாகச் செய்யும்படி தூண்டி, அவன் தன்னைச் சிறைமீட்க வேண்டுமென்னும் விருப்பம் நிறைவேறும்படி சாதுரியமாகக்கூறிய நயம் பாராட்டத்தக்கது.

110. 'ஏத்தும் வென்றி இளையவற் கிதொரு
வார்த்தை கூறுதி: "மன் அருளால் எனைக்
காத்தி ருந்த தனக்கே கடன், இடை
கோத்த வெஞ்சிறை வீ"டென்று கூறுவாய்.'

இ-ள். '(எல்லாராலும்) புகழப்பட்ட வெற்றி (ப்பிரதாபத்தை)யுடைய இளையபெருமாளுக்கு இந்த வார்த்தையைச் சொல்வாய்! (அது யாதெனில்,) "யான் அவன்பாதுகாப்பிலிருக்குமத்தியில் ஏற்பட்ட எனது கொடிய சிறையை விடுதலைபுரிகுதல், இராமபிரானது ஆணைப்படி என்னைக் காத்திருந்த அவனுக்கே கடமையாம்" என்று சொல்லுவாய்' (என்று யான் உன்னிடம் சொன்னேன் என்பது).

ஏத்துதல் - புகழ்தல். வென்றி - வெற்றி. அருள் - அருளிப்பாடு - ஆஞ்ஞை - கட்டளை. கடன் - கடமை. 'ஆர்த்தவென்றி', 'காத்திருந்தவற்கே கடனேன்றிடை' பிரதிபேதம்.

'ஏர்' என்பதற்கு எழுச்சியென்றும் 'ஏர்த்த' என்பதற்கு 'எழுச்சியையுடைய' வென்றும் பொருளுண்மையால், 'ஏர்த்த வென்றி' என்பது உண்மைப்பாடமாயிருந்திருக்கலாமென்றும், பிரதியெழுதுவோர் அப் பாடத்தின் பொருளறியாமையால் 'ஆர்த்த வென்றி' யென்றும் 'ஏத்தும்வென்றி' யென்றும் மாற்றியெழுதினரென்றும் தோற்றுகின்றது.

'ஏத்தும் வென்றி இளையவற் கிதொருவார்த்தை கூறுதி' என்பதில் கம்பர் அமைத்திருக்கும் கட்டுரைச்சுவை கவனிக்கத்தக்கது.

இதன்முன் சீதை, தன் சிறைமீட்சியை இராமன் தீவிரமாகச் செய்யும்படி தூண்டுதற்குரிய நியாயத்தைச் சொன்னாள். இப்போது, தன்னைச் சிறைமீட்கும்பொறுப்பு, தன்னைக் காத்தலைத் தம்பியிடம் ஏற்பித்திருந்த இராமனுக்கிருப்பதைக்காட்டிலும் அதிகமாக, அக்காத்தலை ஏற்றுக்கொண்டிருந்த இலக்குமணனுக்குண்டென்னும் நியாயத்தை உரைத்தாள். இராமனுக்காகக் கூறியது ஒருவகைச் சாதுரியமும் இலக்குமணனுக்காகக் கூறியது வேறுவகைச் சாதுரியமும் அமைந்திருத்தல் கவனிக்கத்தக்கது.

111 '"திங்கள் ஒன்றில்என் செய்தவம் தீர்ந்ததால்;
இங்கு வந்தில னேயெனின், யாணர்நீர்க்
கங்கை யாற்றங் கரைஅடி யேற்குத்தன்
செங்கை யாற்கடன் செய்"கென்று செப்புவாய்.'

இ-ள். '"(இது முதலாக) ஒருமாசகாலத்தோடு (இராமபிரான்வந்து என்னைச் சிறைமீட்பதற்காக என் பிராணனை விடாதிருப்பேனகவென்று யான் மேற்கொண்ட) என் விரதம் முடிந்துவிடும். அதற்குள் (அந்த) எம்பிரான் வாரானேல், (யான் இறந்திடுவேன். இறந்த) எனக்கு அவன் (அயோத்திக்குத் திரும்பிப் போகும்வழியில்) கங்கைக்கரையில் (எள்ளும் நீரும் இறைக்கும்) அந்தியகருமத்தைச்செய்து முடித்திடுக" என்று செப்புவாய்.'

திங்கள் - மாதம். செய்தவம் - (இராமன் வருதற்காக உயிரைவிடாதுவைத்துக்கொண்டிருக்கும்) விரதம். 'தவம்' என்பது ஆகுபெயராய்த் தவப்பயனை உணர்த்துவதாகக்கொண்டு, 'செய்

தவம் தீர்ந்தது' என்பதற்கு, முற்பிறப்பிற் செய்த நல்வினைப்பயனுக நான் ஆயுளோடிருக்குங்காலம் முடிந்துவிடுமென்றும் பொருள் கூறலாம். யாணர் - அழகு; புதுமை. யாணர் நீர்க் கங்கை - அழகிய நீரையுடைய கங்கை; புதுவருவாய்நீரையுடைய கங்கை. அடியேற்கு - (இராமனுக்கு) அடியவளாகிய எனக்கு. கடன் - அந்தியகருமம் (தமிழ்ச்சொல்லகராதி) - சாச்சடங்கு.

சீதை, வாக்குவல்ல அநுமானுடைய மனோதைரியமூட்டும் வசனங்களைக் கேட்டதனுலும் அவனுடைய, உலகமுழுதையும் ஒருங்கொழித்தற்கு ஏற்ற இயற்கைப் பேருடற் காட்சியைக் கண்டதனுலும் அத்தியந்த தைரியமும் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அடைந்திருந்தாளென்பதை,

'மாண்டே னெனினும் பழுதன்றே: இன்றே மாயச் சிறைநின்றும்
மீண்டேன்: என்னை ஒறுத்தாரைக் குலங்க ளோடும் வேரறுத்தேன்:
பூண்டேன்: எங்கோன் பொலங்கழலும்: புகழே யன்றிப் புன்பழியும்
தீண்டேன்' என்று மனம் மகிழ்ந்தாள் திருவின் முகத்துத் திருஅன்னுள்.

என்றதனுல் தெரிந்தோம்.

மிக்கமுயற்சிசெய்தாரும்,நீண்டநேரம் விழித்திருந்தாரும், எதிர்ச்செய(Reaction)லாக, முறையே, மிக்க தளர்ச்சியடைதலும் நெடிது துயிலுதலும் இயற்கைநிகழ்ச்சிகளாயிருத்தல்போல, மிக அதிகமான தைரியமும் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அடைந்த சீதை எதிர்ச்செயலாக அதைரியமும் ஏக்கமும் துக்கமும் மிகவும் அதிகமாக அடைந்தாளென்பதை இந்தக் கவியிலும் இதற்கடுத்த ஆறுகவிகளில் 'வந்தெனை' யென்றதொழிந்தவற்றிலும் காணலாம். (இந்த *உள்ளத்தெதிர்ச்சேயல்விவரணம், இயற்கைநிகழ்ச்சிவருணனையாய், மனத்தத்துவத்தைப் பற்றிக் கம்பர் நன்கறிந்திருந்ததைத் தெரிவிக்கின்றது.)

'வந்தெனை' என்ற கவியும், தனக்கு எச்செல்வத்தினும் சிறந்தசெல்வமாய் ஏனையமாதெவளாலும் பகிர்ந்துகொள்ளப்படாததான தன் கணவனது முழுக்காதலாம் விழுச்செல்வத்தைப் பெற்ருளொருத்தி தான் இறத்தலால் அந்த அரும்பெறற் காதற்பயனை

* Description of mental reaction.

இழப்பதுபற்றி வருத்தமுறுவதைக் குறிப்பிப்பதால், அந்தக்கவியும், அதன் முன்னும் பின்னுமுள்ள கவிகள்போல, சீதையின் துக்கத்தைத் தெரியச்செய்வதேயாம். அந்தக் கவியிற் கூறியதையும் அவள் துக்க உணர்ச்சியோடு தான் சொல்லினளென்பது, இப்பிறப்பில் இழந்த இராமன்சேர்க்கையை மறுபிறப்பில் அடைய வரம் வேண்டுதலை மொழியும் 'ஈண்டுநான்' என்ற அடுத்த கவியினால் தெளிவாம்.

தொடுத்துத் துக்கத்தைச் சரீரென நெஞ்சுட்பாய்ந்து நிறையச்செய்யும் இந்தத் 'திங்களொன்றில்' என்ற கவி முதலான ஏழு கவிகளும் வாசிப்போர்மனத்தைக் கரைத்துக் கண்ணீர் வெள்ளமாகப்பெருகச்செய்யும் பரமதுக்ககரமான பாட்டுக்களென்பது, அவைகளை அவரவர் படித்து அநுபவித்தறியக்கூடியதேயன்றி, எடுத்துச்சொல்லித் தெரிவிக்கவொண்ணாததாயிருத்தல் சொல்ல வேண்டியதில்லை.

112. 'சிறக்கும் மாமியர் மூவர்க்கும் "சீதை ஆண்
டிறக்கின் றாள்தொழு தாள்" எனும் இன்னசொல்,
அறத்தின் நாயகன் பால் அருள் இன்மையால்
மறக்கு மாயினும், நீமற வேல் ஐயா !'

இ-ள். '"சீதை, இலங்கையில் இறக்கின்றவள், மாமிமார் மூவர்களுக்கும் தெண்டம் சமர்ப்பித்தாள்" என்ற இந்த வார்த்தையை (நீ இராமபிரானிடம் சொல். என்திறத்தில், அந்தத்) தருமநாயகன்பால் கருணையில்லாமையால் (அவன், அதை, என் மாமிமாருக்குச் சொல்ல) மறப்பானாலும் (நீ அவனுடன் அயோத்திக்குச் சென்றபோது, அவர்களிடம் சொல்ல) மறந்திடாதே' (என்று சீதை, மாமிமாரைத் திக்குநோக்கித் தெண்டனிட்டுக்கொண்டு சொன்னாள்.)

கோசலை கைகேயி சுமித்திரை மூவரும் தசரதனுடைய மற்றைய மனைவியர்போலாது பட்டமகிஷிகளாம் சிறப்புடையாராதலால், அம்மூவரையும் 'சிறக்கும் மாமியர்' என்றாள். மறவேல் - மறவாதே. மறக்கும் - மறப்பான்; ஆண்பாற்படர்க்கையில் வந்த 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைச்சொல்.

113. ' "வந்தெனைக்கரம் பற்றிய வைகல்வாய்,
இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலும் தொடேன்" என்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்.'

இ-ள். ' "(இராமபிரான் மிதிலாநகரத்துக்கு) வந்து என்னைப் பாணிக்கிரகணம்பண்ணினதினத்தில் (என்னைத் தனியே சந்தித்த போது) இந்தச்சென்மத்தில் உன்னையன்றி வேறொரு மாதையும் சிந்தையினாலுங்கூடத் தீண்டமாட்டேன்" என்ற நல்வாத்தை அளித்தசெய்தியை (பக்கத்துள்ளார் காதுகேளாமல்) அவன் காது (மட்டும்) கேட்கும்படி (இரகசியமாகச்) சொல்வாயாக' (என்று சீதை சொன்னாள்.)

வார்த்தை - செய்தி (தமிழகராதி). 'தான் பிறன்கைப்பட்டமை பற்றி இராமபிரான் ஒருகால் தன்னை உபேக்ஷித்து வேறு மணஞ் செய்துகொள்வனோ வென்னும் ஐயத்தினால், சீதை, அப்பிரான் முன்கூறியுள்ள வார்த்தையை அறிவுறுத்துமாறு அநுமானுக்குக் கூறினள். கல்யாணத்திற்குப் "பாணிக்கிரகணம்" (கைப்பிடித்தல்) என ஒரு பெயருள்ளதனால் மணஞ்செய்துகொண்ட என்ற பொருளில் "கரம்பற்றிய" என்றார். சிந்தையால் தொடுதல் - எண்ணுதல்; அதனையும் செய்யேனெனவே உடம்பினால் தீண்டாமை கைமுதிக நியாயத்தால் தானே பெறப்படும்.' கைமுதிகநியாயம் - 'அது அப்படியானால், மற்றதனைப்பற்றிக் கூறுவதேன்' என்னும் வாதநெறி (தமிழகராதி).

சீதையை, அநுமான், இராமனிடம் யாது சொல்லவேண்டு மென்று கேட்டதற்கு, அவள், அவன் எதிர்பார்த்ததைச் சொல்லாமல், தன்னுடைய நம்பிக்கையின்மைபற்றியே கூறிவருகையில், இந்தக்கவியிற் கூறியது, அநுமான் அவளைக் கண்டதற்கு அடையாளமாகக் கூறத்தக்கதாயிருக்கின்றதாயினும், அவள் அவ்வாறு கருதிக் கூறவில்லையென்பது, முன்னும் பின்னுங் கூறியவைகளோடு சேர்த்துப் பார்த்தால் தெளிவாம். அவளை அநுமான் கண்டதற்கு அடையாளமாக இராமனுக்குக் கூறும்படி அவள் கூறியவை, இப் படலத்தில் 'நாகமொன்றிய' என்ற எ—ஆம் கவி முதலிய ஏழு கவிகளிற் கூறப்பட்டவையே.

114\. ' "ஈண்டு நான்இருந் தின்னுயிர் மாயினும்,
மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்
தீண்ட லாவதொர் தீவினை தீர்வரம்
வேண்டி னாள்தொழு" தென்று விளம்புவாய்.'

இ-ள். ' "நான் இங்கே (சிறைமீட்கப்படாமல்) இருந்து இறந்துபோனாலும், திரும்பச் சென்மமெடுத்துவந்து எம்பெருமான் திருமேனியைத் தீண்டும்படியான நல்வரத்தைக் கும்பிட்டுவேண்டினேன்" என்று கூறுவாயாக' (என்று இராமனிருந்த திசைநோக்கித் தொழுதுகொண்டு சீதை சொன்னாள்.)

ஈண்டு - இங்கே - இலங்கையிலே. 'மீண்டு பிறந்துவந்து' என இயைக்க.

சீதை, அநுமானைநோக்கி, 'இராமபிரான், "இருமாதரைத் தொடேன்" என்று எனக்குச்செய்துகொடுத்திருக்கிற பிரதிக்கினைப்படி, வேறுமாதை மணஞ்செய்யானாயினும், "பிறன்மனை எய்திய பெண்ணைப் பேணுதல் திறனலதென்று" என்னைச் சிறைமீட்கானாயினன். அவன் வேண்டாதபடி பழிப்புக்கிடமாய்விட்ட இந்தத் தேகத்தைத் துறந்து, இறந்து, மறுபிறப்புப்பிறந்து, பழிப்பற்ற தேகத்துடன் வளர்ந்து, அவன் பிரதிக்கினைக்குப் பங்கமின்றித் திரும்பவும் அவன் தேவியாகும் வரத்தை வேண்டினேனென்று அவனிடம் தெரிவிப்பாயாக' என்றாளென்றவாறு.

சீதை, இராமன் தன்னைச்சிறைமீட்கவில்லையென்று வெறுத்து விசனப்பட்டுக்கூறும் மத்தியிலுங்கூட அவளுக்கு அவன்பாலிருந்த ஆழ்ந்த அன்பை அவளறியாமலே வெளிப்படுத்துவது இக்கவியின் உட்கிடைக்கருத்தாயிருத்தல் காண்க.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

புறப்பாட்டின் முறைவைப்பு.

தமிழ்மக்களுடைய பழைய வரலாறுகளையறிவிக்கும் கல்வெட்டு, நாணயம், கட்டடம், அந்நியநாட்டாரின்வாக்குமூலம் முதலிய ஆதாரங்கள் சில. எனவே பழந்தமிழர்வரலாறுகளை அறிந்துகொள்வதற்குப் பண்டை இலக்கியங்களையே பெரிதும் ஆதாரமாகக்கொள்ளவேண்டியிருக்கிறது. நமக்கு இதுகாறும் கிடைத்தவைகளில், தொல்காப்பியமும் எட்டுத்தொகையும் மிகப் பழையநூல்களாகும். எட்டுத்தொகைநூல்களில், பதிற்றுப்பத்தும் புறநானூறும் ஒழிந்த ஏனைநூல்கள் அகப்பொருளையேபற்றிக்கூறுதலின், அவைகள்மூலம், பண்டையரசர் குறுநிலமன்னர் வள்ளல் முதலியோர்செய்திகளைக் குறிப்பாகவும் இடைப்பிறவரலாகவும் ஆங்காங்கு உணர்ந்துகொள்வதன்றித் தெளிவாக அறிந்துகொள்ள இயலாது. பதிற்றுப்பத்து என்னும் நூல், சேர அரசர்களின் செய்தியைமட்டுமேகூறும். புறநானூறு என்னும்தொகைநூல்தான் தமிழ்நாட்டிலிருந்த முடியுடைவேந்தர், குறுநிலமன்னர், வள்ளல், வீரர், புலவர், சேனைத்தலைவர் அமைச்சர் முதலாயினோர் சரித்திரங்களையும் அக்காலத்தாரின் நடை யுடை நாகரிகத்தையும் தெளிவாக விளக்குகிறது. தமிழ்மக்கள் பழைய வரலாறுகளை அறிந்துகொள்வதற்கு ஏனைய தொகைநூல்களினும், இப்புறப்பாட்டே பெரிதும் உதவியாயிருக்கிறது. இந்நூற்செய்யுட்களைப் பாடினோரும், செய்யுட்களாற் பாடப்பட்டோரும் ஒருகாலத்தாரல்லர்; ஒருகுலத்தாரல்லர்; ஒருசாதியாரல்லர்; ஓரிடத்தாருமல்லர். பாடினோரினும் பாடப்பட்டவர்களினும் அந்தணர் சிலர்; அரசர் வணிகர் வேளாளர் பலர். பெண்பாலாரினும் சிலர் பாடியிருக்கின்றனர்.

இந்நூலின் செய்யுட்களையெல்லாம் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னாரென விளங்கவில்லை. இச்செய்யுள்களெல்லாம் எம்முறைபற்றித் தொகுக்கப்பட்டன என்பதை உறுதியாக அறிவது மிகவும் இயலாததாயிருக்கிறது. தொகுக்கப்பட்ட முறையைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்ததில் எனக்குச் சில உண்மைகள் விளங்குகின்றன. அவை யாவும் முடிவான உண்மைகளென்று கொள்வதற்

கில்லையாயினும், அவைகள் வெறும் ஊகங்களேயென்று கருதத் தக்கனவாயினும், கற்றோர் ஆராய்ச்சிக்குரியனவாதலின் அவற்றை இங்குச் சுருக்கியெழுதத் துணிந்தேன்.

புறப்பாட்டிலுள்ள நானூறுபாடல்களும் கிடைத்தபின்னர் ஒருவர் இந்நூலைத் தொகுத்திருந்தால், சிலமுறைகளைப் பின்பற்றி அன்னார் இந்நூலைத் தொகுத்திருத்தல்கூடும். அம்முறைகளாவன:-

(1) ஐங்குறுநூறு புலத்துறைமுற்றிய கூடலூர்கிழாராலும், கலித்தொகை நல்லந்துவனாராலும், பிற்காலத்தே திணைபற்றித் தொகுக்கப்பட்டதுபோலப் புறநானூற்றையும் புறத்திணைமுறை பற்றி வகுத்திருக்கலாம். அவ்வாறு புறநானூறு வகுக்கப்படாத தற்குச் சமாதானம் சொல்லவுங்கூடும். ஐங்குறுநூற்றிலும் கலித்தொகையிலும் ஒருதிணைமுழுதும் ஒரேபுலவராற் பாடப்பட்டமையின் அந்நூல்களைத் திணை திணையாகத் தொகுத்தனர் என்பதே இதற்குச் சமாதானமாகும். அவைகளிலும் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்று கலித்தொகையில் வைத்த முறையை விட்டு மருதம், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற வரிசையை ஐங்குறுநூற்றிற் கையாண்டகாரணம் நன்குவிளங்கவில்லை. அந்நூல்களிற் பாடியபுலவர்களின் காலவரிசைப்படி முன்பின்னாக வகுத்திருக்கலாமோ என்று கொள்வதற்கும் சிறிதும் இடமில்லை. காலத்தால் முந்தியபுலவர்களின் பாடல்கள் பிந்தியும், காலத்தாற் பிற்பட்டவர்களின்பாடல் முந்தியும் வைக்கப்பட்டிருத்தலே இதைவிளக்கப் போதியசான்றாகும். புறநானூற்றில் ஒரேதிணையையும் ஒரே துறையையும் பற்றிப் பலபுலவர்கள் பாடியிருத்தலின் இந்நூலைத் தொகுத்தோர் நற்றிணை அகநானூறு முதலிய நூல்களைத்தொகுத்தோர் செய்ததுபோலத் திணை துறை முறைப்படி வகுக்கவில்லையெனக்கொள்ளலாம். ஒரே திணையைப் பல புலவர்கள் பாடியிருப்பினும், திணைமுறைப்படி வகுத்தல் இழுக்காகாது. இவ்வாறு பாடியிருத்தல் திணைமுறைப்படி வகுக்கத் தடையுமாகாது.

(2) பாடினோர்காலவரிசைப்படி நூலை வகுக்கமுயற்சிக்கக் கூடும். ஆனால், புறப்பாட்டில் ஒரேபுலவர் பாடிய பாடல்களே ஒன்றாகச் சேர்க்கப்படவில்லை. உதாரணமாகக் கபிலர்பாடல்கள்,

8, 14, 105—124, 200—202 எனப் பலவாறாகச் சிதறியிருத்தல் காண்க. பிற்காலத்தே தொகுத்தவருக்குப் புலவர்களின் காலத்தைக் கண்டுபிடிப்பது இயலாததாயிருந்திருக்கலாம். புலவர்களின் காலவரிசைப்படி வகுக்கப்படாததற்கு மேற்கூறியதே காரணமாயிருத்தல்கூடும்.

(3) பாடப்பட்டோரின் காலவரிசைப்படி வகுக்க முயற்சிக்கலாம். உதாரணமாகச் சேரமான் கடுங்கோவாழியாதனைப்பற்றிய பாடல்கள் 8, 14, 338 என்றும், பாரியைப்பற்றிய பாடல்கள் 105-120, 158, 176, 200, 201, 202, 236 என்றும் வரிசையின்றித் தொகுக்கப்பட்டமையின், தொகுத்தோர் இம்முறையைக் கையாள முயற்சிக்கவில்லையென்பது நன்குவிளங்குகிறது. பாடப்பட்டோரின் காலத்தையறிவதிலிருந்த கஷ்டமே இவ்வாறு வகுக்கப்படாததற்குக் காரணமாயிருக்கலாம்.

பாடினோர், பாடப்பட்டோர் இவர்களின் காலவரிசைப்படி பிற்காலத்தே இந்நூலைவகுப்பது இயலாததாயினும், நானூறுபாடல்களும் கிடைத்தபின்னர் ஒருவர் இந்நூலைக் கிடைத்தவாறே வெளியிடாது தொகுத்திருந்தால், ஒரேபுலவர் பாடல்களையோ, ஒரே அரசனை அல்லது வள்ளலைப்பற்றிக் கூறும் பாடல்களையோ இப்படிப் பல இடங்களிற் சிதறவிட்டிருக்கமாட்டார். அவைகளையெல்லாம் ஒன்றுசேர்த்திருப்பார். அவ்வாறு செய்யாதது ஆழ்ந்துசிந்திக்கத்தக்கது.

(4) பொருள்பற்றிப் பாடல்களை வரிசைப்படுத்தமுயற்சிக்கலாம். அவ்வாறு எப்பொருள்முறைபற்றியும் பாடல்கள் வகுக்கப்பட்டனவாக இதுகாறும் விளங்கவில்லை. உதாரணமாக அரசர்களுக்குப் புலவர்கள் செவியறிவுறுத்துவதைக்கூறும் பாடல்கள் ஒன்றாகச்சேர்க்கப்படாமற் சிதறிக்கிடக்கின்றன.

தற்பொழுது கிடைத்திருக்கிற நானூறுபாடல்களும் கிடைத்த பிறகு ஒருவரால் இந்நூல் தொகுக்கப்பட்டதாயின் இந்நான்கில் எதையாவது ஒன்றைக்கருதி வகுத்திருக்கலாம். மேற்கூறியமுறைகள் ஒன்றுமின்றி இந்நூல் தொகுக்கப்பட்டிருத்தலின், ஒருவரால் தொகுக்கப்பட்டதோ இல்லையோ என்று ஐயம் உண்டாகிறது. அல்லது ஒருவர் தமக்கு முன்னோர் பலர் தொகுத்திருந்தபடியே

தாமும் தொகுத்தனர் எனக்கொள்ள இடமுண்டாகிறது. அவ்வாறு முன்னோர் பலர் தொகுத்திருந்தார்களாயின் எம்முறையைக் கொண்டு பாடல்களை வகுத்தனர் எனக் காணமுயல்வது பயன் தருவதோர் ஆராய்ச்சியாகும்.

இது நிற்க. புறப்பாட்டின் நானூறுபாடல்களையும் மொத்தமாக எடுத்து ஆராய்வதைவிட்டுச் சிலசிலபகுதிகளாக ஆராய்ந்து பார்ப்போம். எந்நூலுக்கும் கடவுள்வாழ்த்து முற்படவைக்கப்படுமாதலின், ஏனைய நான்குதொகை நூல்களுக்கும் பாரதம்பாடிய பெருந்தேவனார் இயற்றிய பாடல்கள் முற்படவைக்கப்பட்டன போல, இந்நூலிலும் கடவுள்வாழ்த்துச்செய்யுள் முதலில் வைக்கப்பட்டது. அதைநீக்கி ஏனையபாடல்களைமட்டும் ஆராய்ச்சிக்கெடுத்துக்கொள்ளலாம்.

(1) இரண்டு முதல் 85ஆம் பாடல் முடிய சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடைமன்னர்வரலாறுகள்மட்டுமே கூறப்பட்டிருக்கின்றன. குறுநிலமன்னர் வள்ளல் வீரர் அமைச்சர் முதலிய யாரைப் பற்றிய பாடல்களும் இடையே சேர்க்கப்படவில்லை.

(2) இரண்டுமுதல் பதினாறு முடியவுள்ள பாடல்களை உற்றுநோக்கினால் அவைகளில் ஒருமுறையான வரிசை காணப்படுகிறது. இரண்டாவதுபாடல் சேரனையும் மூன்றாவதுபாடல் பாண்டியனையும் நான்காவதுபாடல் சோழனையும்பற்றிக் கூறும். இப்படியே முதல் பதினைந்துபாடல்கள், சேரனுக்குப்பின் பாண்டியன், பாண்டியனுக்குப்பின் சோழன் - அதாவது - சேர பாண்டிய சோழர் என்ற வரிசையிற் கோக்கப்பட்டிருக்கின்றன. தலைச்சங்கப்புலவராகக்கருதப்படும் முரஞ்சியூர்முடிநாகராயர் காலத்தால் மிகப் பழைய புலவராதலின், இவர் பாடிய செய்யுள் முதலாவது வைக்கப்பட்டது. சேர அரசர்களில், பாரதப்போரில் பாண்டவர் கௌரவர் ஆகிய இருவர் படைகளுக்கும் மிக்கஉணவை வரையாது அளித்தவனும் காலத்தால் மிகப் பழமையுடையவனுமான சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனை, இப்புலவர் நேரில் பாடியதாக இப்பாடல் கூறுதலின் முதலில் இது வைக்கப்பட்டது போலும். இச்சேரன் பாண்டவர் கௌரவர் ஆகிய இருவர்படைக்கும் உணவளித்தசெய்தி சிலப்பதிகாரத்திலும்,

"ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த—சேரன்"

என்ற அடிகளால் உணர்த்தப்படுதல் காண்க. அன்றியும், சேர வரசனை முற்படுத்திக்கூறுதற்கு வேறுசில நியாயங்களும் உண்டு. சோழ பாண்டிய வமிசமூலம் இன்னதென்றுகூறிப்போந்த பண்டை நூல்கள் சேரவமிசத்தின்மூலத்தைமட்டும் கூறாதுவிடுத்ததிலிருந்து இச்சேரர்மரபு ஏனையமரபுகளினும் பழமையானதென்றே ஊகிக்கவும் இடமுண்டு. வானவர் என்ற பெயரால் பண்டைநூல்களும் நிகண்டுகளும் இவரைக் குறிக்கின்றமையின் இவ்வமிசம் சோழ பாண்டிய வமிசங்களைப்போல ஆதியில் தெய்வசம்பந்தம் பெற்றதென்பது நன்கு விளங்குகிறது. சேரமரபின் பழமையை வலியுறுத்த மற்றொரு வழக்கும் உண்டு. சொல்வழக்கிலுள்ள "சேர சோழ பாண்டியர்" என்னுந் தொடர் சேரரையே முற்படக் கூறுவது மேற்கூறிய கொள்கையைப் பின்னும் வலியுறுத்தும். சிறுபாணாற்றுப்படையிலும் குட்டுவன் (சேரன்), செழியன் (பாண்டியன்), செம்பியன் (சோழன்) என்றுகூறும்முறை காணப்படுவது இங்குச் சிந்திக்கத்தக்கது. இதைச் சிறுபாணாற்றுப்படையில் 49, 65, 82-ஆம் அடிகளிற் காண்க. தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணையியலிலும் "போந்தை வேம்பே யாரென வரூஉ—மா பெருந் தானையர்" எனச் சேரர்மாலையை முற்படவைத்துக் கூறியதும் நோக்கத்தக்கது. இக்காரணங்களினாலே சேர அரசர்களைப் பற்றிக்கூறும் பாடல், முதற் பதினைந்து பாடல்களில் ஒவ்வொரு மூன்றுபாடல்களிலும் முதலாவதாக வைக்கப்பட்டிருக்கிறது.

பாண்டியர்கள் ஆதரவில் முச்சங்கங்களும் நிகழ்ந்தமையாலும், அவர்கள் ஆதரவில் இரண்டாஞ்சங்கம் நடந்த கபாடபுரம், வடமொழியில் மிகப்பழையகாவியமாகிய வான்மீகிராமாயணத்திற் கூறப்பட்டிருத்தலாலும், பாண்டியர்மரபு சோழர்மரபைவிடப் பழமையாயிருத்தல்கூடும். அதனால் பாண்டிய அரசர்களைப்பற்றிக் கூறும்பாடல் இரண்டாவதாக வைக்கப்பட்டதுபோலும். எனவே 2-முதல் 16-வரையிலுமுள்ள பதினைந்து பாடல்கள் சேரர் பாண்டியர் சோழர் எனப் பாடப்பட்டார் வரிசையில் தொகுக்கப்பட்டன. இதனால் நமக்கு விளங்கும் உண்மையை அல்லது ஊகத்தைக் கடைசியில் ஆராய்வோம்.

(3) 86 முதல் 181-ஆம் பாடல்முடியப் பாடப்பட்டோர் குறுநிலமன்னர் வள்ளல் முதலியோர்களேயாவர். முடியுடைவேந்தர்களைப்பற்றிக்கூறும் பாடல் ஒன்றாயினும் இவற்றோடு கலக்கவில்லை.

(4) 182 முதல் 195 முடியவுள்ள பாடல்கள் யாரையும்பற்றிக் கூறவில்லை. அப்பாடல்கள் எல்லோர்க்கும் பொதுவாய் நீதியொழுக்கங்களையுணர்த்துகின்றன.

(5) 195 க்குமேலுள்ள பாடல்களெல்லாம் ஒரு முறையையும் அநுசரித்து வகுக்கப்பட்டனவாகத்தெரியவில்லை. முடியுடைவேந்தர்களைப்பற்றியும், வள்ளல் வீரர் முதலியோர்களைப்பற்றியும், நீதி ஒழுக்கங்களைப்பற்றியும் கூறும் பாடல்கள் வரிசையின்றிக் கலந்தே வருகின்றன. சில பாடல்களாற் பாடப்பட்டோர் இன்னாரென்று தெரியவில்லை. சிலபாடல்களின் அடிகளும் சொற்களும் எழுத்துக்களும் கிடைக்கவில்லை.

மேற்கூறியவைகளை ஒருங்குசேர்த்துநோக்கும்பொழுது நானூறுபாடல்களும் கிடைத்தபின்னர் ஒருவர் இதை இம்முறைப்படி வகுத்திருக்கமுடியாது எனக் கொள்ள இடமிருக்கிறது. தமக்கு முன்னோர் பலர் தாங்கள் கருதிய முறைப்படி தங்களிடம் கிடைத்தவைகளை வகுத்த புறப்பாடல்களையெல்லாம், பிற்காலத்தில்வந்த ஒருவர் நானூறுபாடல்களும் தம்மிடம் கிடைத்தவுடனே அதற்குப் புறநானூறு எனப் பெயரிட்டிருத்தல்வேண்டும். இந்நூலைப் புறப்பாட்டெனவும் புறமெனவும் முற்காலத்தார் செய்யுளிலும் உரைகளிலும் வழங்கியிருத்தலின் இந்நூலுக்கு ஆதிப்பெயர் புறநானூறு என்றிருத்தல் இயலாது. இவையன்றிக் கீழ்க்கண்டவாறு ஊகிக்கவும் இடமுண்டு.

கடவுள்வாழ்த்துநீங்கிய முதற் பதினைந்துபாடல்களையும் ஒருவர் வகுத்துத்தொகுத்திருக்கலாம். அதற்குமேற்பட்ட பாடல்களும் அவரிடம் கிடைத்து அவரே தொகுத்திருப்பின், சேர பாண்டிய சோழர் என்று பாடப்பட்டார்வரிசைப்படி தொகுக்கப் பின்னும் இடமிருக்கிறது. முதல் 85 பாடல்களில் சோழர் பாண்டியர்களைப் பற்றிய பாடல்கள் சேரரைக்கூறும் பாடல்களைப்பார்க்கிலும் அதிகமாயிருப்பினும், சேரரைப்பற்றிய பாடல்களைக் கூடியவரை இம்முறையே கையாண்டு முற்படவைத்து வகுப்பதற்கு, அவைகள் சிறிதும் தடைகளாகா. அம்முறைப்படி பதினாறுக்கு மேற்பட்ட

பாடல்கள் வகுக்கப்படாமையின் அவைகள் வேறு ஒருவரால் வகுத்துத் தொகுக்கப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறு செய்தோர் முதற் பதினைறுபாடல்கள் வகுக்கப்பட்டமுறையைச் சிறிதும் சிதைக்காது தமக்குக் கிடைத்தபடியே நூலுக்கு முதலில்வைத்துச் சேர்த்திருக்கவேண்டும்.

17 முதல் 195 முடியவுள்ள பாடல்களை வேறொருவர் தொகுத்திருக்கலாம். அவர் முடியுடைவேந்தர்களைக் கூறும் பகுதியை முன்னும், வள்ளல் வீரர் முதலாயினேரைக்கூறும்பகுதியைப் பின்னும், எல்லார்க்கும் பொதுவாய் நீதியொழுக்கங்களைக்கூறும்பகுதியை அதன்பின்னும்வைத்துத் தொகுத்தல் இயல்பு. அன்றி ஒவ்வொருபகுதியை ஒவ்வொருவர் தொகுத்தார் எனக் கொள்ளினும் இழுக்காகாது. அதைமறுக்க ஏற்றஆதாரங்களில்லை. எனினும் முன்னேர் தொகுத்தமுறையைப் பின்னேர் சிதைக்கவில்லை யென்பதைமட்டும் உறுதியாகக்கூறலாம்.

முதல் 195க்கு மேற்பட்டபாடல்கள் பிற்காலத்தே வந்தவர்களால் சிறிது சிறிதாகச் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். புதியனவாகக் கிடைத்தபாடல்களைப் பழம்பாடல்களோடு சேர்த்தோர்யாரும் தமக்கு முன்னேர்செய்தமுறைவகுப்பைச் சிதைத்திருக்கமாட்டார்கள். முதல் 195 பாடல்களை வகுத்துத் தொகுத்தவர்களில் யாரும் புறநானூறு என்று இந்நூலைக் கூறியிருக்கமுடியாது. புறத்தைப் பற்றிய பாடல்கள் நானூறு இருந்தன என்பதும், அவர்களுக்குத் தெரிந்திருக்கமுடியாது. கர்ணபரம்பரையாகப் புறப்பாடல்கள் நானூறு என்று கேட்டிருக்கலாமெனின் புறப்பொருளைப்பற்றிய பாடல்கள் பதிற்றுப்பத்து பரிபாடல்போன்ற தொகைநூல்களிலும் வருகின்றன. அவைகளையெல்லாம் சேர்த்துப்பார்ப்பின் நானூறுக்குமேல் இருக்கும் என்று உணர்ந்திருப்பார்கள். எனவே நானூறு பாடல்களும் கிடைத்தபின்னர்ப் பிற்காலத்தில் ஒருவரால் புறநானூறு என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது விளங்குகிறது.

முன்னே இந்நூலைத் தொகுத்தவர்கள் ஒரு அரசரையோ அல்லது வள்ளலையோபற்றிக்கூறும் பாடல்கள் எல்லாவற்றையும் பல இடங்களிற் சிதறவிடாமல் ஒன்றுசேர்த்திருக்கலாமே யெனச் சிலர் கருதலாம். ஒரு அரசனையோ அல்லது வள்ளலையோ பற்றிய

எல்லாப்பாடல்களும் அவர்தொகுக்கும்பொழுது கிடையாதிருந்தால் எப்படி ஒன்றுசேர்த்துத் தொகுக்கமுடியும்? வேள்பாரியைப் பற்றிய பாடல்கள் (105—120-வரை) தொகுக்கப்பட்டதிலிருந்து தொகுத்தோர் இம்முறைப்படி தொகுக்க முயற்சித்திருக்கின்றனர் எனத்தெரிகிறது. அவ்வாறு தொகுக்குந்தருணத்திற் பாரியைப் பற்றிய எல்லாப்பாடல்களும் கிடைக்காது மறுபடியும் வேறுதருணத்திற் கிடைத்திருக்கலாம். அதனாலேதான் மறுபடியும் பாரியைக்கூறும் பாடல்கள் 158, 176 என்ற பாடல்களாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

மேற்கூறியவற்றால் நாம் கொள்ளக்கிடக்கும் முடிவுகள் யாவையெனின்:—

(1) புறநானூறு என்று தற்பொழுது சொல்லப்படுகிற எட்டுத்தொகைகளில் ஒன்றாகிய நூல் பலகாலத்தே பலரால் தொகுக்கப்பட்டது.

(2) பிற்காலத்தே தமக்குக் கிடைத்த பாடல்களைத் தொகுத்தோர் தமக்கு முன்னோர் தொகுத்த முறைவைப்பைச் சிதைக்கவில்லை.

(3) எட்டுத்தொகைநூல்களைக் கூறும்,

"நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை"

என்ற பாடலில், ஐங்குறுநூறு என்று நூலின்பாடல்களுடைய எண் குறிக்கப்பட்டதுபோலப் புறநானூறு எனச்சொல்லப்படாது புறம் எனவே கூறப்பட்டிருத்தலானும், உரையாசிரியர்கள் புறம் அல்லது புறப்பாட்டு என்றே கூறுதலானும், புறநானூறு என்றபெயர் இந்நூலுக்குப் பிற்காலத்தே வந்திருக்கவேண்டும்.

(4) இந்நூலைத் தொகுத்தவர்களிற் சிலர் ஏதோ ஒரு முறை பற்றி வகுக்க முயன்றிருக்கின்றனர்.

ஆர். நரசிம்ஹன், B. A. (Hons)
தலைமைத்தமிழ்ப்பண்டிதர், நாஷனல் ஹைஸ்கூல்,
திருநெல்வேலி.

ஸ்ரீ:

நியாயப்பிரவேச மணிமேகலை.

[32–ஆம் தொகுதியின் ௩௩௮–ஆம் பக்கத் தொடர்ச்சி.]

(4) விபக்ஷைகதேசவிருத்தி சபக்ஷவியாபி.

இனி நியாயப்பிரவேசத்தில் விபக்ஷைகதேசவிருத்தி சபக்ஷவியாபி வருமாறு.

1. விபக்ஷைகதேஶவ்ருத்திஸ்ஸபக்ஷவ்யாபீ யதா ।
   ப்ரயத்நாநந்தரீயகஶ்ஶப்தோ(அ)நித்யத்வாத் ॥

இதன்பொருள்: 'விபக்ஷைகதேசவிருத்திசபக்ஷவியாபியாவது — "சத்தம் முயற்சியாற்றோன்றும் காரியப்பொருள்; அநித்தியப் பொருளாதலால்" ' என்பது.

இதனுள், "சத்தம் முயற்சியாற்றோன்றும்காரியப்பொருள்; அநித்தியப்பொருளாதலால்" என்பது உதாரணம்.

[இங்கு இவ்வேதுப்போலியின் இலக்கணம் சொல்லப்படவில்லை. மணிமேகலையில் முதற்கண் இதன் இலக்கணம் சொல்லிப் பின்பு உதா ரணம் காட்டப்பட்டிருக்கிறது.]

இனி இவ்வுதாரணம் விளக்கப்படும்.

2. ப்ரயத்நாநந்தரீயக: பக்ஷ: ।
   அஸ்ய கடாதிஸ்ஸபக்ஷ: ।
   தத்ர ஸர்வத்ர கடாதௌ வித்யதே(அ)நித்யத்வம் ॥

இதன்பொருள்: 'முயற்சியாற் றோன்றும் காரியப்பொருள் பக்ஷம்; இதற்குக் குடமுதலிய காரியப்பொருள் சபக்ஷம்; அந்தச் சபக்ஷமாகிய குடமுதலியவற்றுளெல்லாம் அநித்தியத்துவம் உள் ளது' என்பதாம்.

இதனால் ஏது சபக்ஷவியாபியாதல் காட்டப்பட்டது; இது வாதிக்கு அநுகூலமாயுள்ளது.

இனி இவ்வேது விபக்ஷைகதேசவிருத்தியாதல் காட்டப்படும்.

3. 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑍀𑌯𑌕𑌃 𑌪𑌕𑍍𑌷𑌃;
𑌅𑌸𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌦𑌾𑌕𑌾𑌶𑌾𑌦𑌿𑌃 𑌵𑌿𑌪𑌕𑍍𑌷𑌃;
𑌤𑌤𑍍𑌰𑍈𑌕𑌦𑍇𑌶𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌦𑌾𑌦𑍌 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇
𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌂; 𑌨𑌾𑌕𑌾𑌶𑌾𑌦𑍌. ॥

இதன்பொருள்: 'முயற்சியாற்றோன்றும் காரியப்பொருள் பக்ஷம்; இதற்கு முயற்சியாற்றோன்றாத மின்னலும் ஆகாசம்முதலியனவும் விபக்ஷம்; அவ்விபக்ஷத்துள் ஏகதேசமாகிய மின்னல் முதலியவற்றுள் உள்ளது அநித்தியத்துவம்; ஆகாசம் முதலியவற்றுள் அஃதில்லை' என்பதாம்.

இதனால் ஏது விபக்ஷைகதேசவிருத்தியாயுமிருத்தல் காட்டப்பட்டது; இது எதிரிக்கு அநுகூலமாயுள்ளது.

[இங்கு விபக்ஷைகதேசவிருத்தி சபக்ஷவியாபி என்னும் இவ்வேதுப்போலியின் பெயருட்கூறிய முறையானே விபக்ஷைகதேசவிருத்தியாதலை முன்னாகவும், சபக்ஷவியாபியாதலைப் பின்னாகவும் கொண்டு விளக்காது, சபக்ஷவியாபியாதலை முன்னாகவும் விபக்ஷைகதேசவிருத்தியாதலைப் பின்னாகவும் முறைபிறழவைத்து விளக்கியிருப்பது மணிமேகலைவிளக்கமுறையின் மாறுபட்டிருக்கிறது.]

இனி, இவ்வேது அநைகாந்திகமாமாறு காட்டப்படும்.

4. 𑌤𑌸𑍍𑌮𑌾 𑌦𑍇𑌤𑌦𑌪𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌦𑍍𑌘𑌟𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑍇𑌣
𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑌨𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌂 ॥

இதன்பொருள்: 'விபக்ஷைகதேசவிருத்தியாயும் சபக்ஷவியாபியாயுமிருத்தலால் இவ்வேதுவும், மின்னல் குடங்களின் ஒப்புமையால் முன்சொல்லியவாறே அநைகாந்திகமாயிற்று.' என்பதாம்.

(அதாவது—முயற்சியாற்றோன்றாது இயல்பானேதோன்றுவதாகிய மின்னலினும், முயற்சியாற்றோன்றும் காரியப்பொருளாகிய குடமுதலியவற்றினும் அநித்தியத்துவம் என்ற ஏதுப்பொருள் பொதுமையினிருத்தலால் அநித்தியத்தன்மையுள்ள மின்னற்போலே அழிவுடைமையால் சத்தம் முயற்சியாற்பண்ணப்படாததோ?

அல்லது அநித்தியத்தன்மையுள்ள குடமுதலியபோல அழிதலுடைமையால் சத்தம் முயற்சியாற்பண்ணப்படுவதோ? என்று ஐயுறுதற் கிடனாதலால் இவ்வேது அநைகாந்திகமாயிற்று என்றபடி.)

இனி மணிமேகலையில் இவ்வேதுப்போலிநிரூபணம்செய்யத் தொடங்கி முதலில் அதன் இலக்கணம் கூறப்படுகிறது.

'விபக்கைக தேச விருத்தி சபக்க
விபாபி யாவ தேது விபக்கத்
தோரிடத் துற்றுச் சபக்கத் தொத்தியறல்' (243–245)

என்றது இவ்வேதுப்போலியின் இலக்கணம் கூறியவாறு. [இவ்விலக் கணம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

இதன்பொருள்: 'விபக்கைகதேசவிருத்தி சபக்கவியாபி என்னும் ஏதுப்போலியின் இலக்கணமாவது, வாதிகூறும் ஏது விபக்கத்தில் ஏகதேசத்தில் உள்ளதாயிருந்துகொண்டு சபக்கத்தில் முழுதும் வியாபித்திருத்தல்' என்பதாம்.

இது பொருள்பற்றிக்கூறிய இலக்கணம். ஒத்தியறல் - வியாபித்திருத்தல்.

இனி, இவ்வேதுப்போலி ஒருதாரணங்காட்டி விளக்கப்படும். அது,

'சத்தஞ் செயலிடைத் தோன்று மநித்த
மாதலி னென்னி னநித்த வேதுச்
செயலி டைத்தோன் றற்கு விபக்க
வாகா யத்தினு மின்னினு மின்னி
னிகழ்ந்தா காசத் துக்கா ணாது
சபக்கக் கடாதிக டம்மி லெங்குமா
யேகாந்த மல்ல' (246—252)

என்பதாம்.

இதனுள், 'சத்தம் செயலிடைத்தோன்றும்; அநித்தமாகலின்' என்பது உதாரணம். சத்தம் பக்கப்பொருள்; செயலிடைத்தோன் றல் துணிபொருள்; அநித்தமாதல் ஏதுப்பொருள்.

என்னின் என்றது இவ்வுதாரணம் ஏதுப்போலியாதலை விளக்கிக்காட்டுதற்கு இவ்வுதாரணத்தை அநுவதித்துக்கொண்ட அநுவாதக்குறிப்பாய்நின்றது. [அதாவது—'சத்தம் செயலாற்றேன்றும் அநித்தமாதலால்' என்று அநுமானவாக்கியங்கூறின், அதனுள் அநித்தமாதலால் என்னும் ஏது, குற்றமாதல் காட்டப்படும் என்றபடி.] இது புரோவாதமுமடங்கிய தந்திரோச்சாரணம்.

என்னின் என்பதன்மேலுள்ள வாக்கியங்கள் அது குற்றமுடைத்தாதலை விளக்குவனவாம்.

"அநித்தவேதுச் செயலிடைத்தோன்றற்கு விபக்கவாகாயத்தினும் மின்னினும் மின்னின் நிகழ்ந்து ஆகாசத்துக் காணுது" என்றது இங்கு 'அநித்தம் என்று சொல்லப்பட்ட ஏதுப்பொருள் செயலிடைத்தோன்றலாகிய துணிபொருளுக்கு அத்துணிபொருளில்லாமையால் விபக்கமாயுள்ள செயலிடைத்தோன்றாத ஆகாயமும் மின்னலுமாகிய இவற்றுள் மின்னலாகிய விபக்கத்தின் ஏகதேசத்தில் (ஒருபகுதியில்) உள்ளதாயிருந்துகொண்டு, மற்றொருபகுதியாகிய ஆகாசத்திற் காணப்படுவதன்று' என்றவாறு.

இதனால் விபக்ஷைகதேசவிருத்தியாதல் காட்டப்பட்டது.

இனி, சபக்ஷவியாபியாமாறு காட்டிமுடிக்கப்படும்.

'சபக்கக் கடாதிகடம்மில் எங்குமாய் ஏகாந்தமல்ல' என்றது அவ்வநித்தவேது, செயலிடைத்தோன்றற்குச்சபக்கமாயுள்ள குடமுதலியவற்றுள் எங்குமுள்ளதாதலால் ஒரு முடிபுள்ளதன்று என்றவாறு.

இதனால் இவ்வநித்தம் என்னும் ஏதுப்பொருள் சபக்ஷவியாபியாயிருத்தலும் காட்டினமையால், அது சபக்கவிபக்கங்களிரண்டிலுமிருத்தலால் வியபிசாரமுடையதாயிற்று என்பது குறிப்பா லுணர்த்தப்பட்டது.

அன்று என்பது அல்லவெனத் திரிந்துநின்றது. அல்லது, ஒருமையிற் பன்மைவந்த வழுவமைதியெனினும் ஆம். இவ்வாறே விருத்தவியபிசாரி என்னும் ஏதுப்போலிவிளக்கத்திலும் 'இரண்டினும் சங்கயமாய் ஏகாந்தமல்ல' என வழங்குவர்.

இருதலைக்கும் ஒத்த உரிமையுடைமையால் வியபிசாரமுடைய தாய் ஐயப்பாட்டை விளைவிப்பதாயிற்று என்பது கருத்து.

இனி இக்குற்றமுடைமையாலுண்டாம் பயன் கூறப்படும்.

'..............மின்போ லநித்தமாய்ச்
செயலி டைத்தோன் றுதோ கடம்போ
லநித்தமாய்ச் செயலிடைத் தோன்று மோவெனல்' (252–254)

'மின்போல் அநித்தமாய்ச் செயலிடைத்தோன்றுதோ? கடம் போல் அநித்தமாய்ச் செயலிடைத்தோன்றுமோ? என்றது சத்தம் மின்போல் அநித்தமாதலால் முயற்சியாற்பண்ணப்படாததோ? அல்லது குடம்போல் அநித்தமாதலால் முயற்சியாற்பண்ணப் படுவதோ?" என்றவாறு.

'ஆய்' என்னும் வினையெச்சங்களிரண்டும் ஏதுப்பொருள வாயின.

'எனல்' என்றது என்று ஐயுறுதற்கிடனாதலால் அநைகாந்திக மாம் என்னக்கடவது என்னும் குறிப்புணரநின்றது.

[இங்கு விபக்ஷைகதேசவிருத்தி சபக்ஷவியாபி என்னும் இவ் வேதுப்போலியின் பெயருட்கூறிய முறையானே விபக்ஷைகதேச விருத்தியாதலை முன்னாகவும் சபக்ஷவியாபியாதலைப் பின்னாகவும் வைத்து விளக்கியிருப்பது நியாயப்பிரவேசவிளக்கமுறையின் மாறுபட் டது.]

[தொடரும்]

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

ஸ்ரீ :

மதிப்புரை.

யவனமஞ்சரி:—இப்பெயர் கிரேக்கரது ஒழுக்கநூல் என்ற பொருளைக் குறிக்கும். யவனர் - கிரேக்கர். இது, யவனதேசத்து 'அரிஸ்டாட்டில்' என்னும் அருங்கலைவாணரியற்றிய 'நிக்கோமாக்கியன்' ஒழுக்கநூலின் தமிழ் மொழிபெயர்ப்பாம்.

அரிஸ்டாட்டில் இற்றைக்கு இரண்டாயிரத்திருநூறாண்டுகட்குமுன் மஹா அலெக்ஸாண்டரின் ஆசிரியராய்த் திகழ்ந்தவர். மேற்றிசையாளரிற் றலைசிறந்த தத்துவஞானியென்று போற்றப்பெறுபவர். தருக்கம் தத்துவம் ஒழுக்கம் உலகியல் எனப் பலதுறைப்பட்ட பொருளிலும் அரும்பெறல் நூல் களையளித்துப் புகழுடம்பெய்தினவர். இது நிற்க.

மேலேகண்ட இவரது ஒழுக்கநூல் அறநெறியியலை விளக்கப்புகுந்த தாம். அது தன் ஒப்புயர்வற்ற தன்மையால் கிரேக்கமொழியினின்று ஆங்கிலத்திற் பெயர்க்கப்பட்டது. அம் மொழிபெயர்ப்பே யவனமஞ்சரி என்னும் இத்தமிழ்நூலுக்கு மூலமாயிற்றென்று விளங்குகிறது. முதனூலின்பொருள் கள் பெரும்பாலும் இலக்கணநெறியான் வரையறைப்படுத்தப்பட்டிருத்தலோடு, விரிவாக வியாக்கியானஞ்செய்து விளக்கப்பெறவேண்டும்நிலையிலும் உள்ளனவாகலின் அவற்றை ஆற்றலழியாமல் வேற்றுமொழியில் மாற்றியுரைத்தல் எளிதினியலாதாம். அன்றியும், ஒருமொழிபெயர்ப்பைத் துணைக் கொண்டு மீண்டும் மொழிபெயர்த்தலின் இடையூறுகள் மிகைப்படும்.

ஆயினும், அவற்றைப் பொருட்படுத்தாத இவ் யவனமஞ்சரி நூலாசிரியரின் தளராமுயற்சி பாராட்டற்குரியதே. தமிழ்ப்புலமையும் தத்துவநூலறிவும் ஆங்கிலக்கல்வியும் ஒருங்கமைந்த திரு. த. இராமநாதபிள்ளை (B A, Lond.) அவர்கள் தகுதிசான்றவராகையால் இம்மொழிபெயர்ப்பினை நன்கியற்றியுள்ளாரென்பதில் ஐயமில்லை. வேற்றுநாட்டாரிடைவிளங்கும் கலையறிவின் பெருமையெல்லாம் தமிழ்மக்களிடையும் பரவவேண்டுமென்ற பிள்ளையவர்களின் நன்னோக்கம் எவரும் விரும்பி ஏற்கத்தக்கதாகும்.

நூற்றுமுப்பது பக்கங்களளவில் அழகாக அச்சிடப்பட்ட இப்புத்தகத்தின் விலை ரூ. 1. வேண்டுவோர் யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறையில் ஆசிரியரவர்களிடம் பெறலாம்.

ஸ்ரீ அருணாசலமான்மியம்:—இஃது இலங்காபுரிக்கு அலங்காரமாய் விளங்கிய ஸ்ரீமாந். பொன்னம்பலமுதலியாரவர்களின் அருந்தவப்புதல்வர் மூவரில் ஒருவரான கௌரவஸ்ரீ. பொன். அருணாசலம் என்னும் பெருந்தகையாளரின்சரிதத்தை விரித்துரைப்பதால் இப்பெயர்பெற்றது.

யாழ்ப்பாணத்து இராமநாதவித்தியாலயத் தமிழ்ப்பண்டிதர் சாவகச்சேரி ஸ்ரீமாந் பொன்னம்பலம்பிள்ளையவர்கள் இந்நூலின் ஆசிரியராவர். செவிக்கினிய செந்தமிழ்ச் செய்யுணடையில் இயன்றுள்ள இது, பழந்தமிழ்க் காப்பியங்கள்போலக் காப்பு, மங்கலம், அவையடக்கம், நாட்டுவளம், நகரச்சிறப்பு முதலியவற்றுற் றோற்றுவாயுடையதாய், பாடப்பட்டோரின் பெருமையைத் தக்கவாறு வருணித்துச்செல்கின்றது. பண்டைப்பெருமக்கள்வரலாறு இதுபோலச் செவ்வனம் எழுதப்பெற்றிலாமையால் நம் நாட்டிற் சரிதவாராய்ச்சி தடைப்படுகின்றதென்பர். அக்குறைநீங்க இந்நூல் எதிர்காலத்தில் ஓரளவு பயன்றரவல்லதும் ஆகும்.

அழுத்தமான காகிதத்தில் விளக்கமாக அச்சிட்டு உறுதியாகக் கட்டப்பெற்ற இப்புத்தகத்தின் முகப்பில், புலவர்பாடும் புகழுடையவள்ளல் திரு. பொன். அருணாசலம் அவர்களின் உருவப்படம் அழகுற அமைந்துள்ளது. இறுதியில் அரும்பதவிளக்கமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் வேண்டுவோர் விலைமுதலிய விவரங்கள் கீழ்க்கண்ட விலாசத்திற் றெரிந்துகொள்க. "A Mahadeva Esq. M.A., M.S.C., 'Ponklar,' Harton Place, Colombo."

பொன்வண்ணத்தந்தாதி (மூலமும் உரையும்):—இப்பிரபந்தம் **சேரமான் பெருமாணாயனாரால்** சிவபெருமான்துதியாக அருளிச்செய்யப்பெற்றதாம். 'ஆத்திசூடி' என்பதுபோலப் பொன்வண்ணம் என்னும் சொல் முதற்குறிப்பாக இஃது அந்தாதித்தொடையான் அமைந்தமையின் இப்பெயர் பெற்றது. ஸ்ரீமத். கோ. வடிவேலுசெட்டியாரவர்களின் மாணவர் திரு. கா. பொன்னுச்சாமிநாட்டாரவர்கள் தம் ஆசிரியருதவிகொண்டு இதற்கு அரியஉரை இயற்றியுள்ளார். இவ்வுரை, கருத்து பதப்பொருள் மேற்கோள் விசேடம் என்னும் பலவுறுப்பும்பெற்றுச் செய்யுட்பொருளை விரிவாகவும் தெளிவாகவும் விளக்கிச்செல்லுகின்றது. பொருளை நன்கு புலப்படவுரையுந்தன்மை இவ்வாசிரியர்பால் மிகவும் பாராட்டற்குரியதே. பிழையறப் பரிசோதித்து நூற்றிருபதுபக்கஅளவில் செவ்வனம் அச்சிடப்பட்ட இப்புத்தகத்தின்விலை அணா 4. வேண்டுவோர் "K. P. Sawmy & Co., 264, China Bazaar Road, Madras" என்ற விலாசத்திற் பெறலாம்.

தமிழ்ப்போகராதி:—சென்னைச்சருவகலாசங்கப்பிரசுரமான இவ்வகராதி வேலை பெரும்பான்மையும் முற்றுப்பெறும்நிலை எய்திவிட்டது. கடைசியாக வெளிவந்துள்ள இதன் ஆறுந்தொகுதியின் மூன்றும்பகுதியில் 'வலிச்சல்' என்பதுமுதல் 'விரற்புட்டில்' என்பது இறுதியாகவுள்ள மொழிகளுக்கு இன்றியமையா மேற்கோளுடன் பொருள் விளக்கப்பட்டிருக்கிறது. இங்ஙனமே இஃது இனிது நிறைவேறல் எல்லார்க்கும் விருப்பமாம். மேலே குறித்த தொகுதி VI பகுதி III-ன் விலை ரூ. 2. வேண்டுவோர் "Messrs C. Coomarasawmy Naidu & Sons, George Town, Madras" என்ற விலாசத்திற் பெறலாம்.

தேவிகாலோத்தர ஆகமம்:—இது வடமொழிநூலின் தமிழ்மொழி பெயர்ப்பாயுள்ள 66 பாடல்களால் ஞான யோகநெறியொழுக்கங்களைத் தெளிவாகச் சொல்லவல்லது. இதற்குத் தேவகோட்டைச் சிவாகமசங்கத்துச் சித்தாந்தசாத்திர போதகாசிரியர் திருவாளர் பொ. முத்தையபிள்ளையவர்களால் சித்தாந்தரத்நம் என்னும் ஒரருமையான விருத்தியுரையெழுதிப் பதிப்பிக்கப்பெற்றிருக்கிறது. ஒவ்வொரு பாடலும் அவதாரிகை, பதவுரை, பொழிப்புரை விசேடவுரை என்னும் உரைவகைகளால் நன்கு பொருள் விளக்கப்பெற்றுள்ளன. இதன் பாடல்களாலன்றி விசேடவுரையாலும் சித்தாந்தசாத்திர முடிபாயுள்ள பொருள்கள் விளங்குகின்றன. சித்தாந்த சாத்திரப்பயிற்சியும், யோகமுயற்சியுமுடையோராலல்லது இத்தகையுரை யெழுதல் மிகவும் அரிது. இதன் உரையாசிரியரது நன்முயற்சி பாராட்டத்தக்கது. ஆன்மலாபமடைய விரும்புவோரெல்லோர்க்கும் இப்புத்தகம் பயன்படத்தக்கது. இதன்விலை அணா 10. வேண்டுவோர் "திருவாளர். பொ. முத்தையபிள்ளையவர்கள், சித்தாந்தசாத்திரபோதகர், சிவாகமசங்கம், தேவகோட்டை" என்ற விலாசத்திற் பெறலாம்.

பாங்கியைத் தலைவன் பழித்தல்.

101. சேணை மருவுஞ் சிவன்வாழ் சிராமலைச் சேயிழைக்குப்
பாணேர் மொழிமயி லேயென தாசை பகர்வையென்று
வீணே யுரைத்துமி குத்திய பேரின் மிகமெலிந்தேன்
காணே னிரக்க முனைப்போ லுடையரிக் காசினிக்கே. (௯)

பேதைமையூட்டல்.

102. மகத்தைப் புரியு மவர்வாழ் சிராமலை வள்ளலன்பாற்
சகத்தைப் புரக்குந் திறலாய் குறவர்முன் சார்ந்துபுகர்
முகத்தைத் தடிந்த விடத்தார் மருப்புதிர் முத்ததனாற்
சுகத்தைக் கடியு மவளோ தருவள் சுகமுனக்கே. (௧0)

காதலன் முதறிவுடைமை மொழிதல்.

103. குன்றே சிலையெனக் கொண்டோன் சிராமலைக் கோற்றொடிமான்
கன்றே யனைய விழியறி யாளெனல் கட்டுரையே
நன்றே தனித்தெனை யாயத்தி னீங்கி நயந்தணைந்த
அன்றே முதுக்குறை வுற்றதன் றேவவட் காயிழையே. (௧௧)

---

101. 'உமி குத்தினவர்போல' என்பது ஒரு பழமொழி; "நெற்குத் துண்ணு துமிக்குத்திக் கைவருந்தி" (சேக்கிழார்புராணம், 20), "சுவைபடு மவனீத் துமியுணுக்கொள்ளுந் தொழுத்தையேன்" (திருப்பெருந்துறைப். உபதேசப். 75.) இரக்கம் உனைப்போலுடையரென்றது இரக்கமில்லா யென்பதைக் குறிப்பித்தபடி.

102. மகம் - யாகம். புகர்முகத்தை - யானையை. தடிந்த - கொன்ற. சுகத்தைக் கடியுமவள் - கிளியை ஓட்டுபவள். சுகத்தை வெறுப்பவளா உனக்குச் சுகந்தருவாளென்பது ஒருநயம்.

103. மான்கன்று அனைய விழி - தலைவி. கட்டுரையே - கற்பித்து உரைக்கும் பொய்யே. முதுக்குறைவு - பேரறிவு.

முன்னுறுபுணர்ச்சி முறையுறக்கூறல்.

104. பண்பா லுயிர்பரி பாக முறுவது பார்த்துவந்து
நண்பா லருளுஞ் சிராமலை யாரன்ப நன்னுதலாம்
பெண்பான் முனமின்பம் பெற்றது போலினம் பெற்றிடுக
கண்பா லொளியினர் கோல்பிடித் தேகல் கருதிலரே. (கஉ)

தன்னிலை தலைவன் சாற்றல்.

105. காந்தமு மூசியுந் தாமே புணர்வது காண்பதுண்டோ
பாந்தம தாவெற் கருள்வோன் சிராமலைப் பைந்தொடியாள்
சாந்தமு மாலையு மார்முலை மாதைத் தழுவிச்செவ்வாய்
வாய்ந்தமு தார்ந்திட நீயே துணையன்றி மற்றிலையே. (கங)

உலகியல் உரைத்தல்.

106. நங்கையொர் பாகத்தர் வாழுஞ் சிராமலை நண்ணுமெம்பாற்
சங்கைக ளார்புறத் தாருங் களைக டாம்பொருந்தார்
நுங்கையி னீரெமர் தங்கையி னேற்றுப்பின் னூலணிந்து
மங்கையை மேவிச் சுகம்பெற்று வாழ்கநம் மன்னவரே. (கச)

தலைவன் மறுத்தல்.

107. வருத்தும் பசியினர்க் கேரிகண் டூண்டு வயறிருத்தி
எருத்துன் றிடவிட்டுச் சாலி விளைத்துண்ணு மென்றலொத்தென்
கருத்துங் களிப்ப நடிப்போன் சிராமலைக் காரிகையைத்
திருத்தும் விதிமுறை பின்னே புணர்கென்று செப்பனன்றே.

---

104. பெண்பால் - பெண்ணினிடத்தே. கண்பால் ஒளியினர் - கண்ணில் ஒளியையுடையவர்கள். பி-ம். 'ஒளியினர் வேண்டார் துணைகதிர் காண்பதற்கே.'

105. பாந்தமதா - பொருத்தமாக; "பாந்தமாய்ச், சொன்னநிலத் தோர்களுக்காத் தூதுசென்ற தம்பி" (திரு இலஞ்சி முருகன் உலா, 113-4.) பைந்தொடி: விளி. வாய்ந்த அமுது: விகாரம்.

106. சங்கைகள் - ஐயங்கள். எமர்தம் கையின் நீரை நும் கையின் ஏற்று. நூல் - மாங்கலியம்.

107. எருவைத் துன்றிட இட்டு. சாலி - நெல். விதிமுறை - விதிப்படி. மணந்துகொள்ளென்றபடி.

பாங்கி தலைவனை யச்சுறுத்தல்.

108. அடியார்க்கு நல்லன் சிராமலை யான்விழி யிம்பகலோன்
படியார்க்கு மாலுற மேல்கடன் மூழ்கினன் பைம்புனத்திங்
கிடியார்க்கும் வாயெம ரெய்துவ ரூர்க்கினி யேகுதும்யாம்
கடியார்க்கு மாநகர்க் கேகுக வல்லையெங் காவலனே. (கசு)

தலைவன் கையுறைபுகழ்தல்.

109. வளந்திகழ் சீருங் கவினும் வழங்கு மலர்த்திருப்பேர்
உளந்திகழ் வாயரு ளித்தழை நும்வடி வொக்குமன்பாற்
குளந்திகழ் பான்மொழி யீர்நீ ரணிந்து கொளத்தகுங்கார்க்
களந்திகழ் வானவ னெம்மான் சிராமலைக் காவகத்தே. (கஎ)

பாங்கி கையுறைமறுத்தல்.

110. பொன்னி வளந்திக ழெம்மான் சிராமலைப் பொன்னனைய
கன்னி யகலல்குன் மேலனை யித்தழை காணினயிர்த்
துன்னி யெனையழைத் தேதென்பள் கானவ ரோகொடியர்
பன்னி யுரைப்பதென் வாங்கேம் பசுந்தழை பார்மன்னனே.

---

108. பகலோன் - சூரியன். படி யார்க்கும் - பூமியிலுள்ள யாவருக்கும். மால் - மயக்கம். இடி ஆர்க்கும் - இடியைப்போலச் சத்திக்கும். கடி ஆர்க்கும் - மணவொலி முழங்குகின்ற.

109. சீர் - செல்வம். வழங்கும் திருவெனக் கூட்டுக. திருவின் உள்ளத்தில் திகழ்பவனே. அருள் - அருள்செய்வாயாக. குளம் - வெல்லம். அன்பாற் கொள்ளத்தகும்.

110. வளந்திகழ் சிராமலை. பொன் - திருமகள்; தங்கமுமாம். ஓ கொடியர் - மிகக்கொடியர்; ஓ: சிறப்புப்பொருளைத்தருவதோ ரிடைச்சொல். பன்னி - ஆராய்ந்து.

ஆற்றாநெஞ்சினோ டவன் புலத்தல்.

111. ஆட வெடுத்தபொற் பாதத்தை நாடி யனுதினமும்
பாட நமக்கருள் பெம்மான் சிராமலைப் பைந்தொடியைக்
கூட நினைத்தாழ் னெஞ்சேநம் போலக் கொழுந்தழையும்
வாட நினைத்து விதித்தனை யோசொன் மலரவனே. (கக)

பாங்கி ஆற்றுவித்தல்.

112. சங்கைக் குழையெனக் கொண்டோன் சிராமலை தன்னிலுமை
பங்கைக் குழைய மகிழ்ந்தணை வோனருட் பார்வையன்ன
மங்கைக் குழையன கண்ணிக்கு நாளை வரினுரைத்துன்
அங்கைக் குழையவள் செங்கைக் குழையென வாக்குவனே.

இதுவுமது.

113. கறையார் மிடற்றின னெம்மான் சிராமலைக் காவலநான்
பிறையார் நுதலெம் பிராட்டிக்குன் வாய்மைகள் பேசியன்பாய்
நிறையார் திருவுள நின்பா லிரங்க நிறுத்துவனீ
நறையார் தழையுட னின்றேகி நாளை நணுகுகவே. (உக)

---

111. ஆடவெடுத்த பொற்பாதம்: "ஆட வெடுத்திட்ட பாதமன் றோநமை யாட்கொண்டதே" (தே.) நெஞ்சே சொல்.

112. குழையென - காதணியாக. உமைபங்கை அணைவோன். அருட் பார்வையன்ன - இடக்கண்ணாகிய சந்திரனையொத்த; "எண்வடிவத் தொரு வடிவாய் முக்கணிலோ ரருட்கண்ணா யிமையதேர்க் காலாய்ப், பண்மருவு பலகலையிற் றலைக்கலையாய் விளங்கும்பாம் பால மேற்ற, கன்மருவு தழலவிர்ந் தான் குடையாத விழிவென்று கருதி வட்டத், தண்மதிய முடிமீது நிழற்ற லென வெண்கவிகை தயங்கா நிற்க" சூதசங்கிதை, விமலன், 19.

பி-ம். 'மகிழ்ந்தணைவோனைப் பணியு மன்னு', 'னருட்பாவையன்ன'.

113. கறை - விடம்; கறுப்பும் ஆம்; கறையை ஆர்ந்த மிடறெனினு மாம்; ஆர்ந்த - உண்ட. வாய்மைகள் - சொற்களை. நான் பேசி. நிறை - நெஞ்சைக் கற்பினெறியில் நிறுத்தல்; "சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்குங் காப்பே தலை" (குறள், 57.) நறை - வாசனை.

இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன்
மடலே பொருளென மதித்தல்.

114. தாதைதன் றாளிணை வீட்டிய பாலரைத் தானெனச்செய்
பேதைதன் பாகத்த னெம்மான் சிராமலைப் பேரணங்காம்
கோதைதன் னாசைக்குக் கோதைதன் கோதைக் குரகதமேல்
மேதைதன் னாவினி மேற்கொண்டு செல்வது மேன்மையதே.

பாங்கிக்கு உலகின்மேல்வைத்துரைத்தல்.

115. மையார் விழிமட மானே யுலகினின் மாதர்மணிப்
பையா ரரவல்குற் றேர்முலை யானைப் படைக்குடைந்தோர்
மெய்யார் சிரகிரி யார்நீ றெருக்கென்பு மேலணிந்து
கையார் கிழியுட னூர்வார் பனைமடற் கந்துகமே. (உரு)

---

114. பாலர் - சண்டேசநாயனார். தானெனச்செய் - சிவசாரூபம் பெறச்செய்த. பேதைதன்பாகத்தனென்பது சிவனென்னும்பொருட்டாய் நின்றது. கோதைதன் ஆசைக்கு - தலைவியின்பாற்கொண்ட காதலைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு. கோதைதன் கோதைக் குரகதமேல் - சேரனுடைய மாலையாகிய பனையின்மடலாற் செய்யப்பட்ட குதிரையின்மேல்; கோதை - சேரன், மாலை. மேதை - அறிவு. மேற்கொண்டு - அக்குதிரையின்மேற்கொண்டு. கோதையென்னுஞ்சொல் பலகால் வந்தது சொற்பின் வருநிலையென்னும் அணி. "ஆருடை யானினும் வேம்புடை யானினு மைய பனைத், தாருடை யானல னோமதி மானெனச் சாற்றினரே" திருவெங்கைக். 128.

115. தேர்ப் படைக்கும் யானைப்படைக்கும் உடைந்தோர்; உடைந்தோர் - தோற்ற ஆடவர்கள். நீற்றைப் பூசிக்கொண்டும் எருக்கு, எலும்பாலாகிய மாலைகளையணிந்துகொண்டும் பனைமடற்குதிரையி லேறிச்செல்லுவர்; "கொம்மைப் பனைமுலை கூடும் பரிசு கொடியிடையார், தம்மைப் பெறாதவர் தாலப் புரவியு மாலையென்பும், வெம்மைச் சுடலையி னீறுமென் பூளையும் வெள்ளெருக்கும், இம்மைக்கு நாடி மறுமைக்கு மானதென் றெண்ணுவதே" (அம்பிகாபதிகோவை, 109.) "காசியின் மேன்மைக் கலைசைத் தியாகர் மெய்க் காட்சியைப்போல், பூசிவெண் ணீறெருக் கம்பூ வணிந்தென்பு பூண்டுநல்லாய், பாசிழை யார்வடி வார்படங் காட்டிப் பனைமடலாம், வாசியை நாளையுன் னூர்வயி னூர்ந்து வருகுவனே" (கலைசைக். 116.) கிழி - தலைவன் தலைவியர் உருவெழுதிய படம்; 116-ஆம் பாடலைப் பார்க்க. கந்துகம்-குதிரை.

பி-ம். 'மானே மதிமுக வாணுதலார்'

மடலேற்றினைத் தலைவன் தன்மேல்வைத்துச் சாற்றல்.

116. அன்னையு மத்தனு மாகுஞ் சிராமலை யாரருளால்
என்னையு மென்னுயி ராமட மாதொ டெழுதுபடம்
தன்னையு மென்போ டெருக்கையுந் தாங்கியொண் டார்மடன்மேல்
மின்னையு நுண்ணிடை யீர்நாளை நும்பதி மேவுவனே. (உச)

பாங்கி தலைமகள் அவயவத்தருமை சாற்றல்.

117. திரையார் தருபொன்னி வாளைக டாவச்செந் தேனெழும்பூ
விரையார் பொழிறிக ழெம்மான் சிராமலை வீரசெந்தா
மரையார் கயலிணை வள்ளையிற் றுவு மலர்த்திருவின்
உரையா ரிடையுரு வன்றே யெழுத லுனக்கரிதே. (உரு)

தலைமகன் தன்னைத் தானே புகழ்தல்.

118. காளி யொடுநடஞ் செய்தோன் சிராமலைக் காரிகையீர்
வாளி விழியு மதிமா முகமும் வளர்முலையும்
தாளி ணிணையுடன் யாவையுந் தீட்டியெற் சார்ந்துபொரும்
வேளி னுருவிடை யாதலிற் றீட்ட விரும்பிலனே. (உசா)

---

116. "அம்மையு மாவதன்றி யத்தனுந்தா னுயபிரான்" (திரிசிரகிரி யுலா.) தார் - குதிரையின்கழுத்திற் பூட்டும் கிண்கிணிமாலை. மின் னையும்.

117. வாளைகள் தாவ. செந்தாமரை யென்றது முகத்தை. கயலிணை-கண்கள். வள்ளை - காதுகள். உரையும் இடையும் உருவமுடையன அல்ல; ஆதலால் எழுதுதல் அரிது. "மந்தாகினியணி" (வேங்கைக்கோவை. 107) என்னும் செய்யுளாலும் இக்கருத்து விளங்கும்.

118. வாளி - அம்பு. வேளின் உரு- மன்மதனுடைய உருவம்; என்றது அருவத்தை. என்னோடு பொரும் பகைவனாகிய மன்மதனது உருவத்தைத் தீட்டேனென்று தன் இயலாமையைப் புலப்படுத்தாமற் சதுரப்பாட்டால் விடைகூறினன்.

அருளியல்கிளத்தல்.

119. சின்மய னாளுஞ் சிராமலை யானருள் சேர்ந்தமன்னு
வன்மையர் போற்பெண்ணை வேட்டொரு பெண்ணை வருந்தவெட்டின்
நன்மைய தோவுண்டம் விண்டிடு மன்றி னலிவுறுமால்
அன்மைய தேயென வூரார் மடல்கலை யாய்ந்தவரே. (உஎ)

பாங்கி கோண்டுநிலை கூறல்.

120. தோடுறு காதின னெம்மான் சிராமலைத் தோகைக்குநான்
நீடுறு நும்மயல் கூற மறுத்திடி னீரதன்பின்
ஏடுக ளேந்தியும் வாசித்து மாலவர்க் கேற்றமருள்
பீடுக ளேய்ந்திடு பெண்ணை மரீஇமணம் பெற்றிடுமே. (உஅ)

தலைவி யிளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தல்.

121. அரும்பா முலையினைப் பாவைக் கருத்தி யணைமகிழக்
கரும்பா மொழிகொடு தாலாட்டும் பேதைக்குக் காமஞ்சற்றும்
விரும்பா விளங்குயி லாட்கெவன் கூறுவன் விஞ்சைபல
வரும்பா வலர்பணி யெம்மான் சிராமலை வாழ்மன்னனே. (உகூ)

---

119. சின்மயன் - அறிவுருவமாயவன். ஆளும் சிராமலையான் - சிராமலையை ஆள்பவனென விகுதிபிரித்துக்கூட்டுக. பெண்ணைவேட்டு - தலைவியை விரும்பி; பெண்ணைவெட்டின் - பனைமரத்தைவெட்டினால்; "கூடுவொரு பெண்ணையே கூட வேண்டுவோர், வேறொரு பெண்ணையே வெட்டு வார் கொலோ" (திருவருணைக்கலம்பகம்.) அண்டம் விண்டிடும் - முட்டை உடையும்; பதினான்கு உலகத்தையும் தன்னுட்கொண்ட அண்டமே விண்டிடுமென்பது மற்றொரு பொருள். அன்றிப்பறவை நலிவுறும். அன்மையதே - செய்யத்தகாததே. கலையாய்ந்தவர் மடல் ஊரார்; கலை-ஆண்மான், நூல்கள்.

120. ஏடுகள்-பனையேடுகள்; பூவிதழ். வாசித்து-படித்து; மணம்வீசி. மாலவர் - காமமயக்கமுடையவர். பீடுகள் ஏய்ந்திடு - பெருமையுள்ள கள்ளுப் பொருந்திய; பெருமைகள் பொருந்திய வென்பது மற்றொரு பொருள். பெண்ணை-பனையை; நங்கையை யென்பது வேறு பொருள். இந்தத் தோகை மறுத்தால் படித்த மற்றொரு பெண்ணை மணஞ்செய்துகொள்ளென்பது கருத்து.

121. பாவைக்கு - மரப்பாவைக்கு. குயிலாட்கு - குயில்போன்ற மொழியையுடைய தலைவிக்கு. விஞ்சை பல வரும் - பலவகைக் கலைகள் தேர்ந்த.

தலைவன் தலைவிவருத்தியவண்ண முரைத்தல்.

122. *தனைமகிழ் கேள்வ னயிர்ப்பத்தன் னீர்மை தன்துநிழ*
வினையிகழ் மாவைப் பிறந்திடும் போதரி யீடழிக்கும்
வினைதிக ழோவியத் தாற்றெளித் தாளும் வியப்பவெனைப்
புனையிழை வாட்டின னெம்மான் சிராமலைப் பூங்கொடியே. ()

பாங்கி தலைவிசெவ்வியருமைசெப்பல்.

123. *இந்தாடு வேணிச் சிராமலை யீசனை யேத்துமன்பா*
பந்தாடு வாளவ ளெம்பெரு மாட்டி பரிந்துசிற்றில்
வந்தாடு வாளவ ளூசலம் மானை மகிழ்வெனக்குத்
தந்தாடு வாளவ ளெங்ஙனம் யான்சென்று சாற்றுவனே. ()

தலைவன் செவ்வியெளிமைசெப்பல்.

124. *கயலார் விழியுமை பாகன் சிராமலைக் கார்மயிலே*
புயலார் குழலிக்கு நீயென் வரவு புகலுமுனம்
மயலார் தரவங் கெழுவா டழுவி மனமகிழ்வாள்
செயலார் பணிக ளருள்வா ளுனக்கவள் சீர்பெறவே. (௩௨)

---

122. *அயிர்ப்ப - சந்தேகிப்ப. மாவை - யானையை. அரி - சிங்கம். வினை - செயல். தன்னீர்மையை ஓவியத்தால் தெளித்தவள் சீவகன் தேவிமார்களுள் ஒருத்தி; புனையிழை - தலைவி. புணர்ச்சிவிசேடத்தை அறிந்து தன்மீது சீவகனுக்கு உண்டாகிய ஐயத்தை, பிறக்கும்போதே சிங்கக்குட்டி ஒன்று யானைமத்தகத்தைப் பிளத்தலைத்தெரிவிக்கும் ஓவியமொன்றை எழுதிச் சீவகன் தேவிமார்களுள் ஒருத்தி தீர்த்தாளென்பது பண்டைவரலாறு. இது, "சீவகனுக் கன்றொருபெண் சிங்கமொரு கன்றீனும், பாவனைபோலெழுதிப் பக்கத்தில் - ஓவியமாக், காரானை யொன்றெழுதிக் காட்டவரிக் கன்றுதுள்ளிப், போராடிப் பாய்ந்தகதை பொய்யலவே"* (**கூளப்பநாயகன் விறலிவிடுதூது, 203–4**) *என்பதனாலும் விளங்கும்.*

123. *இந்து - பிறை.*

124. *பணிகள் - ஆபரணங்களை.*

பராசசிங்கையாரியன் பக். 607
பராசசேகரன் 1208—10, 1269, 1675, 1681, 1771; பக். 637
பராசபயங்கரன் 646
பராசபூஷணன் 1269
பராசரத்னகிரீடம் 1310
பராசராவணராமன் 928
பரவர்போர் 889
பரவான நாயனர் 1872
பரவைமுழங்குலகம் 258
பராக்கிரமபாகு 2070; பக். 602
பராக்கிரமபாண்டியன் 925-37, 934—7;—பாட்டு 944-9;—சிவபதமடைந்தது 950-2
பராக்கிரமவாகுபூபன் 2070
பராங்குசதாசபாகவதன் 2089
பராங்குசன் 892, 1816, 1822
பராசரபட்டர் 1844
பராந்தக தேவன் 784
பராந்தகபாண்டியன் 889, 894-5
பராந்தகன் - நெடுஞ்சடையன் 889-90
பராமுகமாதல் 1147
பரிகலம் 46, 1064, 1113
பரிகாரம் 1625
பரிச்சின்னம் 811
பரிசயம் 509
பரிசறுத்தல் 134
பரிசில்கடாநிலை 584
பரிணமவாதம் 2054
பரித்தல் 'பரித்தவுரை' 1545
பரிதானம் 373
பரிப்பெருமாள்—1539-42;—உரைப்பாயிரம் 1539; பக். 353;—பாட்டு [2007
பரிபவம் 784
பரிபாட்டமுதம் 1549
பரிபாடல் 1384;—உரைச்சிறப்புப்பாயிரம் 1549;—செய்யுட்குரியார் 2011
பரிபூர்ணன் 889
பரிமளகவிராசன் 1737
பரிமளித்தல் 1732
பரிமேலழகர் 1538, 1543-50
பரிமேலழகியன் 1548
பரியின் இயல்புகள் 526
பரியினும் போகாது உவப்பினும்வந்து இரும் பொருள்கள் 296
பருடையர் 1047
பருத்திக்குண்டீர் 2133
பருத்தி யாடையான ஊர் 2144
பருதி - குறளுரைகாரர் 1538
பருதியஞ்செல்வன் 124-5
பருதிவனப்புராணம் 1962
பருந்துநிழலும் உவமை 1556
பருப்பொருள் கடிதல் 1552
பருவந்து 336
பருவமழைக்குச் சூரியன் காரணம்124
பல்காப்பியம் 1564, பக். 319
பல்காப்பியனர் 1389
பல்கூட்டாரம் 449
பல்சந்தமாலை பக். 300
பல்சனம் 700
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி 889
பல்லக்கு 1504, 1623, 1655
பல்லவதரையன் 1569
பல்லவம் 2109
பல்லவமாராயன் 1983-4
பல்லவர் - 819, 890, 897, 906, 970, 1274-6; (-பலர்) 1440
பல்லவர்க்குத் தொண்டைமாலை 970
பல்லவவேந்தனை பெருமானடிகள் வாக்கு 1982
பல்லவனைப் பாண்டியன் புறங்கண்டது 892
பலத்தல் 1300
பலதேவீசர் 1643
பலபட்டடைச்சொக்கநாதப்புலவர் 1318, 1740; பக். 293, 303
பலபத்திரன் 1937
பலா பெரியார்க்குவமை 256
பலிபீடம் 1300
பவணந்தி 1224, 2032;—மாமுனி—[1537
பவதாயமங்கலம் 1015
பவரோகமந்திரம் 2028
பவளப்பாடிப்புலவர் 1777
பவளமலை 2102
பவளமலைபயந்த கவளயானை 91
பவளிப்பிடி 693
பவுளிபுனைத்தல் 1911
பழசை - பழையாறு 182
பழந்தீவம் 2109
பழந்தீவு 12000—780, 782
பழம்பாட்டு 891
பழமலைச் சிதம்பரபூபதி 1925

பழமொழி பக். 571
பழவடிகள்சோத்தபாட்டு 1439
பழவினை 342—6
பழனி 2091
பழனிப்புராணம் 1779
பழனிமாமுனிவர் 1946
பழுக்காய் 691
பழுமரஞ்சூழ்ந்தபறவை உவமை 268
பழைமை – தொன்றுதொட்டுவரும் உரிமை 899
பழையகோட்டைப் பட்டக்காரர் பக். [603
பழையபாகம் - கவிவகை 1251
பழையயாழ் மூப்பால் அழிந்தகுரற் குவமை 302
பழையவெற்பு 1943
பழையனூர்க்காரி 1404—5
பழையனூர்நீலி பக். 622
பழையனூரார்பழிதீர்த்ததீக்குழி [1460-62
பழையாறு 181, 2122
பள்ளி - சைனர்வழிபடும் மலை 183
பள்ளிகொண்டான் 1371
பள்ளிச்சந்தம் 892
பள்ளியுணர்த்தும்பிரான் 1828
பற்பநாபன் 917
பற்றறுத்தல் 333
பறந்தலைநன்காடு 711
பறம்பு - பாரிமலை 280, 985
பறியல் - அட்டவீரத்தொன்று 88
பறைக்குறுதல் - நீக்குதல் 335
பறைகெழுவாரணம் 491, 718
பறைசாற்றியது 567
பறைநிறைகொல்யானை 491, 718
பறைபேர்த்துக்கன்றூட்டுதல் 895
பன்மன் 791
பன்றி (நாடு) 2107
பன்றிக்கொடி 46
பன்றிகளாகப் பகைவர்படை கூறப்ப [டல் 503
பன்னசாலை 346
பன்னிருகணங்கள் 165
பன்னிருபடலம் 1563, பக். 318
பன்னிருபுலவரின் முன்னவன் தொல்காப்பியன் 1564
பன்னிருமடற்பூவுக்குள்நின்றாள் 1746
பன்னிருவர் அகத்தியர்மாணாக்கர் 1563
பன்னெறி 401—18 [—4
பனங்குரும்பையின் ஏரான முலை 666
பனசையில் ஆதிவராகன் 1229
பனந்துண்டத்தை ஔவை பாடியது [1411
பனம்பாரனார்பாயிரம் 1989
பனுவல்வாய் 1402
பனைத்தடக்கைநால்வாய் 41
பனையின் இழுங்குப்பிளவு நாரைவாய்க் குவமை 1463
பர்க்கம் 1236
பாக்கமுடையான் 1263
பாக்கனார் 1439
பாகசாதனன் 1010
பாகசாலனாரம் 892
பாகட்டேர் பக். 258
பாகம் (கவிப்பாகம்) இருவகை 1251
பாகரன் - பிரபாகரன் 2054
பாகவதகதை 1653
பாகவதசாரம் 1701
பாகவதபுராணம் 1652, 1673
பாகவதரிட்டசமுத்தி 1600
பாகற்கொடியறுப்பார் 1637
பாகனூர்க்கூற்றம் 889
பாகுடகவி 1138
பாகை 1775;— கோ 973;— கடற்கரையது 973
பாகைச்சொக்கலிங்கன் 1797
பாகைப் புன்னைவனநாதன் 1951
பாகையந்துறைவன் 974
பாங்குபடுதல் - ஒருசார்பாதல் 370
பாச்சில்வேள் நம்பன்பாட்டு 1013—4
பாசறை 729
பாசி 488
பாசிமறம் 489
பாஞ்சராத்திரம் 2018
பாஞ்சாலன் புதல்வன் 762
பாட்டம்பு 1512
பாட்டன் - பாட்டமதத்தவன் 2054
பாட்டான் - புலவன் 1530
பாட்டியல் 1531, 1726
பாட்டினளினம் 1733
பாட்டுமுறையும் பயிலாமை 1400
பாடகம் (-தலம்) 29, (-காலணி) 55
பாடகர் பிழைப்பு 1549
பாடம்போற்றல் 1530
பாடல் என்றும் இழியாமை 1417
பாடல்பெறுதல் 284
பாடலம் - சோழன்குதிரை 626*

பாடாண் 559—585
பாடியம் 1837
பாடுவித்தவர் 899
பாடுபுக்காற்றுதல் 580
பாண்செய்தல் 869
பாண்புலவன் 1188—91
பாண்டமங்கை 2088
பாண்டவர் 768, 1435
பாண்டவர்தூதன் 1278
பாண்டிக்கொடுமுடி 889
பாண்டிக்கோவை 867-88; பக். 585
பாண்டிநாட்டுச் சிவதலம் 86-7
பாண்டிநாட்டுச் சிறப்பு 2099—2101
பாண்டிநாட்டெல்லை 2098
பாண்டிப்பெருமாள் 1896—8
பாண்டிமண்டலசதகம் பக். 625
பாண்டிமண்டலம் 799, 1555
பாண்டியநாதன் 890
பாண்டியபட்டர் 1845
பாண்டியர்-ன் 650—87, 859-962, 1451, 2099;—அருஞ்செயல்கள் 892;— அவையில் தமிழ்ப்புலவர் 1535;—கம்பர்சிவிகை தாங்கியது 1383;—குதிரை 529;—குலதெய்வம் பக். 210;—சம்பராசன் படைவீடுமுற்றியது 1201;—சடையற்குச் சிங்காதனமிட்டது 1132;—சோழற்குத்தோற்றது 1058;—தமிழ் வளர்த்தகூடல் 994;—தாட்சிலம்பாற் கடல்வற்றியது 1270;—தமிழின் கரைகண்டமை 892;—திருமணம் 1801;—தேவி 1627;—படிவேண்டியது 1232;—பாட்டு 1004-5, 1462, 2201;-புலவன் 1202;-புறக்கொடை 1523;—மகளும் பார்த்தனும் 750,—யானை 517—21;-யானையைப்புகழ்ந்து புகழேந்திபாடியது 1491;—வரிசை 1206;—வாசல் 893;—வாசற்புலவர் 1463
பாண்டியற்குச் சங்கத்தார் கூறியது
பாண்டியன் மாகீர்த்தி பக். 587 [1391
பாண்டியனிடம் கம்பர் கூறியது 1136
பாண்டியனும் தேவியும் கம்பர்பல்லக்குச் சுமந்தது 1504
பாண்டியாதிராசன் 889
பாண்டில் 1368, 1426
பாண்டிவளநாடு 2101
பாணர் 1735 1188—91
பாணர்க்குப் பாண்டிநாடு அளித்தவன்
பாணர்ப்பாரந்தாங்கியோன் 2138
பாணர்பழந்தலைச் சீறியாழ் உவமை
பாணர் வயிரியர் பொருநர் 724 [302
பாணரான நாயனார் 1872
பாணவமிசத்தரசன் பக். 532
பாணற்குச் சோழன் முடியளித்தது
பாணன் பாணியர் பேச்சு 1684 [906
பாணன்பிணமெடுத்தவன் 1228, 1230
பாணி (-பாடினி) 1684;(-தேசம்)799
பாணித்தல் 757
பாணிரண்டு 2008
பாணுலிபல்குதல் 477
பாத்தியுடைக்கலிமான் 458
பாதமயக்கு பக். 620
பாதாம்புயம் 1274 [925, 1365
பாதிபழி பாதிபுகழான பாட்டு 893,
பாதிரி கயவர்க்கு உவமை 256
பாதிவசை பாதி நசையானபாட்டு893, 925, 1365
பாதிவெண்பாவில் திருமாலவதாரங்க
பாதீடு 447 [ள் வருதல் 1618
பாப்புக்குரங்கு 1596
பாப்பையவேள் 1766
பாடபீரு 889
பாம்பாறு 2148
பாம்புக்குப் பால்வார்த்தல் 46
பாம்பேர்மருங்குல் 990
பாய்தோய்ந்தநாவாய் உவமை 510
பாயிரத்தொல்காப்பியங்கற்பார் 1996
பாயிரம் 362
பாயினசிறடி 110
பார்த்தன் 1635;—நிவாதகவசரை யழித்தது 751;-பாண்டியன்மகளை மணந்தது 750
பார்த்திவநல்லூர் 1791
பார்ப்பதி 1636
பார்ப்பார்-ன் 1501, 1037
பாரகாவியம் 1790
பாரத்துவாசாதிகள் 892
பாரதம் 892, 1938;—பதினெண் பகலில் முடிதல் 813
பாரதம்பாடிய பெருந்தேவனார் 22
பாரதவிலக்கணம் 1564

பாரதவெண்பா பக். 29, 72
பாரதாயன் பக். 617
பாரதிதீபம் 1774
பாரம் - தசபாரமிதை 187
பாரமிதைகள் பக். 535;—முப்பது 196
பாராவதம் 186
பாரி 985—6, 1401
பாரிசாததருவைக் கண்ணன்கொணர்ந்
பாரிசாதலீலை 1944 [தது பக். 520
பாரித்தல் 337, 869, 885
பாரிபறம்பு 280, 985
பாரிபறித்தபறி 1404
பாரிமகளிர் 1047, 1408
பாரியூர் 1349
பால்வண்ணதேவனை வில்லவதரை
பாலகன் 553 [யன் 1535
பாலமுது 1070
பாலலைகோத்திரம் 1612
பாலன்னசொல் 1401
பாலினைப்பழித்தல் 1312
பாவகாரி 341
பாவநாசம் நமச்சிவாயக்கவிராயர் 1745
பாவலர் 1478
பாவலர்கொடியவராதல் 365
பாவாணர் 1305
பாவிகளிற்பாவிகள் 319
பாவுக்கல் 1303
பாவுடன்முருக்குதல் 880
பாவேந்தர் 1187, 1450
பாவைப்பாட்டு 177
பாவை - பொறிவகை 1429
பாவைவளர்க்கின்ற பைங்குரவு 873
பாழ்ப்பு 1625
பாழிப்போர் 869, 889
பாளிபாஷை பக். 534
பாளையகாரர் 1797
பாற்கடல் நூற்பொருட்கடற்கு
உவமை 1536
பாற்கடல்போலப்பரந்தநூல் 1552
பாற்கடலிற்றோன்றியபொருள்கள்
பாற்கரியம் 2054 [892
பாற்படப்பரப்புதல் 889
பாண்முறை 899
பாஸ்டர் ராஜ்யம் பக். 579
பிங்கலநிகண்டு 2077
பிங்கலம் 2082
பிங்கலமுனிவர் 2077
பிச்சையம்மன் 1121
பிஞ்ஞகன் 1392
பிட்டுவாணிச்சிமகன் 995
பிடி 513, 519, 654
பிடிக்கோடுகளிறு உவமை 112
பிடித்தபத்து 2040
பிடிபாடு 906, பக். 589
பிடியின்கோடு இருப்பையின்வாடாப்
பூவுக்கு உவமை 1394
பிடியைத் தலைவி இரத்தல் 693
பிடுங்குதல் 1595
பிண்டிக்கீழ் நான்முகன் 132
பிண்டித்திருமால் 130
பிணவணை 1173
பிணி 303
பிணிகிடந்தார்க்குப்பிறந்தநாள் அச்சம்
பிணிமுகத்தோன் 1383 [பயத்தல் 680
பிணியரசன் 170
பித்தசாந்தியாக வாழைத்தோட்டம்
பிதாக்களாவார் 401 [புகுதல் 1490
பிதாவைக் கொலைபுரிந்தான் 345
பிம்பசாரன் பக். 535
பியல் 700
பிரகாசம் (—சிவப்பிரகாசம்) 2044
பிரசண்டவாக்கி 1713, 1796
பிரசண்டன் 1527 [358
பிரதமையிற் பித்தரும் பின்றுபேசாமை
பிரதாபசிங்குமகாராசர் 1753, பக். 640
பிரதாபம் 1652
பிரதாபருத்திரன் 1203;— (கசபதி
யரசன்) பக். 606
பிரதானிக்கம் 1338
பிரதானிமுத்திருளப்பபிள்ளை 1795
பிரபந்தகவி 362
பிரபந்தவகை 1713
பிரபாபாலர் பக். 536
பிரபுலிங்கலீலை 1941
பிரம்பூர் ஆனந்தரங்கன் 1360
பிரமதேயம் 892
பிரமதேவன் (—தண்டநாயகன்) 786
பிரமராயன் 1122, பக். 607
பிரமலிகிதம் 1123, 1658, 1793
பிரமன் - பிரமாதிராயன் 1256;—
1303, 1414;— கொடி 1;— நிறம்
1;— படைக்கலம் வாய்மை 1

பிரமாதிராயன் பக். 607
பிரமியகிரந்தி 2150
பிரமேயசாரம் 1842
பிரமோத்தரகாண்டம் 1626
பிரயோகவிவேகம் 1706—9, 1718
பிராமணப்பிள்ளையன் பாட்டு 1640
பிராமணர் 1595
பிரியாவிடை 1592
பிருகற்பதி 1529
பில்லிவைத்துக்கொல்லுதல் பக். 609
பிழைபாக்கு 668
பிள்ளைதிருநறையூரரையர் 1829
பிள்ளைநிலை 721—2
பிள்ளைப்பாண்டியனார் 1641
பிள்ளைப்பெருமான் 1138—9
பிள்ளைப்பெருமாளையங்கார் 1738—9
பிள்ளைமதி 647
பிள்ளையழகியமணவாளநயினார் 1851-[3
பிள்ளையாட்டு 723
பிள்ளையார் 1598
பிள்ளைலோகாசாரியர் 1848, 1853
பிளாய் 1590
பிளிற்றுதல் 349, 380
பிறக்கியபோர் 2097
பிறக்கிவைத்தல் 1031
பிறக்கீடு 470
பிறக்குதல் 466, 737, 1031, 2097
பிறகள் 387
பிறங்கன்மா 102
பிறந்ததிசைக்கிசைநிற்றல் 1585
பிறந்தநாள் பிணிகிடந்தார்க்கு அச்சம் [பயத்தல் 680
பிறப்பாதி நான்கு 4
பிறப்பித்தோன் - தந்தை 401
பிறர்மனைநயவாமை 242
பிறவாதபோராளன் 6
பிறவாநெறி 174
பிறவாநெறியார் 1603
பிறவிக்குணங்கள் 275
பிறைகுடி 1773
பிறையின்தோற்றம் 126
பின்றூங்கி முன்னுணர்தல் 1393
பிஷுகி 2102
பீதாம்பரம் 1080
பீலிபோல் யானைக் கோடாதல் 380
பீறல் 640
புக்கிதுய்த்தல் 889
புகர்வான் 111
புகல்வேட்டல் 484
புகலூர் பக். 636
புகலூரந்தாதி பக். 599
புகலூரார் 2066
புகழ் 291-3, 590-5
புகழ்க்கம்பம் நாட்டுதல் 1315
புகழ்ப்பொருள் 1470
புகழ் பொருள்பொழிவார்மேற்றூதல் [292
புகழ்மகள் 819
புகழ்வெய்யோன் 714
புகழாப்புகழ்ச்சி 837
புகழாளர்க்கு எவ்வுயிருங் காத்தளித்தல் [கடன் 254
புகழியூர் 890
புகழின்செல்வி 799
புகழெய்தாதார் இன்றொரெனல் 293
புகழேந்தி 1486—91, பக். 20;—உலாப்பாடுபவர் 1803;—குறுங்குடியைப்பாடியது 34;—வாக்கு பக். 527;—வெண்பாவிற் சிறந்தவர் 1804
புகழேந்தியாண்டான் 1150
புகழேந்தியார் பக். 587
புகாப்பது 'பிறருள்ளம்புகாப்பது' 1039
புகார் 645, 1202, 1469, 1633, 2113;—புறம்பணையான் 997;—பூதம் 220;—பெருமான் 623;—மன்னன் 1409;—வணிகரது கொடை 279;—வணிகன் மாநாகன் பந்தன் 1418
புகைக்கருங்கொடி உம்பர் மீன்சுடுபுகையின் வாய்த்தல் 449
புங்கனூர்கிழவன் 1620
புட்கரணி கல்சாத்துவித்தல் 1075
புட்டில் 1429
புட்பகப்பிடி 786
புட்பதாகை 1008
புடிபுடியாக 1308
புடோலியரசன் 1144
புண்டரம் 907
புண்டரிகபாதம் 200
புண்டரிகமாதர் 146
புண்ணடை 280
புண்ணனந்தர் 708
புண்தீரத் தூகளெழுதல் 440
புண்மான் 214

புண்வாய்கிழித்தல் 701
புத்தசமயம் 1206
புத்தந்திகழ் மூவர் 2054
புத்தமித்திரன் 1464
புத்தர்— அரக்கர்வேண்டமெய்க்குருதி அளித்தது 186, 191;—அரக்கரில் ஒருசாரார்க்குநெறிமொழிந்தது186;—அரக்கரைவர்க்கு அறமுரைத்தது 188;—அரியணை வீற்றிருக்குநிலை 188;—அரியேறு கொடி 184;—உடம்பினைப் பிளந்து பிறர்க்கீந்தது 197;—எண்பத்தொன்பது சித்திகளை உரைத்தது 187;—ஒருவன் அயில்கொண்டெறியக் கருணைபுரிந்தது186;—கண்கொடுத்தது197;—கருடற்கு வாய்மைநெறி பகர்ந்தது 188;—கருடற்கும் அரவுக்குமுள்ள பகை தீர்த்தது 187;—கைந்நாகத்தார்க்குஆழியளித்தது 186;—தடிகொடுத்தது197;—தற்சேர்ந்தார்க்கு விண்கொடுத்தது197;—தனக்கென்றொன்றுனு முன்னாமை 195;—தனம், களிறு சிந்தாமணி முதலியனவேண்டியார்க்குஅளித்தது215;—தாய் எழுநாள் இன்னுயிர்தரித்தது 194;—தாய்மருங்குல் நோவாமற் பிறந்தது 194;—ஞானஞ் சீலமாக்கியது 197;—நன்றியில்லான் பூணுந் தீயணைப்பாய்படுத்துச் சிறுதுயில்கொண்டது 186;—நாகர் கவரிவீசுதல் 185;—நாகர்துயர்போக்கியது187;—நாகர்குலத்துக்கு அமிழ்தம் அருளியது 186, 188;—பாம்பின்படத்தில்உலவிட்டுத் துலையேறியது 186;—பிரமரால் தொழப்படுதல் 205;—பிறர்க்கே உறுதிக் குழந்தது 195;—புலிக்கு உடம்புகொடுத்தது 186, 187, 192, 197, 204;—புறவின் மாயயாக்கைசொலியத் தம்முடம்பு நிறுத்துக்கொடுத்தது 191;—பெண்கொடுத்தது 197;—பேரருட்புணர்ச்சி 192;—போதியுறுமளவும் ஓடியது 208;—மகக்கொடுத்தது 197;—மகளிர் முன் காமனைத்தொலைத்தல் 188;—மண்கொடுத்தது 197;—மாரன் மகளிரால் பேதிக்கப்படாமை190;—மாரனைக் காய்சினந்தவிர்த்தது 187;—மனம் மலரினுமெல்லிதாதல்190;—மானுருவாகியது 187;—மீனுருவாகியது 187;—முகில்போலும் மொழியினர் 186;—முப்பத்திரண்டுகலை மொழிந்தது 187;—விண்ணவர்நாயகன் வேண்டக் கண்ணளித்தது 212;—வியோகம்பற்றியபாடல் 206;—விலங்குமுதலிய பல்பிறவி எடுத்தது214
புத்தன்புதல்வன் 1586;—புராரி பக். [365
புத்தனார் 1874
புத்திகெட்டபேர் 1625
புத்தூர் 1223, 2140
புதல்வரைப்பெறுதல் 243
புதல்வனை வெட்டியவன் 1350
புதான்கோடு 889
புதியது தீயது பழையது நன்றெனற் கண் வரும் தவறு 1540
புதியபாகம் (கவி) 1251
புதுச்சேரி 1790
புதுப்பள்ளிமன் 1842
புதுமொழிப்புலவர் 1691
புதுவாபுரி 32
புதுவை 1138, 1357;—சடையன் 1131—3, 1471, 2125
புதுவைச்சேதிராயன் 1137, 1496
புதுவையான் 1130
புயவலயம் 62
புரட்டர் 786
புரந்தரதாரு 1131
புரந்தரன் 866
புரவாளர் 2212
புரவிபாலயத்தலைவர் பக். 614
புரவிவலங்காட்டுதல் 892
புராணத்திருமலைநாதர் 1669—71 பக் [637
புராணமண்டபம் 1218
புராணிகன் 362
புராரி -(பெயர்) 1586
புரிசை பொறியடங்குதல் 496
புருவக்கடைவளைதல் 1162
புருவமுரிவு 550
புருஷஸூக்தம் பக். 529
புரூரவசரிதை 1630—1
புரூரவா 359

புரைகிளைத்தல் 2188
புரைசை 529
புரைதல் - ஒத்தல் 1536
புல்லணல் 1427
புல்லணலார் 457
புல்லறிவாளரை ஔவைபாடியது 1402
புல்லாணித்திருமால் 1662
புல்லாணியரசு 2150
புல்லார்வாய்ச்சொல் 293
புல்லென்றுகாட்டல் 315
புல்லென்றுபோதல் 267
புல்வேளூர்ப்பூதன் 983, 991—2
புலக்கோல் 2134
புலகேசி 784
புலபுலெனல் 1879
புலமகன் 1713 [243
புலமை கல்விநலமிலதாயின் வீறுதல்
புலமைச்சிறப்புடையோர் 1802—4
புலமைசெத்தமை 1313 [100
புலமைவருமென முருகனையேத்தல்
புலவர்—ஆயிரவரில் ஒருவர் 276;—கொடி காளங்கள் 1473;—கொடை 1478;—பல்லக்கின்பின் அரசன் வருதல்1256;—பெறும்பரிசு1309;—மோதிரமிடுதல் 1744;—யானைக்கன்றும் வளநாடும் பெறல் 1253;—வாய்ச்சொல் 1694—5;—விருதுகள் 1473
புலவர்நாப்பண்வென்றி 125 [1564
புலவர்பன்னிருவருட்டலைவன் 1562,
புலவராற்றுப்படை 1192, 1694—5
புலவன்வள்ளுவன் 2003
புலவனும் தாதியும் 1650 [601
புலவிபொருளாகத்தோற்றிய பாடாண்
புலனெனுங்கொள்கலன் முகந்தவகை 1536
புலிக்காடுவெட்டித்திருத்தல் 1297
புலிக்குட்டி 1600
புலிக்குட்டிசிங்கன் 1609
புலிக்கொடியான் 1200
புலிசை - திருப்பாதிரிப்புலியூர் 1967
புலித்தோல் 45
புலிப்பசிக்குப் புத்தர் இரையாகியது
புலிப்பைவென்றான் 884 [192, 204
புலிப்போத்து 460
புலியானைநடத்தல் 1091
புலியூர் 889, 906, 1087
புலியூர்ப்புராணம் 2084
புலியூரந்தாதி 1771 [1511
புலியைச் சோழன் கம்பமேலேவியது
புலையனுடல் வெடிக்கப் பொய்யாமொழியார்பாடியது 1456
புவனமுடையான் 800
புவனமுழுதுடையான் 819
புவனேகவாகு 1211, 1770
புவனேகவீரன் 917, 921, பக். 594,
புவனை 1127 [696
புழற்கோட்டம் 1147
புழுக்கையன் 1609
புழுகணிவேந்து 1701
புழுகாச்சி 1373
புழுகு 1222
புழையார்தடக்கை 94
புள்ளரையன் 1835
புளிக்கீழ்த்தேசிகன் 1823
புளிக்குப்பாடுதல் 1416
புளிங்குடி உய்யவந்தான் 1562
புளியங்காய்ப்பெருஞ்சேந்தர் 1384
புளியஞ்சோறு 1452
புற்கை 1153, 1420
புற்பனி அளவின்மை 240
புறக்கொடை 187, 1202
புறஞ்சிறை 302
புறத்தாயநாடு 895
புறத்திணைப்பிரிவு 419
புறத்திரட்டு பக். 28
புறத்திறை 431
புறத்தோன் - அகமிசைக்கிவர்தல் 486;—குடைநாட்கோள் 475;—தொகைநிலை 500;— மாணங்காத்த நொச்சி 490;— முற்றிய முதிர்வு 480;—வாண்மங்கலம் 498;—வாளுட்கோள் 476;—வீழ்ந்த புதுமை 496—7
புறநிலைவாழ்த்து 582
புறம் 1384, 2009
புறம்பணையான் 597, 997
புறம்பொசிந்துகாட்டல் 1814
புறவிற்கவித்தபுதர் 219
புறவுரை - அலர் 690
புறாவுக்குப் புத்தர் தம்முடம்புரிறுத்துக்
புன்கவி 1522 [கொடுத்தது 191
புன்மாலைப்போது 2181

புன்னாகச்சோலை 609
புன்னைமுத்தரும்புதல் 997
புன்னைமொட்டு முத்துப்போறல்2100
புன்னைவனநாதன் 1775—6, 1951
புனலைப் புனலாற்போக்கல் 395
புனவாயில் 87
புனன்மருள நெய்சொரிதல் 865
புனனாடு 810, 897, 1719, 2107
புனனீர்நாடு 632—4
புனிதம் - வெண்ணெய்க்குற்றம் 219
புனிற்று 444
புனிற்றுப்பசி 192
புனையுரை 1552
புஜகநாயகதரணிதாரணன் 892
பூக்கோட்டண்ணுலை 1429
பூகத்தோட்டம் அதிகையில் உண்டாக்கியது 1106
பூங்கோதையார் 1768
பூசன்மயக்கம் 710
பூசன்மாற்று 433
பூசனைப்பயன் 227
பூ சாந்தம் புகை யவிகள் 498
பூட்டகம் 1275
பூட்டிழிவித்தல் 890
பூதத்தார் அவையடக்கு 372 [1438
பூதத்தாரும் காரைக்காற்பேயாரும்
பூதத்தின் துணையால் சோழன் வடவாசரை வென்றது 1151
பூதந்துணைகொண்ட வாணன் 1344, பக். 613
பூதபுராணம் 1384
பூதம்பணிகொண்டபாண்டியன் 886, 892, 913, 943
பூதம் முசுகுந்தனுக்கு அரக்கரால்வந்த மயக்கத்தை நீக்கியது 220
பூதன் 997
பூதூர் 1869
பூதூர்வடுகன் 1677
பூந்திருக்கோவல் 1408
பூந்துருத்தி 1459
பூந்துறைக் குப்பிச்சி 1353
பூந்துறைசைநாடு 2106
பூந்துறைநாடு 1345
பூந்துறைவாரணவாசி 1352
பூப்பலிசெய்தல் 733 [மை1879
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் உவ
பூம்புகார் 1433, 2115; பக். 620
பூம்போர்வை 1034
பூமழையான் - சினன் 149, 173
பூமன் - பிரமன் 88
பூமிசையொதுங்கியவன் 189
பூர்வாராசர் 899
பூரணத்தடைதல் 1977
பூரணநண்ணுதல் 1973
பூரித்தல் வாடல்கள் 337
பூவணம் 87
பூவணவன் காரி 1986
பூவல்லி 2039
பூவலன் பக். 614
பூவலூர் 889
பூவாணி 2106
பூவிலைமகளிர் 449, 871
பூவையுலா - பூவணவுலா 1741
பூவொடுநீர்தூய்வத்தல் 44
பூழி (-நாடு) 2107
பூழிக்கதவு 2140
பூழித்தலை 882
பூழிமஞ்செய்தல் 786
பூழியர்கோக்கோதை 607
பூழியர்-கோன் 860;—வேந்தன் 1122
பூழியன் 889, 892
பூழியான் - சிவன் 1496
பூளைவனப்புராணம் 1962
பூளையொழிதல் வாளுள்போதற்குஉவ
பெண்குமரி 1302 [மை 300
பெண்சக்கரவர்த்தி 1486
பெண்டிர்காமம் குடத்துவிளக்காதல்
பெண்டிர் மடலூராமை 698 [657
பெண்டிரைக்காப்பதில்லாமை 238
பெண்ணரசி 921-2
பெண்ணறிவு 360
பெண்ணுகடம் 889, 892
பெண்ணுன் 1281
பெண்ணைக்குரும்பை முலைக்குவமை
பெண்ணைமடல் 876 [666
பெண்ணையாறு 983, 1047, 1412
பெண்ணைவழி வெள்ளியுறைதல் நீக்
பெண்பாலேன் 660 [குறி 865
பெண்பாவி 408
பெண்பெருமான் பக். 574
பெண்மடல்விலக்கு பக். 574
பெண்மனம் 384

ஸ்ரீ:

சூடிக்கொடுத்த நாய்ச்சியார் தோத்திரப்பாமாலை மூலமும் உரையும்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

1. திருவளர் முகுந்த நந்தனனினமாந்
தேம்பொழிற் கற்பகக் கொடியைக்
குருவள ரரங்கத் தரசெனுந் தருவிற்
குலவலாற் காண்டகை யாளை
யுருவளர் பொறையை யருளினாற் பிறிதோ
ரொண்மலர் மடந்தைபோன் றுளாளை
மருவளர் குழற்பூங் கோதையைப் புகலோர்
மற்றிலேன் புகல்புகு கிறேனால்.

பதவுரை:— திருவளர் முகுந்த நந்தனன் இனமாம்—(கல்வியறிவொழுக்கமென்னும்) செல்வம் மிகுந்த பெரியாழ்வாரது திருவம்மிசமாகிய; தேம்பொழிற்கற்பகக்கொடியை-நந்தனவனத்துக்குக் கற்பகக்கொடிபோன்றவரும்; குருவளர்—மேன்மைமிக்க; அரங்கத்தரசெனுந்தருவில்—திருவரங்க மன்னனாராகிய அரிசந்தனவிருக்ஷத்தின் கண்ணே; குலவலால்-சேர்ந்துவிளங்குதலாலே; காண்தகையாளை—சேவிக்கத்தக்கவரும்; உருவளர்—அழகு அதிகரிக்கின்ற; பொறையை—பூமிப்பிராட்டியின் பூர்ணாவதாரமாயிருப்பவரும்; அருளினால்—கருணையினாலே; பிறிதோர் ஒண்மலர் மடந்தைபோன்றுளாளை—மற்றோரலர்மேன்மங்கையை யனையவரும் (ஆகிய); மருவளர்-பரிமளம் விருத்தியடைகின்ற; குழற்பூங்கோதையை—திருக்குழற்கற்றையினையுடைய அழகிய சூடிக்கொடுத்தநாய்ச்சியாரை; புகலோர்மற்றிலேன் — வேறுகதியில்லாதயான்; புகல்புகுகிறேன்—சரணமாக அடைகிறேன். ஆல் அசை.

*

கருத்து:—பெருங்கொடையும் பெருஞ்செல்வமும் காட்சிக்கெளிமையும் பொறுமையும் கருணையும் ஒருங்கேயுடைய நாய்ச்சியாரை நிர்க்கதியாயிருக்கிற யான் உய்யுமாறெண்ணிச் சரணமடைகிறேன் என்பதாம்.

விசேடக்குறிப்பு:—திருவென்னும் பலபொருளொருசொல்லை ஸ்ரீயென்னும் வடசொற்றிரிவென்பர் சிலர். அதற்குப்போலவே இதற்கும் மேன்மை ஒளி அழகு என்னும் பொருளுண்மையில், திருவளர் என்பதற்கு மற்றைய ஆழ்வார்களைக்காட்டிலும் மேன்மைமிக்க ஞானாநுட்டானங்களால்வந்த தேசுமிகுந்த சமதமாதிகுணங்களால் விளங்கும் அழகுவிஞ்சிய என்றும் பொருள்கொள்ளலாம்.

திரு என்பதற்குப் பேராசிரியர் கண்டோரால் விரும்பப்படுந்தன்மை நோக்கம் என்று பொருள்கூறுவர்.

இத்திருவை, இனம் தேம்பொழில் கற்பகக்கொடி என்பவற்றுக்கும் அடைமொழியாகக்கொண்டு, அதற்குத் தக்கவாறு பொருள்கொள்க.

ஸ்ரீவில்லிபுத்தூரிலே வேணுகுலமாகிய விரிதிரைக்கடலுக்குக் கலைமதியாய்விளங்கிக்கொண்டிருந்த முகுந்தரென்னுந்திருநாமமுடைய விப்பிரேந்திரராகிய விபுதசிகாமணிக்குப் பாற்கடலிற் பள்ளிகொண்டருளிய பரமசுவாமியின் நியமனப்படி ஐந்தாவது திருக்குமாரராகத் திருவவதரித்ததனாலே பெரியாழ்வாரை முகுந்தநந்தனனென்று சொல்லியிருக்கிறது.

இனம் என்றது வேயர்குலத்தையும், மயர்வறமதிநலமருளப்பெற்ற தூயர்குலத்தையும் குறிக்கும்.

தேம்பொழிலென்பதற்கு நந்தனமெனப் பொருள்கொண்டது, தே என்பது தெய்வப்பொதுவையும் பொழில் என்பது உய்யானத்தையும் குறிக்குமாகலின். தேவோத்தியானத்திற்கே நந்தனமென்னும் பெயருண்மையுணர்க. இஃது ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். மெலித்தல்விகாரமுற்றுளது. இதுவன்றி, வண்டு மது மணம் என்னும் பலபொருள்குறிக்கும் தேன் என்பது பொழில் என்னும் வருமொழியுடன் புணருமிடத்து, "தேன் மொழி மெய்வரின்" என்ற சூத்திரவிதிப்படி வேற்றுமைவழியில் 'தேம் பொழில்' என ஆயிற்றென்றும் கொள்ளலாம். கொண்டால் மேல்வரும் கற்பகக்கொடி என்ற குறிப்பினால் நந்தனவனத்தைக் குறிக்குமென்க.

கற்பகக்கொடி நந்தனவனத்திருத்தல் வெள்ளிடைவிலங்கலாம்.

தேம்பொழிற் கற்பகக்கொடி யென்றது கற்பகப் பூஞ்சோலைக்குக் கற்பகப்பூங்கொடிபோலே ஆழ்வார்திருக்குலத்துக்கு அழகை விளைத்தருள்பவரென்பதற்கு;—அல்லது நந்தனவனத்துத்தோன்றிய காமவல்லி அதன் மேலிவர்ந்து விளங்குவதுபோல ''அஞ்சுகுடிக்கொரு சந்ததியா யாழ்வார்கள் தஞ்செயலை விஞ்சிநிற்குந் தன்மை''யராய் எழுந்தருளியிருக்கும் பெருமையை விளக்குகைக்காக என்றுமாம். கற்பகக்கொடி என்றது அழகு வண்மை முதலிய உத்தமகுணங்களையுடைமையின்.

முகுந்தநந்தனனினமாந் தேம்பொழிற் கற்பகக்கொடி என்றது சுவர்க்க கற்பகம் போலாது இவர் அதிகாரிகளை யுண்டாக்கி அவர்க்கு நாற்பயனையும் பயக்குமவரென்னும் சீர்மையைத் தெரிவித்தற்கு.

திருவரங்கமன்னனுரை அரிசந்தனதருவாக உருவகப்படுத்தியது; கற்பகக்கொடிமருவிப் பெருமைபெறுதற்குரியதரு அதுவேயாதலின்.

அரங்கத்தரசெனுந்தருவிற் குலவலால் என்றது இருவருமான சேர்த்தியே, உய்யுமாறெண்ணி யுவந்துவந்தடைகின்றவர்களுக்குக் கார்யஞ்செய்யுமென்கைக்கு.

'விகுதியின்றியும் விளங்கு முயர்திணை' என்பவாகலின் அரசன் என்னுது அரசு எனச் சொல்லப்பட்டது.

தருவென்பது மரங்களுக்குப் பொதுப்பெயராயிருந்தாலும், கற்பக விருக்ஷத்துக்குச் சிறப்புப்பெயருமாகும்.

உருவளர் என்றது திருத்துழாய்மூலத்தில் திருவவதரித்தலால் வந்த புதுக்கணிப்பு.

உருவளர்பொறையென விசேடித்தது, பூமிப்பிராட்டியாரின்கூறாகத் திருவவதரித்த சத்தியபாமை முதலியவர்களைக்காட்டிலும் இவர் மேம்பாடுடையாரென்பதற்கு; பின்னும் உருவளர்பொறையென்றதற்குப் பொறுமையென்னுங் குணமே ஒரு திருவுருவுகொண் டுவந்துவந்து எழுந்தருளியிருப்பவர் என்றும் பொருள்கூறலாம்.

அருளினுற் பிறிதோர் ஒண்மலர்மடந்தைபோன்றுளாளை என்றது புருடகாரத்துக்குவேண்டிய தண்ணளி முதலிய குணங்களாற் சிறந்தவரென்கைக்கு.

பொறையென்பது அபராதங்களைத்தையும் பொறுத்தலை.

அருளென்றது பிறர்துயரங்கண்டு அதைத் தன்றுயரெனக்கொண்டு ஒருங்கே யொழித்தலை.

மருவளர் குழற்பூங்கோதையென்றதனால் பெரியபிராட்டியாரைக் காட்டினும் இவரிடத்தில் சுதந்திரனாகிய சர்வேச்சுரன் தனது சத்தியசங்கற்பத்தையும்விட்டு இவர் புருவநெறிப்பின்படி நடக்கிறவனாகச்செய்து காரியஞ் செய்விக்கைக்குரிய சிறந்த சாதனமுண்மை வெளியிடப்பட்டது.

· பெரியோர் கோதையென்னுந் திருநாமத்துக்குப் பெரியபெருமாளுக்குப் பாமாலைபாடிப் பூமாலை சூடிக் கொடுப்பவரென்று பொருள் கூறுவர். அடியார்களுக்கு மதுரமானவாக்கை யளித்தருள்பவர் என்றும் பொருள் கூறலாம். பூமியைப் பிளந்துகொண்டு திருவவதரித்ததனாலே வந்த திருநாமமென்றும் சொல்வர்.

இந்நூன் முழுவதுக்கும் திணை - பாடாண். துறை - கடவுள்வணக்கம்.

பாடாண் என்பது 'ஒளியு மாற்றலு மோம்பா வீகையும், அளியு மென்றிவை யாய்ந்துரைத்தன்று' என்றதனால் ஒருவருடைய கீர்த்தி வலி கொடை தண்ணளி முதலியவற்றை ஆராய்ந்துசொல்லுதலாம். இது, பாடுதல்வினையையும் பாடப்படுமவரையும் நோக்காது அவரது ஒழுகலாறாகிய திணையையுணர்த்தினமையின் இப்பெயர்பெற்றதென்பர். இது, வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக்காரணப்பெயர். திணை—ஒழுக்கம். மற்றது வெளிப்படை. இதற்கு வேறுவிதமாகவும் பொருள் கூறுப.

இந்நூலில் ஈற்றிலுள்ள இரண்டுசெய்யுளன்றி மற்றைய செய்யுட்களெல்லாம் (ஒவ்வோரடியிலும் ஆசிரியவுரிச்சீர் எவ்வேழுவந்த) எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள்.

இம்முதற்செய்யுள், "இழுமென்மொழியும் இனியபொருளும் - தழுவுவது வைதருப்பம்" என்றபடி மெல்லென்ற விழுமிய இனியபொருளும் உறுதிப்பொருளும் பொருந்தியிருத்தலில் வைதருப்பமென்னும் ரீதியாம்.

ரீதியெனினும் நெறியெனினும் ஒக்கும். அதாவது: சொற்களியைவதற்குக் காரணமாகிய சொற்போக்கு. இந்நெறி, வீரம் மானம் வென்றி முதலிய குணங்கள் உயிரைச் சிறப்பிப்பனபோலக் கவிகளைச் சிறப்பிப்பனவாகிய செறிவு முதலிய பத்துக்குணங்களையும் உயிராகக்கொண்டு விளங்குவதாம். அப்பத்துக்குணங்களாவன: 'செறிவே தெளிவே சமநிலை யின்பம், ஒழுகிசை யுதாரம் உய்த்தலில் பொருண்மை, காந்தம் வலியே சமாதி யென்றாங்,

காய்ந்த வீரைங் குணனும் உயிரா, வாய்ந்த வென்ப வைதருப் பம்மே' என்னும் இச்சூத்திரத்துக் கூறிய பத்துமாம். இச்சூத்திரம் வாமனர்மதம்பற்றி வந்தது.

பாமகர் குணத்தை மூன்றென்றும், போஜராஜன் இருபத்துநான்கென்றும் கூறுவர்.

அவற்றுள் இப்பாட்டு, சொற்கள் ஒன்றையொன்று தழுவி யிறுக்கமுடையதாகத் தொடுக்கப்பட்டிருத்தலிற் செறிவென்னுங் குணத்தின் பாற்படும். 'செறிவெனப்படுவது நெகிழிசையின்மை' என்பர் தண்டியாசிரியர். அநுப்பிராசமென்னும் வழியெதுகைபெற்றுவருவதனைச் செறிவென்பர் கௌடர். இதனை வடநூலார் சிலிட்டமென்பர்.

இச்செய்யுளுள் அமைந்த அணிகளாவன:—

முகுந்தநந்தனன், நந்தனனினம், புகல்புகுகிறேன்: இவற்றில் வழியெதுகையென்னுஞ் சொல்லணியுண்மை யுணர்க. இதனை அநுப்பிராசமென்ப.

அரசெனுந்தருவென்னுமிடத்துச் சொற்சித்திரமுண்மை உற்றுநோக்குக.

திருவளர் முகுந்த நந்தனனினமாந் தேம்பொழிற் கற்பகக்கொடியென்றது முகுந்தநந்தனனினத்தை நந்தனமாகவுருவகப்படுத்தி, அதற்கேற்ப நாய்ச்சியாரைக் கற்பகக்கொடியாக உருவகப்படுத்தியிருத்தலால் இஃதொரு வகையுருவகவணியாம். 'உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித், தொன்றென மாட்டினஃ துருவக மாகும்' என்று பொதுவாக இலக்கணங் கூறுவர் தண்டியாசிரியர். இவ்வுருவகத்தை வடநூலார் அச்சிலிட்டகேவல பரம்பரிதரூபகமென்பர்.

அரங்கத்தரசெனுந் தருவென்றது அரங்கத்தரசாகிய உபமேயத்தில் தருவாகிய உபமானத்தை அபேதமாக ஆரோபித்திருத்தலாலே அவையிலொற்றுமையுருவகவணியென்பர். வடநூலார் இதனை அநுபயாபேதரூபகாலங்காரமென்பர்.

உருவளர்பொறையென்றது நிரவயவமாகிய பொறையென்னுங் குணத்தில் அவயவமுடைமை அதிகமாகச் சொல்லப்பட்டிருத்தலில் மிகையொற்றுமையுருவகவணியென்பர். இதனை வடநூலார் அதிகாபேதரூபகாலங்காரமென்பர்.

அருளினால் பிறிதோ ரொண்மலர் மடந்தைபோன்றுளாளை யென்றது அருளுடைமை காரணமாகப் பெரியபிராட்டியாரது தன்மை நாய்ச்சியாரிடத்திற் சம்பாவிக்கப்படுதலால் ஏதுத்தற்குறிப்பணியாம். 'பெயர்பொருளல்பொருளெனவிரு பொருளினும், இயல்பில் வினைதிற னன்றியய லொன்று, தான்குறித் தேற்றுதல் தற்குறிப்பேற்றம்' என்பர் தண்டியாசிரியர். தற்குறிப்பு உத்பிரேக்ஷை அத்தியவசாயம் சம்பாவனை யென்பன ஒருபொருட் சொற்கள். இதனை வடநூலார் ஹேதூத்பிரேக்ஷாலங்காரமென்பர்.

இப்பாட்டு, எள்ளும் அரிசியும் போல வேறுபட்டியைந்துவிளங்கும் பல அணிகளையுடைமையிற் சேர்வையணியாம். சங்கீர்ணமென்றும் சொல்வர். 'மொழியப்பட்ட வணிபல தம்முட் - டழுவ வுரைப்பது சங்கிரணமே' யென்பர் தண்டியாசிரியர். இதனை வடநூலார் சம்சிருட்டி யலங்காரமென்பர்.

'திருவளர்' என்ற இம்முதற்பாட்டின் முதற்சீரில், 'பகர்செய்யுண் மங்கலஞ் சொல்லெழுத்துத் தானம் பாலுண்டி வருணநாட் கதியே யென்றாப், புகரில்கண மெனப்பத்தும் பிறங்கு கேள்விப் புலவர்புகழ் முதன்மொழிக்குப் புகல்வர்' எனப் பாட்டியலுடையார் கூறியபடி பொருந்தியிருக்கவேண்டிய பத்துவகைப்பொருத்தங்களும் பொருந்தியிருக்கின்றனவென்பதை எடுத்துக்காட்டி விளக்குதும்.

1. மங்கலப்பொருத்தம்: — அதாவது: பாட்டுடைத்தலைவன் இயற்பெயர்முதலெழுத்துக்குப் பொருந்திய மங்கலமொழியை வழுவுறாது முதற்சீரில் அமைத்தலாம்.

வழுவுறுதலாவது: 'முதற்பாட்டெடுப்பின் முதலீ ரசைச்சொல் - சொற்பான் மங்கலச் சொல்லொடு தோன்றி - னிற்பினுங் கொள்ளார் நெறியுணர்ந்தோரே' என்றபடி தேமா புளிமா என்னும் முதலீரசைச்சொற்களில் மங்கலமொழி வந்திருப்பினும் மங்கலமாகாமை போல்வனவாம்.

மங்கலமொழிகளாவன: 'திருப்பொன் பூமி புனன்மணி கடல்யா - றெழுத்தமு தெழின்மழை பசுங்கதிர் செஞ்சுடர் - நாள்சொல் ஞெண்டு நாட்டிய பரிமலை-கருட னருந்ததி மற்றிவை யென்ப-நிலைபெறு மங்கல நெறியிற் பனவே' எனப் பொய்கையார் கூறியனவும் பிறவுமாம்.

பாட்டுடைத்தலைவியாரியற்பெயராகிய கோதையென்பதன் முதலெழுத்தாகிய கோவென்பதற்குத் திருவென்னும் மங்கலமொழி பொருத்தமுடையதென்பதனை, 'திங்கள் திரு நீர் கொக் கோக்காகும்' என்ற வரையறுத்த பாட்டியலால் உணர்க. திருவளர் என்ற முதற்சீரில் வரலாகாவென விலக்கிய தேமா புளிமா இல்லாமை காண்க.

2. சொற்பொருத்தம். அதாவது: பொருத்தமாகக் கொண்ட மங்கல மொழியில் 'நாமவகையுளி சேர்தல் பொருளதின்மை நலமிலதாய்வைத்தல் பலபொருளாய்த்தோன்றல், ஆமினிய சொல்லீறு திரிதல் போலு மாதி மொழிக் காகா வாநந்தமாமே' என்றபடி வகையுளிசேர்தன்முதலிய ஆநந்தம் முதலெடுத்த மங்கலமொழியில் வாராதிருத்தல்.

வகையுளியாவது: 'கூம்பவும் கூம்பாதலரவும் கொண்டியற்றல், வாய்ந்த வகையுளியின் மாண்பு' என்றவாறு அவ்வச்சொன்முடிபையே சீர்முடிபாக் கித் தளைகொள்ளாது வேண்டியவிடத்துச் சீர்முடிவுசெய்து தளைகோடலாம். மற்றவை வெளிப்படை.

இம்முதற்சீரில் மேற்கூரிய *ஆநந்தம் ஒன்றும் இன்மையறிக.

3. எழுத்துப்பொருத்தம். அதாவது: 'ஆனவெழுத்தொன்பதே மைந்து மூன்றங் காகாவெட்டாறுநான் காதிச் சீர்க்கே' என்றபடி இம்முதற்சீரில் ஐந்தெழுத்தே அமைந்துள துணர்க.

4. தானப்பொருத்தம். அதாவது: 'ஊனமிலா அ ஆ வும் இ ஈ ஐ யும் உ ஊ வும் எ ஏ யும் ஒ ஓ தானும் - தானமிதை வகையாமந் தாதிதன்னில் தலைவன்பேர் முதலெழுத்துப் பாலனுதி - மேனிரையெண் ணிற்பால குமார ராசர் வேண்டிடும் வேண்டா விருத்த மரணந்தானே' என்றபடி பாட்டுடைத் தலைவனியற்பெயர் முதலெழுத்தைப் பாலனாகவைத்து எண்ணுங்கால் மங் கலமொழியின் முதலெழுத்து விருத்த மரணத் தானமாக வாராதிருத்தலாம். இப்பாட்டுடைத்தலைவியாரின் இயற்பெயர்முதலெழுத்தாகிய கோவுக்கும் மங்கலமொழியின் முதலெழுத்தாகிய 'தி' என்னும் எழுத்துக்கும் இராஜத் தானமாக இருத்தல் தெளிக.

5. பாற்பொருத்தம். அதாவது: 'அவ்வவ்வெழுத்தே யப்பாற் குரிய-மயங்கினும் வரையா ரலியெழுத் தொழித்தே' என்றபடி பாட்டுடைத்தலை வன் ஆண்பாலாயின் ஆண்பாற்குரிய எழுத்துக்களும், பெண்பாலாயிற் பெண்பாற்குரிய எழுத்துக்களும் மங்கலமொழியின் முதலெழுத்தாய் வருத லாம். 'உயிரீராறும் ஆணென மொழிப, உயிர்மெய் யெல்லாம் பெண்ணென மொழிப, உடம்பெழுத் தெல்லாம் நபுஞ்சக மாகும்' என்றபடி பாட்டுடைத் தலைவியாரின் பாலுக்கேற்ப முற்சீரின் முதலெழுத்தாகிய 'தி' என்பது பெண்பாலாதல் அறிக.

---

* ஆநந்தம் - பாக்குற்றங்களிலொன்று.

6. **உண்டிப்பொருத்தம்.** *அதாவது: 'உணவே யமுதம் விடமு மாகும்' என்றபடி அமுதம் விடமென்னும் இருவகையுண்டிகளில் அமுத வுண்டியமையப் பாடுதலாம். 'உயிர்க்குறிலுன்கொடு கசதநபமவ-மயக்கறு மமுத வெழுத்தாகு மென்ப' என்றபடி 'தி' என்னும் முதற்சீரின் முத லெழுத்து அமுதவுண்டியாதல் உணர்க.*

7. **வருணப்பொருத்தம்.** *அதாவது: 'மக்கட் சாதி நான்கிற்கும் வகுத்த-தத்தஞ் சாதி யெழுத்தே யவரவர்க்கு-வைத்துமுன் னெடுப்பி னது மாண் புடைத்தே', 'மயங்கினும் வரையார் பயன்பட வரினே' என்றபடி பாட் டுடைத்தலைவர் என்ன வருணத்தினரோ அவ்வருணத்துக்குரிய எழுத்துக் களில் ஒன்று மங்கலமொழியின் முதலெழுத்தாக இருத்தலாம். 'தநபம யரவெனச் சாற்றிய வாறும்-மனமகி ழரசர் வருண மாகும்' என்றபடி 'தி' என்பது அரசவருணத்துக்குரிய எழுத்தாகலின் ஸ்ரீரங்கராஜாது தேவியாரா யிருக்கிற தலைவியாருக்குப் பொருத்தமாயிருத்தல் காண்க. பிராமண குலோத்தமராகிய பெரியாழ்வாரது திருமகளாரென்று வைத்துக்கொண்டா லும், 'மயங்கினும் வரையார்' என்று விதந்தோதியிருத்தலிற் பொருந்து மென்க.*

8. **நாட்பொருத்தம்.** *அதாவது: "சிறந்தசீர்த் தலைவன் பிறந்தநா ளாயினும்-பெயர்நாளாயினும் இயல்புறவுணர்ந்தபின்-ஒன்றற்கேனும் இரண் டுக்குமேனும் - மூன்றிகழ் பொருத்த மொழிவது கடனே" என்றபடி பாட் டுடைத்தலைவன் பிறந்தநாளுக்காவது பெயர்நாளுக்காவது இவ்விரண்டுக்கு மாவது மங்கலமொழியின் முதலெழுத்துக் குரியநாள், இரண்டு நான்கு ஆறு எட்டு ஒன்பதாவது நாளாக இருத்தலாம். பாட்டுடைத்தலைவியார் திருவவ தரித்தருளிய நாள் திருப்பூரம். 'ககர வருக்க வகைநாள் விரிக்கில் - நான்கு மிரண்டு மூன்று மூன்றும் - ஓண மாதிரை புனர்பூசம் பூசம்' என்ற விதிப் படி பெயர்நாள் பூசம். மங்கலமொழியின் முதலெழுத்தாகிய 'தி' என்ப தற்கு, 'தகர வருக்கத் திரண்டேழ் மூன்றற்கு - வகைநாள் சோதி விசாகம் சதையம்' என்ற விதிப்படி விசாகமாகும். இது, பூரத்துக்கு ஆறுவதுநாளும் பூசத்துக்கு ஒன்பதாவதுநாளுமாகப் பொருந்தியிருக்கின்றது. 'இரண் டீரிரண்டா றெட்டொன் பானெனத் - திரண்டநாளேற் செல்வம் புகுதரும்' என்று இப்பொருத்தத்துக்குப் பயனும் கூறப்பட்டது பார்க்கத்தக்கது.*

9. **கதிப்பொருத்தம்.** *அதாவது: 'தேவர் மக்கள் நரகர் விலங்கென - மேவிய நான்கே யெழுத்தியல் கதியே' என்றும், 'மன்னுவர் தேவர் மக்கள் செய்யுளில் - மன்னு விலங்கொடு மக்கள் கதியே' என்றும் கூறியபடி நால்*

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
•8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
•	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது உரையுடன்	0	4	0
2.	கனாநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.*	பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.*	திருக்கலம்பகம் (ஷை)			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ...	0	2	0
•26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
28.*	சந்திராலோகம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0

32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	அகப்பொருள்விளக்கம்	1	4	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)	1	0	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	கடைவள்ளலார்காலம்	0	6	0
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	மதங்கசூளாமணி	1	0	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர்	0	6	0
	ஷை ஆங்கிலத்தில்	0	6	0
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு ...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0

மேலேகண்ட சங்கப்பதிப்பில்லாத புத்தகங்கள் வேண்டுவோர் வேறு புத்தகசாலைகளுக்குத் தாங்களே நேரில் எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 32 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப் பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.